# உதயன்

சுடர் 30 | கதிர் 152 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 13, திங்கட்கிழமை 27.04.2015


வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

## இலங்கை வருகிறார் இந்தியத் தளபதி

கொழும்பு, ஏப்.27
இந்திய இராணுவ தளபதி ஜெனரல் டல்பீர் சிங் ஐவர் கொண்ட குழுவுடன் இன்று இலங்கைக்கு வரவுள்ளார்.
இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் காண்படுகின்ற நட்பு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும், இராணுவ தளபதி ஜெனரல் கிருஷாந்த டி சில்வாவின் அழைப்பிற்கமையவுமே குறித்த இந்தியக் குழு இலங்கை வரவுள்ளது.
அந்தக் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் [illegible]ரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான இந்திய

பக்.02

## மஹிந்தவுடன் செயற்பட தயார்: மைத்திரி கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 27
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்திற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படத் தயார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
காலியில் இடம் பெற்ற சிறிலங்கா சுதந்திர கட்சிப் பிரதிநிதிகள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
"நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டே முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் கலந்துரையாடலுக்கும் சம்மதம் தெரிவித்தேன். மே தினப் பேரணியில் [illegible]லந்து கொள்ளுமாறு கட்சி செயலாளர்,

பக்.02

## கடவுச்சீட்டில் கட்டைவிரல் கட்டாயம்!

கொழும்பு, ஏப்.27
கடவுச்சீட்டில் அதன் உரிமையாளரின் பெருவிரல் அடையாளத்தை கட்டாயமாக்கும் சட்டமூலமொன்று இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதன்படி, புதிதாக கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்கள் [illegible]ற்றும் புதுப்பிப்பவர்கள் குடி[illegible]வு குடியகல்வுத் திணைக்களத்துக்கு தமது விரல் அடையாளத்தை வழங்க வேண்டும்.
சர்வதேச விமான சேவை பரிமாணங்களுக்கு அமைய இந்த சட்டம் கொண்டுவர

பக்.02

## எதிர்வரும் சனி வருகிறார் கெரி

### ஒருநாள் பயணத்தில் தமிழ்க் கூட்டமைப்பையும் சந்தித்துப் பேசுவார்



கொழும்பு, ஏப். 27
அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை வருகின்றார். அவர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
1972 ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்கச் செயலராக இருந்த, வில்லியம் பியேர்ஸ் ரோஜர் மேற்கொண்ட பயணத்துக்குப் பின்னர், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும், முதலாவது அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி ஆவார். இவர் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை ஒரு நாள் பயணமாகவே இலங்கைக்கு வரவுள்ளார்.

பக்.02

# '19' தோற்றால் நாடாளுமன்றம் உடன் கலைப்பு

### அரசு திட்டம். இன்று ஆரம்பிக்கின்றது விவாதம். நாளை வாக்கெடுப்பு.

கொழும்பு, ஏப்ரல் 27
கடந்த 23 ஆம் திகதியுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான கூட்டரசின் 100 நாள்கள் முடிவடைந்துள்ள நிலையில், மஹிந்த ஆதரவாளர்களின் எதிர்ப்பின் காரணமாக பிற்போடப்பட்டுவந்த அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்ட வரைவை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நாளை அதை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரச தரப்பு பெரும் எதிர்பார்ப்புடன் இருக்கிறது.
அதேவேளை, மேற்படி சட்டவரைவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்று திருத்தங்களை முன்வைக்கவுள்ளதுடன், தாம் முன்வைக்கும் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மாத்திரமே அதற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.
நாளைய இறுதிச் சந்தர்ப்பத்தில் 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றமுடியாவிட்டால், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்லும் திட்டத்தில் அரசு உள்ளது.
திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று காலை நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கவுள்ளார். இதையடுத்து, சட்டமூலம் மீதான விவாதம் நடைபெற்று நாளை மாலை இடம்பெறும் வாக்கெடுப்பில் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளது.

பக்.02



## குறையவில்லை சீற்றம்: நேற்றும் அதிர்ந்தது நிலம்

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில அதிர்வின் அதிர்ச்சியில் இருந்து நேபாளம் இன்னமும் சுதாரித்துக் கொள்ளாத நிலையில் அங்கு நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனால் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில் 2 ஆயிரத்து 500க்கும் அதிக மானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் பிந்திய தகவல்கள் கூறுகின்றன.

விரிவு பக்.13 இல்

## '19' நிறைவேறும் வரைக்கும் சத்தியாக்கிரகம்!

*சோபித தேரர் அறிவிப்பு*

கொழும்பு, ஏப்.27
19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் வரை சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தவுள்ளதாக நீதிக்கான சமூக அமைப்பின் தலைவர் மாதுலுவாவே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார். இன்று முற்பகல் 10 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
19ஆவது திருத்தம் தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே

பக்.02

## '19' க்கு ஆதரவு

*ஹெல உறுமய*

கொழும்பு, ஏப்.27
19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்குவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்துள்ளமையாலே ஜாதிக ஹெல உறுமய ஆதரவு தெரிவிக்கின்றது. 19 ஆவது திருத்தச்

பக்.02

## நாமலின் பாதுகாவலரால் மைத்திரிக்கு அச்சுறுத்தல்?

கொழும்பு, ஏப்.27
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலர் செயற்பட்டார் என்றும். இந்த சம்பவம் பொலிஸாரின் உயர் அதிகாரிகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது என்றும் தகவல் கள் வெளியாகியுள்ளன.
நேற்றுமுன்தினம் அம்பாந்தோட்டை அங்குனுகொல பெலஸ்ஸ பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டமொன்று நடைபெற்றது. இந்தக் கூட்டம் ஜனாதிபதி தலைமையிலேயே நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் துப்பாக்கியுடன், ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் சிவில் உடையில் சஞ்சரித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பக்.02

## குருநாகல் கூட்டத்தில் களமிறங்கும் மஹிந்த



கொழும்பு, ஏப்.27
மஹிந்தவை பிரதம வேட்பாளராக நியமிக்குமாறு கோரி குருநாகலில் இடம்பெறவுள்ள பேரணியில்

பக்.02

## '19'க்கு ஆதரவு கோரி ஐ.தே.க. போராட்டம்

கொழும்பு, ஏப்.27
அரசமைப்பின்19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்க வேண்டும் என வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சி இன்று நாடாளுமன்ற

பக்.02

# எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்வது சபாநாயகரின் பணியே

## தன்பணி அதுவல்ல என்கிறார் சுசில் பிரேம ஜயந்த



கொழும்பு, ஏப்.27
எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யும் பொறுப்பு தம்முடையதல்ல என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யும் பொறுப்பை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ என்னிடம் ஒப்படைத்தார். எனினும் எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்வது என்னுடைய பணியல்ல. நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை தெரிவு செய்யும் பணி கட்சியொன்றின் செயலாளரினால் செய்ய முடியாது. – என்று அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டதில்லை. அரசியலமைப்பின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்ய வேண்டியது சபாநாயகரின் பொறுப்பாகும். எதிர்க்கட்சிகளின் பல குழுக்கள் இருந்தால் பெரிய குழுவிற்கு தலைமைப் பதவியை வழங்குவது மரபாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## தந்தை செல்வாவின் 38 ஆவது நினைவு நிகழ்வுகள் நேற்று



யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.27
தமிழ்த் தேசியத்தின் தந்தை மூதறிஞர் சா.ஜே.வே. செல்வநாயகத்தின் 38 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் இந்த நிகழ்வுகள் தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றன.

முதலில் தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. முதலில் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசாவும் அதனைத் தொடர்ந்து செல்வநாயகத்தின் மகனான சந்திரகாசனும் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து பலரும் மலர்மாலை அணிவித்ததோடு பின்னர் மலரஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அஞ்சலி உரை இடம்பெற்றது. தந்தை செல்வா நினைவு அறங்காவலர்குழுச் செயலாளர் பேராசிரியர் ச.சத்தியசீலன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்வில் சட்டத்தரணி கனக மனோகரன் சிறப்புரை ஆற்றினார். நினைவுப் பேருரையை ச.லலீசன் நிகழ்த்தினார். நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் நிகழ்வுகள் வவுனியா நகரில் உள்ள தந்தை செல்வா சிலைக்கு முன்பாக நடைபெற்றன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டு தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செய்தனர்.(ற–4,135,402)

## விரைவில் அரசியல்வாதிகள் ஐவர் கைது?

கொழும்பு, ஏப்.27
மஹிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் முறைகேடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் எதிர்வரும் நாள்களில் பிரபல அரசியல்வாதிகள் ஐவர் கைது செய்யப்படவுள்ளனர் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்படவுள்ளவர்களுக்கான பட்டியலில் முன்னாள் அமைச்சர் உட்பட கடந்த அரசில் அங்கம் வகித்த பெண் அதிகாரிகளும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ‘19’ நிறைவேறும் வரைக்கும் சத்தியாக்கிரகம்!

மாதுலுவாவே தேரர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்வரை அவர் இந்தப் போராட்டத்தைமேற்கொள்ளவுள்ளார் என்று பிரஜைகள் சக்தியின் அழைப்பாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

ஆரம்பம் முதலே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுவதற்கான 19வது திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் சோபித தேரர் போராட்டங்களை நடத்தி வந்தார். இதன்அடிப்படையிலேயே மைத்திரி– ரணில், பாட்டலி, அனுர திஸாநாயக்க கூட்டமைப்பை அவர் உருவாக்கினார்.

இந்தநிலையில் தற்போது 19வது திருத்தத்தைநிறைவேற்றிக்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளமையை அடுத்தே தேரர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார். (ற)

# ‘19’ தோற்றால் நாடாளுமன்றம் உடன் கலைப்பு

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளித்தபடி மைத்திரி அரசின் 100 நாள்கள் முடிவடைவதற்கு முன்னதாக கடந்த 21 ஆம் திகதி 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்து, 22 ஆம் திகதி நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொண்டபோதும் மஹிந்த ஆதரவுத் தரப்பினர் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தி அந்தத் திட்டத்தை முறியடித்தனர். இதையடுத்து, சட்டமூலத்தை இன்று சமர்ப்பித்து நாளை நிறைவேற்றத் தீர்மானிக்கப்பட்டது.

19 இற்கு ஆதரவளிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகள் தீர்மானித்துள்ள நிலையில், ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளான தினேஷ் குணவர்தனவின் பொதுஜன ஐக்கிய முன்னணி, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி, விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் லங்கா சமசமாஜக் கட்சி, டியூ குணசேகரவின் கம்யூனிஸ்ட் கட்சி என்பன சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கும் நிலைப்பாட்டையே கொண்டுள்ளன.

இந்தநிலையில், 19 ஆவது திருத்தச் சட்டத்தை அரசு நிறைவேற்றினாலும், தேர்தல் முறைமை தொடர்பான 20 ஆவது திருத் தச் சட்டத்தை நிறைவேற்றியதன் பின்னரே தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்ற திருத்தத்தை சட்டமூலத்தில் உள்ளடக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தமது நிலைப்பாட்டைக் கடிதமொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

இந்தத் திருத்தத்தையும் உள் வாங்கிக் கொண்டே சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தமது கருத்தை எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று சபையில் முன்வைக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற–சி)

## எதிர்வரும் சனி வருகிறார் கெரி

அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்ளிட்டோரைச் சந்திக்கவுள்ளதுடன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் பேச்சு நடத்தவுள்ளார். அதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார். இறுதியில் கொழும்பில் ஊடகச் சந்திப்பு ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளார்.

அதேவேளை, கெரி கொழும்புடன் பயணத்தை நிறுத்தமாட்டார் என்றும், பௌத்த விகாரை ஒன்றுக்குச் சென்று வெசாக் பந்தலை திறந்து வைப்பார் என்றும் கொழும்பில் அமெரிக்க தூதரகத்துக்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற–5)

## குருநாகல் கூட்டத்தில் களமிறங்கும் மஹிந்த

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

அவர் இந்தப் பேரணியில் கலந்துகொள்ளவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித் துள்ளார் என மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நுகேகொட, இரத்தினபுரி மற் றும் கண்டியில் மஹிந்தவுக்கு ஆதரவாகப் பேரணிகள் இடம்பெற்றன. எனினும், அவற்றில் மக் களின் பங்களிப்புகள் குறைவாகக் காணப்பட்டதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியிருந்தன.

அவ்வாறான ஒரு நிலை காணப்படுவதனாலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறித்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற–சி)

## இலங்கை வருகிறார் இந்தியத் தளபதி

தூதுவர், பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, பாதுகாப்பு அமைச்சின் பிரதானிகள், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளை சந்திக்கவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு மத்திய நிலையங்கள், கண்டி, காலி, மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களுக்கும் அந்தக் குழு செல்லவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மஹிந்தவுடன் செயற்பட தயார்: மைத்திரி கூறுகின்றார்

முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார். அதற்கும் நான் சம்மதித்தேன். ஆனால் மஹிந்த அதனைப் புறக்கணித்தார்."– என்று அவர் கூறியுள்ளார்.

"ஒரு கட்சியின் தலைவர் என்ற வகையில் என்னால் வேறு எதனை செய்யமுடியும். எனவே கட்சியின் நலனுக்காக எதிர்வரும் நாள்களில் மஹிந்தவுடன் இணைந்து செயற்பட நான் விடும்புகிறேன். கட்சியின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே நான் செயற்படுகிறேன்."–, என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## நாமலின் பாதுகாவலரால் மைத்திரிக்கு அச்சுறுத்தல்?

குறித்த நபர் ஜனாதிபதிக்கு அருகாமையில் செல்வதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படும் சோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அந்தத் த்கவல்கள் கூறுகின்றன.

மெய்ப்பாதுகாவலரையும், நாமல் ராஜபக்ஸவையும் சோதனையிடாது உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் அனுமதித்துள் ளார் என்றும், இந்தச் சம்பவத்தை மூடி மறைக்க முயற்சிக் கப்பட்டு உள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோதனையிடாது நாமலின் மெய்ப்பாதுகாவல்ரை உள்ளே அழைத்தவர், நாமலின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாளராக முன்னர் கடமையாற்றிவர் என்றும் கூறப்படுகின் றது. (ற–5)

## ‘19’ க்கு ஆதரவு

சட்டத்தைத் தொடர்ந்து தேர்தல் முறை மாற்றம் உள்ளடக்கிய 20ஆம் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கடவுச்சீட்டில் கட்டைவிரல் கட்டாயம்!

நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள் ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ‘19’க்கு ஆதரவு கோரி ஐ.தே.க. போராட்டம்

வளாகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள் ளது.

நாடாளுமன்ற நுழைவாயி லுக்கு அருகாமையில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலதரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–சி)

# பனை, தென்னை வள சங்கங்களால் சம்பள உயர்வு நடைமுறைக்கு

## கூ. அ. உதவி ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.27
யாழ்.குடாநாட்டில் ஐம்பது வீத மான பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவு சங்கங்கள் பணியாளர்களுக்கான 30 வீத சம்பள உயர்ச்சியை நடைமுறைப் படுத்தியுள்ளதாக கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

பனை, தென்னை வள சங்கங்கள் கடந்த மூன்று மாதங்களுக்கான சம் பள நிலுவையுடன் இந்தப் புதிய சம்பளக் கொடுப்பனவை பணியா ளர்களுக்கு வழங்கி வருகின்றன.

அதேசமயம் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கங்கள் சில புதிய சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி யுள்ளதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

எனினும் எத்தனை சங்கங்கள் இந் தக் கொடுப்பனவை பணியாளர்க ளுக்கு நடைமுறைப்படுத்தின என்ப தற்கான விவரங்கள் முழுமையாகக் கிடைக்க வில்லை. இது தொடர்பில் உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் மேலும் தெரிவிக்கையில்:

"இந்த புதிய முப்பது வீத சம்பள அதிகரிப்புக்கு திணைக்களத்தின் அனுமதியை சங்கங்கள் பெறத் தேவையில்லை;

சுற்றறிக்கைக்கு அமைய சங்க இயக் குநர் சபைகள் முடி வெடுத்து பணி யாளர்களுக்கு இந்தக் கொடுப் பனவை நடைமுறைப்படுத்தமுடியும்.

தற்போதைய வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால் கூட்டுறவு பணியாளர் களுக்கான மாதக் கொடுப்பனவு போதாது.

தற்போதைய 30 வீத அதிகரிப்பு ஓரளவு அவர்களின் வாழ்க்கை சுமையை ஈடுசெய்யக் கூடிய வகை யில் அமையப் பெற்றுள்ளன.

சங்கங்கள் தமது செயற்பாடுகள் வியாபார நடவடிக்கைகளை அதி கரித்து, சங்க நிதி நிலைக்கு ஏற்ற வகை யில் இந்தக் கொடுப்பனவை பணி யாளர்களுக்கு வழங்க வேண்டும்.

இதற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் எந்த விதத்திலும் தடங்கலாக இருக்காது" –என்றும் கூறினார். (வ–17)

# கூட்டுறவாளரின் பாரம்பரிய மேதினப் பேரணி யாழ்.நகரில்

யாழ்ப்பாணம், ஏப். 27
தமிழர் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையிலேயே கூட்டுற வாளர்களின் மேதினப் பேரணி இம் முறையாழ்.நகரில்இடம்பெறும்என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பேரணி மற்றும் ஊர்திப் பவனி முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முத்திரைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும்.

பேரணியின் தொடக்கத்தில் தமிழர் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையில் தவில் மற்றும் நாதஸ்வர ஓசையுடன் காவடி மற்றும் கரகாட் டம் என்பனவற்றுடன் பேரணி ஆரம்பிக்கும்.

இந்தப் பேரணி வடக்கில் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் இருபது வரையிலான ஊர்திகளும் பங்கு பற்றவுள்ளன.

இந்த ஊர்திகள் யாவும் தமிழர் பாரம் பரியத்தை எடுத்துக் காட்டும் வகை யில் அமைக்கப்பட்டு வருவதாக ஏற்பட்டா ளர்கள் தெரிவித்தனர்.

மேதினத்துக்கு இன்னும் மூன்று நாள்கள் இருக்கும் நிலையில் கூட் டுறவாளர்களால் இந்த முறை பெரு மெடுப்பில் நடத்தப்படும் பேரணி, பொதுக்கூட்டம் போன்றவற்றுக் கான சகல நடவடிக்கைகளும் சூடு பிடித்துக் காணப்படுகின்றன.

இதேசமயம் கூட்டுறவாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே இந்த மேதினப் பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தை யாழ். நகரில் நடத்த முழுமையான ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இந்தப்பேரணி கிளிநொச்சியில் நடத்தப்படமாட் டாது. எனவே கூட்டுறவாளர்கள் அனைவரும் யாழ். நகரில் நடை பெறும் பேரணிக்கு அணி திரளு மாறு வடமாகாண கூட்டுறவு ஊழி யர் தொழிற் சங்கம் கேட்டுள்ளது.

கூட்டுறவாளர்களால் நடத் தப்படும் மேதினப் பேரணியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக சிவப்பு நிறத்திலான தொப்பிகள் வழங்கப்பட வுள்ளன.

வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் மூவா யிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவா ளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இதேவேளை பேரணியில் கலந்து கொள்வோருக்கு சிவப்பு நிறத்தி லான தொப்பிகளை வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டி ருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரி வித்தனர்.

இதேசமயம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல் லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்து பேரணியில் கலந்து கொள்ளும் கூட்டுற வாளர்க ளின் போக்கு வரத்துக்கும் வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. குறித்த பிர தேசங்களில் இருந்தும் பெரும் எண் ணிக்கையான கூட்டுறவாளர்கள் பேர ணியில் கலந்துகொள்ளவுள்ள னர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ–17)

# மன்னார் மருத்துவமனைகளின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அங்கு பயணம் செய்த வடக்கு சுகாதார அமைச்சர் உறுதியளிப்பு



மன்னார், ஏப்.27
மன்னார் முருங்கன் மற்றும் அடம் பன் ஆகிய இரு மருத்துவமனை களில் உள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்தார் வடமாகாண சுகா தார அமைச்சர் பா.சத்தியலிங்கம்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை குறித்த இரு மருத்துவ மனைகளுக் கும் அவர் நேரடிப் பயணம் மேற் கொண்டிருந்தார். இதன்போது முருங்கன் மருத்துவமனையை சுற்றிப்பார்வையிட்டதோடு, அங் குள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்ததோடு, உடனடியாக அவசர தேவைகளைப் பெற்றுத்தரு வதாக உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து அடம்பன் மருத்துவமனைக்குச் சென்ற அமைச் சர் அடம்பன் மருத்துவமனையின் மருத்துவர் கே.அரவிந்தனைச் சந் தித்து மருத்துவமனையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக கேட்ட றிந்தார்.

இதன்போது அடம்பன் மருத்துவ மனைக்கு வடமாகாண வீதி, போக்கு வரத்து அமைச்சர் பா.டெனீஸ்வர னும் சென்றிருந்தார். அதனைத் தொடர்ந்து மருத்துவமனை, மற் றும் நோயாளர் விடுதிகளைச் சுற்றிப் பார்த்து தேவையான உதவிகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

சுகாதார அமைச்சருடன் வட மாகாண சபை உறுப்பினர் பிரிமூஸ் சிறாய்வா, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் மன்னார் பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் ஆகி யோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ–56)



# கால நிலையால் கள் ஊற்று குறைவு

யாழ்ப்பாணம், ஏப். 27
தற்போதைய காலநிலை மாற்றத் தால் பனை மற்றும் தென்னை மரங் களில் கள் ஊற்று மிக மிக குறைந் திருப்பதாக சீவல் தொழிலாளர்கள் தெரிவித்தனர். தற்போதைய கடும் வறட்சியான வெப்பம் மற்றும் காற்றின் தாக்கத்தாலே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இதனால் தொழி லாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர். அதையடுத்து இந்த ஆண் டில் கள்ளுக்கான விலை நிர்ணயம் எதுவும் மேற்கொள்ளப்படாது என்று பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.

மரங்களில் கள்ளின் ஊற்று இந்த ஆண்டில் குறைந்தாலும் கூட பற் றாக்குறை ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ற–17)

# யாழ்.போதனாவில் தாதியர் பற்றாக்குறை தீர்க்கப்படும்

## ஓகஸ்டில் 100 பேர் முதற்கட்டமாக நியமனம்; சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதி

யாழ்ப்பாணம், ஏப்.27
யாழ்.போதனா வைத்தியசாலை யில் 1985 ஆம் ஆண்டிலிருந்து 407 பேராக இருந்த தாதியர் ஆளணி தற்போது மேலும் 200ஆல் அதி கரிக்கப்படவுள்ளது. ஓகஸ்ட் மாத மளவில் 100 தாதியர் நியமிக் கப்படவுள்ளனர் – இவ்வாறு உறுதி யளித்துள்ளார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் மஹிபால.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா, யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய பரிபாலகர் ரி.சந்திரமௌலீஸ்வரன், தாதியர் கல்லூரி விரிவுரையாளர், பி.டி.சிவ யோகம், போதனா வைத்தியசாலை யின் விடுதிகளின் பொறுப்பாளர் களான சுகுணதாசன், திருமதி எஸ்.பஞ்சலிங்கம், திருமதி எம்.ஞானச் சந்திரன் ஆகியோருக்கும் மருத்து வர் மஹிபால தலைமையிலான 5 பேர் கொண்ட குழுவினருக்கும் இடையே நடைபெற்ற கலந்துரை யாடலிலேயே இவ்வாறு உறுதி யளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலை தொடர்பாக மேலும் சில பிரச்சினைகளுக்கும் அங்கு தீர்வு எட்டப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் எங்குமில்லாத அளவுக்கு யாழ்.போதனா வைத் தியசாலையிலேயே தாதியர் பற் றாக் குறை நிலவுகின்றது. 1985 ஆம் ஆண்டு போதனாவின் தாதியர் ஆளணி 407 ஆக இருந்தது. அந்த நடைமுறையே 30 வருடங்களாக நடைமுறையில் உள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் தற் போது பல விடுதிகளும், பல சிகிச் சைப் பிரிவுகளும் பல சிகிச்சை முறைகளும் ஏற்படுத்தப்பட்டுள் ளன. அதனால் ஆயிரத்து 567 தாதி யர் தேவைப்படுகின்றனர். ஆயி னும் தற்போது சுமார் 450 தாதியர் களே போதனா வைத்தியசாலை யில் பணியிலுள்ளனர்.

இது தொடர்பில் சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம் மஹி பாலவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதையடுத்து அவர் தாதியருக்கான ஆளணியினரை 2 வாரங்களில் 200 ஆக அதிகரிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார். அத்துடன் வருடாந்தம் 100 பேர் வீதம் ஆள ணியை அதிகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தாதியர் பற்றாக்குறையை நீக்கு வதற்கு முதற்கட்டமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பயிற்சி முடித்து வெளியேறும் அணியிலிருந்து 100 தாதியர்களை யாழ்.போதனாவுக்கு நியமனம் செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தாதியர் பற்றாக் குறை காரணமாக ஒப்பந்த அடிப் படையில் மீளவும் தாதியராகப் பணியாற்றும் 7 பேருக்கு கொடுப் பனவு எதுவும் வழங்கப்படவில்லை. அதனை உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரப்பட்டது. பொதுச் சேவை ஆணைக்குழுவின் தாமதத்தால் அந்தப் பணி இன்னும் நிறைவடையவில்லை என்றும்– ஆனாலும் அதில் ஒருபகுதியை வழங்குவதாகவும் மஹிபால கூறி யுள்ளார்.

போதனாவில் தாதியர் விடுதியை நிர்மாணிக்க 111 மில்லியன் ரூபா பணம் கிடைத்துள்ளது. ஆனால் அதனைக் கட்டுவதற்கான கேள்வி கோரல் இதுவரை விடுக்கப்பட வில்லை. நிதி அதிகமாக உள்ளதால் அமைச்சரவை அங்கீகாரத்துடனேயே அதனை நிறைவேற்ற வேண்டும். 2 மாதங்களில் கட்ட வேலை தொடங்கி விடும் என்று கூறப்பட்டுள்ளது.

தாதியர் பற்றாக்குறை காரணமாக, தாதியர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து நியமனம் கிடைக்கும் வரை சுமார் 30 தாதியர் தொடர்ந்தும் தாதியப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் வழங்கப்பட்ட தொகையை வழங்கு மாறு கேட்கப்பட்டது. அதனை ஏற் றுக் கொண்ட மஹிபால, அவர் களுக்கு நியமனம் கிடைக்கும்வரை அவர்களுக்கு டிசெம்பர் வரைக்கும் அந்த நிதியை வழங்குவதாகக் கூறியுள்ளார்.

வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள தாதியர், பரா மெடிக்கல், மருந்தாளர் உள்ளிட்டவர்களுக்கு இடர்கொடுப்பனவு வழங்கப்படாது இருந்து வந்தது. அதனையும் அடுத் தடுத்த மாதத்திலிருந்து 3 ஆயிரம் ரூபாவாக வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார். அதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள் ளது.

அத்துடன் நாடளாவிய ரீதியில் பல் கலைக்கழகங்களில் தாதியர் பட்டம் பெற்ற 600 பேர் உள்ளனர். அவர் களுக்கு நியமனம் வழங்குவதன் மூலமாகவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம் என்று கோரப் பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட மஹிபால அமைச்சரவை அங்கீ காரத்துடன் அவர்களுக்கு நியம னம் வழங்கப்படும் என்று கூறியுள் ளார். ஆனால் அவர்களில் வடக்கில் 9 பேரே உள்ளனர் என்றும் கூறப்பட் டுள்ளது என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்துள்ளது. (ற–4)

# வீடுகளின் தேவை மேலும் அதிகரிப்பு

## பிரதேச செயலாளர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 27
யாழ்.மாவட்டத்தில் வீட்டுக்கான தேவைகள் அதிகளவில் இருப்பதாக பிரதேச செயலாளர்களால் முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அதிகார சபையினர் இந்த விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என்றும், பிரதேச செயலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் காலை, புனர்வாழ்வு அதிகார சபையினரால் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் பங்கேற்றிருந்தனர். யாழ்.மாவட்டத்தின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பது தொடர்பில் ஆராய்வதே கூட்டத்தின் நோக்கமாகும்.

அந்த வகையில் யாழ்.மாவட்டத்தின் முக்கிய தேவையாக வீட்டுத் தேவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மீள்குடியமர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்திய வீட்டுத் திட்டமும் முடிவுக்கு வந்துள்ள நிலையில் வீடுகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் தெரியப்படுத்தப்பட்டது.

மேலும் தொழில் வாய்ப்பு தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப் பட்டது. காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ள மக்களில் கடும் பாதிப்புக்களைச் சந்தித்தவர்களுக்கு, புனர் வாழ்வு அதிகார சபையின் உதவிக் கொடுப்பனவு இன்னமும் முழுமையாக வழங்கி முடிக்கப்படவில்லை என்ற விடயமும் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து, யாழ்ப்பாணத்தின் தேவைகள் தொடர்பிலான திட்டம் தயாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

### உரிய நேரத்தில் பசளை வழங்காததால் விசனம்

மாங்குளம், ஏப்.27
கனகராயன்குளம் கமநல சேவைப் பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் இன்னமும் பசளைகள் வழங்கப்படாததையிட்டு அப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கனகராயன்குளம் கமநல சேவைப் பிரிவுக்குஉட்பட்ட கனகராயன்குளம், சின்ன டம்பன், பெரியடம்பன், நயினாமடு, ஆயிலடி, புதுவிளாங்குளம், புதூர், பெரியகுளம், புளியங்குளம் போன்ற குளங்களுக்கு உட்பட்ட பிரதேசத்தில் தற்போது சிறுபோக பயிர் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளே இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது இப்பிரதேசங்களில் பசளைகள் இடப்பட்டால் தான் சிறுபோக காலத்தின்போது பயிர்களின் முழுப்பலனையும் எதிர்பார்க்க முடியும். இது தொடர்பாக கமநல உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தியும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. எனவே உரியவர்கள் இதனைக்கருத்திற்கொண்டுநடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)



### செவ்விளநீர் பற்றாக்குறை

தென்மராட்சி,ஏப்.27
கோடை வெயில் அகோரமாக உள்ளபோதிலும் தென்மராட்சி பிரதேச சந்தைகளில் செவ் விளநீர் விற்பனை செய்யப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தநிலையில் தமது தேவைக் காக செவ்விளநீர் வாங்குவ தற்கு யாழ்ப்பாணம் செல்வதாகவும் தென்மராட்சி பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

தென்னை மரங்களில் காணப் பட்ட செவ்விளநீர் கடந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தின் போது ஆலயங்களுக்கு வழங்கப்பட்டதால் பிரதே சத்தில் செவ்விளநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

### கொழும்புத்துறை பகுதியில் கால்நடை திருட்டு அதிகரிப்பு

கொழும்புத்துறை, ஏப்.27
கொழும்புத்துறைப் பகுதியில் அண்மைக் காலங்களில் கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வளர்ப்பு மிருகங்களான ஆடுகள், மாடுகள் என்பன மேய்ச்சல் தரவைகளிலும் வீடுகளிலும் காணாமற் போவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆள்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளிலுள்ள மேய்ச்சல் தரவைகள் பற்றைகளில் மேய்ந்து கொண்டிருக்கும் கால்நடை களில் திருட்டுக் கோஷ்டியினர் கண்ணாயிருந்து திருடிச் செல்கின்றனர்.

அண்மையில் ஒரு பசு மாட் டைக் காணாது உரிமையாளர் தேடிச் சென்றபோது, ஒரு பற்றை மறைவிடத்தில் கொம்பில் கயிறிட்டு கட்டப்பட்டிருந்த தாகவும் பின்னர் உரிமையாளர் பசுவைக் கூட்டிச் சென்ற தாகவும் தெரியவருகிறது. இதே போன்று கடந்த மாதங் களில் ஒருவரின் இருபசுமாடுகள் காணாமற்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-135)



போரால் மற்றும் விபத்துக்களால் முள்ளந்தண்டு வடம் பாதிக் கப்பட்ட வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான கொடுப் பனவுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா பம்பைமடு வைகறை இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.வடக்கு மாகாணசபை நிதியில் இருந்து வட மாகாணசபை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் உதவிப்பணக் கொடுப்பனவு வழங்கினார். (வ-9-402)

### உணவகத்தில் தாக்குதல்: மூவருக்கும் விளக்கமறியல்

தென்மராட்சி, ஏப்.27
சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள உணவு நிலையத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்திய மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் வெள்ளிக்கிழமை உத்தரவிடப் பட்டது.



கடந்த வியாழக்கிழமை இரவு பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள கடையினுள் புகுந்த நால்வர் அங்கிருந்த கண்ணாடி அலுமாரிகளை அடித்து நொறுக்கியதுடன் கடைக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த சோடாப் போத்தல்களையும் கடைக்குள் வீசியுள்ளனர். இதனால் கடை முழுவதும் கண்ணாடித்துகள்களாகக் காணப்பட்டன. தாக்குதல் சம்பவத்தில் கடைச்சிப்பந்திகள் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மல்லாவி வடக்கைச் சேர்ந்த சேவகன் ரஞ்சித் (வயது-37 ) தவராசா ஜெயராம் (வயது -34) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

கடைக்குள் தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்த வேளையில் தகவல் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு பெருமளவு பொலிஸார் வந்து தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தனர். பொலிஸாரைக் கண்டதும் ஒருவர் தப்பியோட, மற்ற மூவரையும் கைது செய்ததுடன் இவர்களால் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படும் வாள் ஒன்றையும் கைப்பற்றினர்.

குறித்த மூவரையும் சாவகச்சேரி பொலிஸார் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டது. (வ-9)

## தென்மராட்சியில் சுழல்காற்று பறந்தன கட்டடக் கூரைகள்





தென்மராட்சி ஏப்.27
தென்மராட்சி பிரதேசத்தில் ஒரு மணி நேரம் ஒன்றிணைந்து தாக்கிய இடி மின்னல் பெரு மழை சுழல் காற்றால் பல இடங்களில் பாதிப்பு ஏற்பட் டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை தொடர்ச்சியாக பயங்கர இடி முழக்கத்துடனும் கண்ணைப் பறிக்கும் மின்னல்களுடனும் பெருமழை பெய்தது. இந்தநிலையில் சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் ஏற்பட்ட திடீர் சுழல் காற்றால் இரு கட்டடங்களின் கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் உள்ள தோட்ட வெளியில் உருவான சுழல் காற்று அங்குள்ள அரைக்கும் ஆலையின் (மில்) கூரைத் தகடுகளையும் அங்குள்ள முத் துமாரி அம்பாள் ஆலயத்திற்கு அருகில் உள்ள குடியிருப்பாளர் ஒருவரின் வீட்டுக் கூரைத் தகடுகளையும் பிடுங்கி எறிந்தன. சுழல் காற்றால் தோட்ட வெளியில் காணப் பட்ட பயிர்கள் மழை மற்றும் சுழல் காற்றால் நிலத்தில் சாய்ந்தன.

இதேவேளை மின்னல் தாக்கியதில் சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை மின் இணைப்புகள் முற்றாக எரிந்துள்ளன.எனினும்பாடசாலைமுடிந்து மாணவர்கள் அனைவரும் வீடு சென்ற தால் பாதிப்பு ஏற்படவில்லை. (வ-9)

### திடீர் ஆசிரிய இடமாற்றம் அதிர்ச்சியில் பெற்றோர்

தென்மராட்சி,ஏப்.27
மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகும் வேளையில், கற்பித்த ஆசிரியர்களுக்கு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்து, அதிர்ச்சி வெளியிட்ட பெற்றோர் எதிர் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வியில் வீழ்ச்சி ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை மாகாண கல்வித் திணைக்களமே பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிய பெருமளவு ஆசிரியர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பட்டியல்கள் வெளியிட்டிருப்பது குறித்து, பெற்றோர் தமது அதிர்ச்சியையும், ஆதங்கத்தையும் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு மாணவனதும் கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்ட ஆசிரியர்கள் திடீரென இட மாற்றம் செய்யப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தின் கல்வியில் பெரும் வீழ்ச்சி நிலை ஏற்படலாம் என்றும் எதிர்வு கூறியுள்ளனர்.

ஆசிரியர்கள் திடீரென இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் மாணவர்களின் தொடர்கல்விக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நிலை காணப்படுவதுடன், கல்வி வளர்ச்சியில் மாணவரிடையே தளம்பல் நிலையும் காணப்படுகிறது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியர்களில் (கணவன்/மனைவி) ஒருவர் கடந்த வருடமும், மற்றவர் இந்த வருடமும் வெவ்வேறு வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டமை ஆசிரியர்களின் மனோ நிலையை மாற்றமடையச் செய்து, புதிய நிலையத்தில் சிறப்பாகச் செயற்பட முடியாமல் போவதால், அங்குள்ள மாணவர்களும் உரிய கல்வியைப் பெற முடியாது போகும் அபாயம் உள்ளதாகவும் கருத்துத் தெரிவித்தனர். (வ-9)



# ஜே.வி.பி. அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

ஜே.வி.பி. தனது அலுவலகம் ஒன்றை கிளிநொச்சியில் திறந்துள்ளது. நேற்றுமுன்தினம் அந்தச் கட்சியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க, மத்திய செயற்குழு உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் சின்னத்துரை ராஜேந்திரன் ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அதேவேளை, ஜே.வி.பி அண்மையில் யாழ்ப்பாணத்தில் தனது அலுவலகம் ஒன்றை திறந்து வைத்திருந்தது. வடக்கில் அந்தக் கட்சி தனது அரசியல் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகின்றது. முல்லைத்தீவு நந்திக்கடல் உட்பட சில பகுதிகளில் துப்புரவு செய்து சிரமதான பணிகளையும் மேற்கொண்டிருந்தது. (ற)

# எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பதிலும் இனவாதம்

## மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் குற்றச்சாட்டு

அம்பாறை,ஏப்.27

இந்த நாட்டில் நல்லாட்சி மலர்ந்துள்ள போதிலும், இனவாதம் ஒழிந்ததாகவோ ஒழிக்கப்பட்டதாகவோ இல்லை. தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக அமரக் கூடாது என்ற இனவாதம் மேலோங்கி நிற்பதே இதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

இவ்வாறு, ஸ்ரீலங்கா அரச சேவை மற்றும்மாகாண அரசசேவைதொழிற் சங்க சம்மேளனத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் கூறினார்.

ஸ்ரீலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற் சங்க சம்மேளன நிறைவேற்று சபைக் கூட்டம் கல்முனை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கலைக்கப்படலாமென்ற ஊகங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் எதிர்க்கட்சித்தலைவர் பதவி விவகாரம் இழுத்தடிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றது.

குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் பதவி கூட்டமைப்புக்கே வழங்கப்படவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சபாநாயகருக்கு அண்மையில் கடிதம் ஒன்றைக் கையளித்திருந்தார்.

இன்றைய நிலையில் நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் பிரகாரம் 14 நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டுள்ள கூட்டமைப்பே (தமிழரசுக் கட்சி) எதிர்க்கட்சியாவதற்குரிய தகுதிகளைக் கொண்டிருக்கின்றது என்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனாலும் தமிழர் ஒருவர் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவராக வந்து விடக்கூடாது என்ற இனவாதம் மேலோங்கி நிற்பதையே நாம் உணர முடிகின்றது.

இனத்துவேசப் பெருச்சாளிகள் இந்த விடயத்தில் மிக அக்கறையுடன் தான் செயற்படுகின்றன. இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு தடவை மட்டும் அதாவது 1977ஆம் ஆண்டு அண்ணன் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார்.

அதன் பின்னர் அப்படியொரு வாய்ப்புக்கான நியாயங்கள் இன்றுள்ள போதிலும் அது பேரினவாத, இனவாதநிலைமைகள் காரணமாக எட்டாக் கனியாகப் போகும் சந்தர்ப்பமேயுள்ளது கவலைதரும் விடயமாகும்.

இதேபோன்றே தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே பாடப்பட வேண்டும். தமிழில் பாடக்கூடாது என்றஇனவெறிக் கோஷமும் இன்று எழுப்பப்பட்டு வருகின்றது. இந்த நாட்டின் அரசமைப்பில் தேசிய கீதம் தமிழில் பாடுவதை உறுதி செய்துள்ள நிலையில் கூட, ஈனத்தனமாகத் தமிழில் பாடக்கூடாது என்ற பிற்போக்குவாத இனவெறிக் கருத்துக்களை சிலர் வெளியிட்டு வருகின்றனர்.

ஆனாலும் இன்றைய நல்லாட்சியின் அமைச்சர் ராஜித சேனாரத்ன போன்றவர்கள் தமிழிலேயே தமிழ்ப் பிரதேசங்களில் தேசிய கீதம்பாடப்படவேண்டுமென்பதைப் பகிரங்கமாக உறுதிப்படுத்திவருவது மன ஆறுதலைத் தருகின்றது.

கடந்த அரசின் அராஜக ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டின் சிறுபான்மையின மக்கள் பெரும் இன்னல்களையும் துயரங்களையும் அனுபவித்தனர். பௌத்த இனவாதிகள் ஊக்குவிக்கப்பட்டு தமிழ், முஸ் லிம் மக்களின் கலாசார மத விழுமியங்களுக்குக் கூட அச்சுறுத்தல்கள் மேலோங்கி நின்றன.

அந்தக் கொடூர ஆட்சிஒழிந்து நல்லாட்சி மலர்ந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இனவாதமும் பௌத்த பேரினவாதமும் தலைவிரித்தாட இடமளிக்கப்படக்கூடாது. நாட்டைச் சூறையாடி, கள்வர் குகையாக மாற்றிய துரோகிகளை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரலாமெனச் சிலர் இன்னும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர்.

வடமாகாண சபை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு இயங்குவதால் அநீதிகளுக்கு இடமளிக்கப்படக் கூடாது. குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களில் பதவி உயர்வு, நிரந்தர நியமனம் போன்றவை வழங்கப்படும் போது வெளிவாரியாக ஆள்களை இணைப்பதை நிறுத்தி கடமையிலிருந்து வரும் தகுதியானவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்-என்றார். (த-30)

# தேசியக் கொடி மாற்றம் இனவாதமே

**- அரியநேத்திரன் எம்.பி.**

மட்டக்களப்பு, ஏப்.27

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிறுபான்மை இனத்தவரை பிரதிபலிக்கும் செம்மஞ்சள் மற்றும்பச்சைநிறங்கள்அகற்றப்பட்ட தேசிய கொடியை முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் ஏந்தியிருந்தமையை இனவாதத்தின் உச்சக் கட்டமாகவே கருதுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பு சித்தாண்டியில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களுக்கிடையிலான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய கொடியை மாற்றியமைத்தல் நாட்டின் இறைமையைப் பாதிக்கும் செயலாகும். இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும் என அவர் கூறினார்.

இந்த நாட்டில் சிறுபான்மை இனமாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் வாழவில்லை. இந்த நாடு எங்கள் நாடு என்ற மமதையில் இதனையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மமதை இருக்கும் வரை எங்களுக்குரிய தீர்வுகளைப் பெறுவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய தேவை எமது மக்களுக்கு இருக்கின்றது.

நாங்களும் நாடாளுமன்றில் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம் நாம் இரவு முழுவதும் ஆக்கிரமித்து போராட்டம் செய்யவில்லை அதற்கான அனுமதியை நாடாளுமன்றம் எங்களுக்குத் தரவில்லை. - என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ந.சிவனடியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண விவசாயத்துறை அமைச்சர் கி.துரைராஜசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற)

# 100 நாள்களுக்குள் கட்டுநாயக்கவில் கைதான தமிழரை விடுவிக்க வேண்டும்

## பொன்.செல்வராசா எம்.பி. சட்டம் ஒழுங்கு அமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.27

புதிய அரசு அமைக்கப்பட்டு 100 நாள்களுக்குள் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வந்த 16 மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றும் சட்டத்துக்கும் சமாதானத்துக்குமான அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு அவசரக் கடிதமென்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

நாட்டில் புதிய அரசு அமைக்கப்பட்டு 23ஆம் திகதியுடன் 100ஆவது நாளை பூர்த்தி செய்துள்ள நிலையில், இந்த 100 நாள்களுக்குள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மட்டக்களப்பைச் சேர்ந்த 16 இளைஞர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பூசா, மகசின், வெலிக்கடை சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு அவர்கள் மீதான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இளம் குடும்பஸ்தர்களான இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கெனவே சரணடைந்த பல இளைஞர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவ்வாறான நிலையில் மீண்டும் கைதுகள் நடைபெறுவது, இந்த நாட்டில் தமிழ் இளைஞர்கள் சந்தோசமாக வாழமுடியாது என்பதை உலகுக்கு வெளிக்காட்டியுள்ளது. - என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் ஜனநாயக வழிக்கு வந்து, திருமணம் செய்து குடும்ப வாழ்வில் ஈடுபட்டவர்கள். இவர்கள் உள்நாட்டில் வேலைவாய்ப்பைப் பெறமுடியாத நிலை காரணமாக, மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று உழைத்துவிட்டு மீண்டும் தமது பிள்ளைகள் மனைவியைப் பார்க்க வரும் போது, இவ்வாறான நிர்க்கதி நிலைக்குள்ளாக்கப்படுகின்றார்கள். கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர், தாம் இந்த நாட்டில் சமாதானமாக வாழவேண்டும், பயபீதி இல்லாமல் வாழவேண்டும் என்பதற்காக நாங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்ததுடன், அவரின் வெற்றிக்காகவும் பாடுபட்டோம். எங்களுக்குப் புதிய அரசு செய்யும் கைமாறு இதுதானா என்று எம்மிடம் கேட்கின்றார்கள்.

சட்டத்துக்கும் சமாதானத்துக்குமான அமைச்சராகிய நீங்கள், இது தொடர்பில் கவனம் எடுத்து கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும். அத்துடன் இது போன்ற கைதுகள் இனிவரும் காலங்களிலும் தொடராமல் இருக்க நடவடிக்கையெடுக்கவேண்டும். - என்று அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# அமைச்சரவையை கலைத்து பிரதமரைத் தெரிவு செய்க

## உலமா கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.27

அமைச்சரவையைக்கலைத்துப்புதிய பிரதமரை நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் தெரிவு செய்ய வேண்டும் என்று உலமாக் கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்காது அமைச்சரவையைக் கலைத்து பிரதமரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்ய வேண்டும். அதன்மூலம் 19 ஆவது திருத்தத்தை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

தற்போதுள்ள நிலையில் நாடாளுமன்றைக் கலைத்துத் தேர்தல் நடத்துவதன் மூலம் நிலையான ஆட்சியைக் கொண்டுவருவது சாத்தியமில்லை- என்றும் அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.(ற-10)

# நூறு நாள் திட்டத்தில் 45 வாக்குறுதிகள் பூர்த்தி: 51 நிறைவடையும் நிலையில்

## ஜனாதிபதியின் ஆலோசகர் திலக் ரணவிராஜா தெரிவிப்பு

கொழும்பு, ஏப் 27

மைத்திரி அரசு ஆட்சிக்கு வந்தபோது முன்மொழிந்த வாக்குறுதிகளில் 45 முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 51 வாக்குறுதிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன. மேலும் 7 வாக்குறுதிகள் செயற்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதியின் ஆலோசகர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

அரசு உறுதியளித்த 100 நாள்கள் நிறை வடைந்துள்ள நிலையில் அதன் முன்னேற்றம் தொடர்பில் ஊடகவியலாளருக்கு தெளிவுபடுத்தும் சந்திப்பு ஒன்று அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நூறுநாள்கள் திட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்ட செயற்றிட்டங்களில் அதிகமானவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த நூறு நாள்கள் திட்டத்தின் கீழ் அரசு பொருளாதாரம், அரசியல், அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் என பல முக்கியமான விடயங்களில் ஆரம்ப அடிகளை எடுத்து வைத்துள்ளது.

குறிப்பாக அரச உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வு, முதியோர் வைப்புக்கான வட்டி வீதம் அதிகரிப்பு, கர்ப்பிணிகளின் போஷாக்கை மேம்படுத்துவதற்குக் கொடுப்பனவு வழங்குதல் என பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வுக்காக இவ்வருடம் மட்டும் 89 ஆயிரத்து 700 மில்லியன் ரூபா செலவாகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது -என்றார். (த-4)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எடுத்த காரியம் கைகூடும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர்.

**இடபம்:** கூட்டாளிகளிடையே ஒற்றுமை பலம் ஏற்படும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும், முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். உடன் இருப்போரால் பிரச்சினைகள் வரலாம்.

**மிதுனம்:** எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். உங்களுடைய கோரிக்கைகளை மேலதிகாரிகள் ஏற்று நடப்பார்கள்.

**கடகம்:** சில புதிய வியாபார யுக்திகளை நீங்கள் பயன்படுத்த வேண்டி வரும். தீவிர முயற்சிகளினாலேயே அரசு சார்ந்த காரியங்கள் நடைபெறும். பெண்களுக்கு வீட்டில் உள்ளவர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

**சிங்கம்:** தொழில் ஸ்தானத்தைப் பார்க்கும் கேதுவால் முயற்சிகளில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர்.

**கன்னி:** ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டு பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவார்கள். கணவன்–மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.

**துலாம்:** சளி மற்றும் மார்புத்தொல்லை வரலாம் கவனம் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள். வேலை இல்லாமல் தவித்தவர்களுக்கு தகுந்த சம்பளத்துடன் சிறந்த வேலை கிடைக்கும். புதிய தொழிலால் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** எதிரிகளால் இருந்து வந்த தொந்தரவு நீங்கும். தீவிர முயற்சியின் பேரிலேயே அரசிடம் இருந்துதான் கோரிக்கைகள் நிறைவேறும். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்பு கிடைக்கும். பாராட்டுகளும் கிடைக்கும்.

**மகரம்:** கலைத்துறையில் உள்ளவர்களுக்கு சீரான வாய்ப்புகள் வந்தாலும், அவ்வப்போது குழப்பமான மனநிலையும் இருக்கும். முன்யோசனையுடன் திட்டமிடல் அவசியம்.

**கும்பம்:** இறையருளும் தெய்வ நம்பிக்கையும் கூடும். உங்கள் திறமையில் இருந்து வந்த பின்தங்கிய நிலை இனி மாறும். வெப்பம் சம்பந்தப்பட்ட உடல் உபாதைகள் குறையும். தாயாருடன் இருந்து வந்த கசப்புகள் மறையும்.

**மீனம்:** தாய்வழி உறவினர்களுடன் இருந்து வந்த பிணக்கு நிலை மறைந்து, உறவு பிரகாசிக்கும். உறவினர்களுடன் கருத்து பரிமாற்றங்கள் செய்யும் போது மிகுந்த எச்சரிக்கை தேவை.



# ரிலாக்ஸா வாசியுங்க...

*இதுக்கெல்லாம் யாராச்சும் பதில் சொல்லுங்க....?*

1.யாரையாவது பிடிக்கப்போகும்போது வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு பொலிஸ் போகிறதே. அதற்குப் பின் கதவை சரி செய்து கொடுப்பாங்களா....?

2.டெலிபோன்ல நம்பர்கள் மேலிருந்து கீழ இருக்கு. கல்குலேட்டர்ல மட்டும் ஏன் கீழிருந்து மேல இருக்கு...?

3. அவனுக்காக நான் நாயா உழைச்சேன்னு எல்லாரும் சொல்றாங்களே. நாய் என்றைக்கு வேலை செய்திருக்கு. ஒரு ஓரமா படுத்து வால் ஆட்டிட்டு இருக்கும்... இல்லையா...?

4. மூக்கிலையும் வாயிலையும் ஒரே நேரத்தில் மூச்சு விட முடியுமா...?

# துவைக்கும் ரோபோ

வோர்ஷிங் மெசினில் துணி துவைப்பதற்குக்கூட நேரமில்லாதவர்களுக்கு உதவுவதற்காக ரோபோவை வடிவமைத்துள்ளனர். அதன் பெயர் வில்லோ கேரேஜ் பி.ஆர்.2.

அழுக்குத் துணிகளைக் கண்டுபிடித்து துவைத்து, உலர்த்தி, அயர்ன் செய்து மடித்து வைத்துவிடும்.

இதனை அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் வடிவமைத்துள்ளனர்.





# அசத்தும் பூக்கள்

பூக்கள் வானவில்லை போன்று பலவேறுபட்ட வண்ணங்களிலும் வடிவங்களிலும் பூத்து குலுங்குகின்றன. அவ்வாறு உலகில் பூக்கும் வித்தியாசமான பூக்களில், லாப்பிங் பபீள் பீ பற்றிப் பார்ப்போம்.

**லாப்பிங் பபீள் பீ**

பூக்கள் மீது அமர்ந்திருக்கும் வண்டு போன்றே தோன்றும் இந்த பூவின் பெயர் 'லாப்பிங் பபீள் பீ'. இந்த வகை பூக்களை ஐரோப்பா, வட ஆபிரிக்கா, கனாரி தீவு, துருக்குமேனிஸ்தான் போன்ற பகுதிகளில் காணலாம்.

லாப்பிங் பபீள் பீ பூக்களை ஆராய்ந்து செயற்கை முறையில் உருவாக்கி உள்ளனர். இந்த வகை வண்டு பூக்களை அறிவியலாளர்கள் இனப்பெருக்க பூக்கள் என்று வர்ணிக்கின்றனர். ஏனெனில் தாவரங்களில் மகரந்த சேர்க்கை நடைபெறுவதற்காகவே இவை இதுபோன்ற தோற்றத்துக்கு மாறுபடுவதாகவும், வண்டு பூக்கள் பூக்கும் இடங்களின் கீழ்ப் பகுதியில் இந்த வகை செடிகளை காண முடியும் என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வண்டு பூக்களை அடிப்படையாகக் கொண்டு உலகின் பல மூலைகளிலும் பல்வேறு வகையான உயிர்காக்கும் மருந்துகளுக்கான ஆராய்ச்சிகள் நடைபெற்ற வண்ணமாகவே உள்ளன.



ஆண்களிடம்
வருமானத்தைக்
கேட்காதீர்கள்
ஏனெனில், அதை
அவர்கள் அவர்களுக்கென்று
வைத்துக்கொண்டதே
கிடையாது.

I like

# அசத்திய மானாட மயிலாட



கலா மாஸ்டர் இயக்கி, கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் மானாட மயிலாட நிகழ்ச்சி கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. பல முன்னணி நடிகர்கள் நடுவர்களாக வீற்றிருக்க, கலா மாஸ்டர் இயக்கத்தில் மானாட மயிலாட 10 சீசன் தற்போது கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வருகிறது.

நடன நிகழ்ச்சிகளில் 'ஏம்ஸ் ரூம் இல்யூசன்' என்ற முறை உள்ளது. அதாவது, விதவிதமான மேடைகளை அமைப்பது, ஒரே மேடையில் ஒருவரே பல தோற்றங்களில் தோன்றி மாயத் தோற்றத்தை உருவாக்குவது. அந்த வகையில், மானாட மயிலாடவில் அத்தகைய எபிசோட் ஒன்று படமாக்கப்பட்டது. உலகத்திலேயே இதுவரை இல்லாத அளவுக்கு மிக நீண்ட நேரம் 'ஏம்ஸ் ரூம் இல்யூசன்' மானாட மயிலாட நிகழ்ச்சியில் நடத்தப்பட்டது.

ஏ.வி.எம். ஸ்ரூடியோவில் நடந்த அந்தப் படப்பிடிப்பை கின்னஸ் பிரதிநிதிகள் நேரில் பார்த்தனர். பின்னர் இந்த நிகழ்ச்சி பற்றிய விவரங்கள் கின்னஸ் புத்தகத்தில் சேர்க்கப்பட்டது.

கின்னஸ் சான்றிதழை கின்னஸ் அதிகாரி லூசியா சினிகேலியினியி லண்டனில் இருந்து வந்து, கலா மாஸ்டரிடம் நேரில் வழங்கினார். உலக சாதனை புரிந்த அந்த எபிசோட் கலைஞர் தொலைக்காட்சியில் எதிர் வரும் மே 3ம் திகதி இரவு 7.30 மணிக்கு ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இந்தச் சாதனைக்கான விருதை தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோ ஒன்று வாங்குவது இது தான் முதல்முறை என்பது குறிப்பிடத் தக்கது.




உ


அம்பிகை ஜுவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்.
Ambigai Jewellers
Manufacturers of Gold Jewels
34A, Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 2538
34A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 2538

கந்தன் ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
மலிவான விலையில் பலசரக்குப்பொருள்களை
மொத்தமாகவும்சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
உரிமையாளர்: திருமுருகதாஸ்
தொடர்பு: 021 205 1951




# பெரியவிளான் - வடசேரி விக்கினேஸ்வர ஆலயம் சப்பற வெள்ளோட்ட விழா 27.04.2015



அமைப்பு : ரவிவர்மன்

இந்துமா சமுத்திரத்தில் முத்தென விளங்கும் ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் வடபால் பெரியவிளான் வடசேரியில் ஆலமர நிழலில் கோயில்கொண்டு அருள் வழுங்கும் விக்கினேஸ்வரப் பெருமானுக்கு நிகழும் சித்திரைத் திங்கள் 14 ஆம் நாள் (27.04.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட சப்பற வெள்ளோட்டம் நடைபெறும்.

இந்த சப்பற நிர்மாண வேலைகளைச்செய்த உருத்திரசிங்கம் ரவிவர்மன் அவர்களுக்கு விநாயகர் அருள்பாலிப்பாராக . இந்த சிற்பவேலைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், காளியம்மன் சிற்பாலய குழுவினர்களுக்கும் அதன் உரிமையாளர் உருத்திரசிங்கம் ரவிவர்மன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**"சிற்பக்கலையரசன்" என்ற பட்டம்**
**ரவிவர்மனுக்கு வழங்கப்படும்**

**உ. ரவிவர்மன்**
காளிகோயிலடி, மாதனை, பருத்தித்துறை.
தொ.பே.இல. 011 947 673 36670

சப்பற திருப்பணி வேலை
சிவக்கொழுந்து குடும்பம்.
(பெரியவிளான்)

சகடையும்,
கட்டட திருப்பணி வேலைகளும்
9ஆம் திருவிழா உபயகாரர்.


யெறினா மரத் தொழிற்சாலை
வீட்டுத் தளபாடங்கள், பாடசாலைத் தளபாடங்கள், கோயில் மரவேலைகள், கூரை வேலைகள் மற்றும் சிற்ப வேலையுடன் கூடிய வளைவு, கதவு, நிலை, யன்னல்கள் என்பன நீங்கள் விரும்பும் நவீன மயமாக்கலின் வகையிலும் தரமான முறையிலும், நம்பிக்கையான உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: S.M.Rupan
T.P. 077 800 9208

WWW. VANAVIL STUDIO.COM

## சைக்கிள் ஓட்டப் போட்டியில் விபத்து

தென்மராட்சி, ஏப்.27

சைக்கிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு, வேகமாகச் சென்ற இளைஞன் வழிகாட் டியாகச் சென்று கொண்டிருந்த படி–பட்டா வாகனத்துடன் மோதி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மீசாலை புத்தூர் சந்தி–வேம்பிராய் வீதியில் இடம்பெற்றது. கொடிகாமம் பொலிஸாரின் புத்தாண்டு விழா நேற்று நடை பெற்ற போது, காலையில் இடம் பெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில்கலந்து கொண்ட இளைஞனேகாயமடைந்தவராவார். கொடிகாமம் கண்டி வீதியைச் சேர்ந்த மகேந்திரன் மயூரன் (வயது–19) என்ற, இளைஞனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ–9)

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலராக கனகேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஏப். 27

வடமராட்சி கிழக்கு – மருதங்கேணி – பிரதேச செயலாளராக, க.கனகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இது வரையில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ம.திருலிங்கநாதனுக்கு புதிய நிலையம் வழங்குவது தொடர்பில், அமைச்சின் கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளராக ம.திருலிங்கநாதன் கடமையாற்றி வருகின்றார். இந்த நிலையில், அவரது இடத்துக்கு தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன், பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனக் கடிதம், கடந்த வியாழக்கிழமை, யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, அமைச்சு செயலகவட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும், இந்த இடமாற்றம் யாழ்.மாவட்ட அரச அதிபரால் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும், பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ம.திருலிங்கநாதனுக்கு, இடமாற்றத்தின் பிரகாரம் புதிய நிலையம் தொடர்பில் அமைச்சின் செயலாளரின் கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. (வ–5)

## அரச இலக்கிய விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

கரணவாய், ஏப்.27

அரச இலக்கிய விருது வழங்கலுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து கலாசார மற்றும் கலைகள் அலுவல்கள் அமைச்சு, கலாசார திணைக்களம் அரச இலக்கிய குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆண்டு தோறும் இந்த அரச இலக்கிய விருது வழங்கும் விழா நடத்தப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் இந்த வருடத்துக்கான விருது வழங்குவதற்கு பொருத்தமான ஆக்கங்களை எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளர், அரச இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செந்சிறிபாய பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்ப வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சுய நாவல், சுய சிறுகதை சுய கவிதைப்படைப்பு, சுய இளையோர் இலக்கியப் படைப்பு, சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல் புனைகதை சிறுவர் இலக்கியப்படைப்பு, சுய புலமைத்துவ மற்றும் ஆய்வு சார் படைப்பு மொழிபெயர்ப்பு நாவல், மொழி பெயர்ப்பு சிறுகதைத் தொகுப்பு, மொழி பெயர்ப்பு கவிதைப் படைப்பு, மொழிபெயர்ப்பு நாடகம் மற்றும் நானாவித விடய நூல்கள் என்பவற்றின் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–108)

## கல்விக் கண்காட்சி

நெல்லியடி, ஏப்.27

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடாத்தும் ஆரம்பப் பிரிவினின் கல்விக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9மணி முதல் பி.ப. 3மணிவரை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக யுனிசெவ் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (வ–422)


### கண்ணீர் அஞ்சலி



உதயம்
19.08.1958

மறைவு
21.04.2015

திருமதி
**மஞ்சுளா கிருபானந்தன்**

அவர்களுடைய மறைவின் காரணமாக அவருடைய குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்பிகா பான்சி எம்போரியம், கொழும்பு.
உதயகுமார், ஆனந்தன், சிவலிங்கம்.

அம்பிகாபதி, யாழ்ப்பாணம்.
சிவகுமார், மூர்த்தி.

(59238)(4.3.7)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத்திவச அழைப்பும்

அமரர் **நல்லம்மா சுப்பிரமணியம்**



மலர்வு 17.04.1939

உதிர்வு 08.05.2014

கடந்த வருடம் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி நல்லம்மா சுப்பிரமணியம் அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசம் இன்று (27.04.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோப்பு வீதி, மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(4115)(4.3.6)

குடும்பத்தினர்.

### நன்றி நவிலல்



காரைநகர் (ஈழத்துச் சிதம்பரம்) சிவன் கோயிலடியைச் சேர்ந்த
கலாநிதி **க.வைத்தீசுவரக் குருக்கள்**
25.04.2015 சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றையதினம் மாலை கந்தரோடையில் நடைபெற்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவுச் செய்தியைக்கேட்டுப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி வாயிலாக அனுதாபங்கள் தெரிவித்த அன்பர்களுக்கும், இரங்கல் பிரசுரங்கள் வெளியிட்ட - மலர் வளையங்கள் சாத்திய அன்பர்கள் - அமைப்புக்களுக்கும், நிகழ்வில் இரங்கல் உரைகள் ஆற்றிய பெருமக்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் செய்த சகலருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
(சி.15654)(45.3.)


## விசேட வகுப்புகளால் மாணவரின் சித்தி வீதம் அதிகரிப்பு

பளை, ஏப். 27

பளை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தமது பிரதேசத்தில் வதியும் வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் மற்றும் கணித பாடத்தில் சித்தியடைய முடியாத மாணவர்கள் ஆகியோரை இணைத்து விசேட கணித பாட பயிற்சி உள்ளீட்டல் வகுப்புக்களை வருடம் தோறும் நடத்தி வரு கின்றது.

இந்த வகையில் 2014 இல் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 95 வீதமான மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சேவைகள் தொடர்ந்தும் நடைபெறும் என்றும் தேவைப்பாடு உள்ள மாணவர்கள் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (வ–122)


### 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **சிவராசா சிவதரன் (லக்கி)**

மலர்வு
13.03.1978

உதிர்வு
29.01.2015

கண்ணீருக்குள் நின் குடும்பம் ஆழ்ந்திருக்க
எண்ணமதில் உந்தன் இழப்பால் கதறியழ
கண்களும் இமைக்க மறந்ததையா – உந்தன்
பதுமையான பேச்சும் இரக்கமுள்ள குணமும்
காணாது தவியாய் தவிக்கின்றோம்
தொலைபேசியில் உந்தன் செய்தி வந்த கணம் முதல்!
உன் வாய்மொழி நின்றாலும்
மூடியவிழ் மலர்ந்திட நின்றாலும் லக்கியே
என்றும் எம் நினைவில் வாழ்ந்திடுவாய்

நாளை (28.04.2015) செவ்வாய்க்கிழமை அன்னாரின் 90 ஆம் நாள் நினைவை ஒட்டி ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசனமும் எமது இல்லத்தில் நடைபெறும்.

தரைமன் கலட்டி,
தெல்லிப்பழை.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

(59200)(4.3.6)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்லையா கனகரெத்தினம்**
(முன்னாள் உரிமையாளர்- விக்கினேஸ்வரர் ரான்ஸ் போட்)

திதி: 27.04.2015



பிறப்பு
10.05.1940

இறப்பு
08.05.2014

எங்கள் அன்பிற்கினிய தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும்
ஆழ்மனதில் பதிந்துள்ளீர்கள்
அணையாத தீபமாய் என்றும்
எம் இதயங்களில் வாழ
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.14, முதலாம் சப்பல் லேன்,
கொழும்பு-06
(59233) (4.6.3)

குடும்பத்தினர்.


## விபுலாநந்தர் வீதிப் புனரமைப்பு ஆரம்பம்

கொழும்புத்துறை, ஏப்.27

கொழும்புத்துறை விபுலாநந்தர் வீதியின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நீண்டகாலமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது மிகவும் சேதமடைந்திருந்த இந்த வீதியை யாழ். மாநகர சபை புனரமைத்து வருகிறது. இந்த வீதியில் கொழும்புத்துறை உப அஞ்சல் அலுவலகம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (வ–135)

# வசதியற்ற குடும்பங்களுக்கு இலவச வீடுகள் கையளிப்பு



காத்தான்குடி, ஏப் 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு வசதியில்லாத குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. சவூதி அரேபிய நாட்டு அரசின் நிதி உதவியுடன் ஸ்ரீலங்கா ஹிறா பௌண்டேஷன் நிறுவனத்தினால் மட்டக்களப்பு பூநொச்சிமுனை பிரதேசத்தில் 40 வீடுகளை கொண்ட வீட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் முதல் கட்ட மாக பூர்த்தியான 10 வீடுகள் அதன் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காத்தான்குடி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்வின் காரியாலயத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்காஹிறாபௌண்டேஷன் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் ஏ.எல்.எம்.மும் தாஸ் (மதனி) தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா ஹிறா பௌண்டேஷன் நிறு வனத்தின் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் வீடு வசதியில்லாத 10 குடும்பங்களுக்கு பூநொச்சிமுனை பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கான திறப்பை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவர் சுபைர்,பிரதேச கல்விப் பணிப்பாளர் பதுர்தீன், ஸ்ரீலங்கா ஹிறா பௌண்டேஷன் நிறுவனத்தின் நிர்வாகிகள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ-10)

## தச்சன்தோப்பு பகுதி ரயில்பாதையில் துர்நாற்றம்

தென்மராட்சி,ஏப்.27

சாவகச்சேரியிலிருந்து தச்சன் தோப்பு வரையில் செல்லும்ரயில் பயணிகள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்லும் நிலை காணப் படுகிறது.

காலபோக நெற்செய்கை அறுவடை முடிந்த பின்னர் மேய்ச்சலுக்காக விடப்படும் வளர்ப்பு மாடுகள் ரயிலில் மோதுண்டு இறந்த நிலையில் அவை புதைக்கப் படாமல் விடப்படுவதால் துர்நாற்றம் வீசுகிறது. அடிக்கடி மாடுகள் மோதுவதால் ரயில் சேவையும் தாமத மடையும் நிலைகாணப்படுவதாக ரயில்வே திணைக்களத்தினால் தெரிவிக்கப் பட்டது.

இதே வேளை மாடுகளை வளர்ப்போர்மேய்ச்சலுக்கு வயல்களில் கட்டி விடுமாறும் தெரிவித்தனர்.பளையிலிருந்து நாவற்குழி வரையான ரயில் பாதையில் தினமும் கால்நடைகள்ரயிலில் மோதுண்டு இறப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.(வ-9)

**வீடு வாடகைக்குண்டு**

கொக்குவில் கிழக்குப் பிரதேசத்தில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 076 640 6667 (59241) (9.3)

**கடை வாடகைக்கு உண்டு**

பருத்தித்துறை வீதி, நல்லூர் சூரியா கிறீம் ஹவுஸுக்கு முன்பாக 2கடைகள் வாடகைக்குண்டு. தேநீர் கடை, புடைவைக் கடை நடத்துவதற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு: 021 222 5219
077 828 5684
(59222)(9.3.7)

**சிகிச்சை நிலைய உதவியாளர்**

பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளர் - பயிலுநர் பதவிக்கு A/L வரை படித்த 30வயதிற்குட்பட்ட பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். ஆர்வமுள்ளோர் சுயவிவர தரவுகளுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

198,அரசடி வீதி, கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
(59212) (9.3)

**வாடகைக்கு உண்டு**

புதிய மொடல் (Box.Model) வான் மற்றும் டபிள் கப் (மிக்சுபிசி பிக்கப்) மாத வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 075 800 1643 (59236) (9.3)

**விற்பனைக்கு உண்டு**

Engineering செங்கல்லு (9x4x2) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 075 800 1643 (59237) (9.3)

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்து 2.5Km க்குள் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 453 5761 (59234) (9.3)

**விற்பனைக்கு**

17.5 - 18.5 அடி கிளிங்கர் மீன் பிடிப்படகுகள் விற்பனைக்குள்ளன.

தொடர்பு: 077 329 6408, 077 426 6057
(59214)(9.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கணபதிப்பிள்ளை தெய்வராசா
(SLPS-I)
எமது பாடசாலையின் உப அதிபர்
க.தெய்வராசா
அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 1 பதவிக்கு 10.12.2010 தொடக்கம் நியமனம் பெற்றமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி மகிழ்கின்றோம். அவரது பணி தொடர வாழ்த்துகின்றோம்.

(57086)(4.3.6) வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்,
கிளி/தருமபுரம் இல.1, அ.த.க. பாடசாலை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



ஈவினை கற்பக விநாயகர்
ஆலய பிரதம குரு கலாநிதி
தியாக கெங்காதரக்குருக்கள்
அவர்களுக்கு 18.04.2015 சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவிலே சாமஸ்ரீ தேசமானிய விருது வழங்கப் பெற்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துவதோடு, வசந்த நாகபூஷணி அம்பிகையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். (59235)(4.3.6)

களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், ஏழாலை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் இவ்வருடம் நடத்தப்பட்ட சமூக சேவையாளர் பட்டமளிப்பு விழாவில் சாமஸ்ரீ தேசமானிய பட்டத்தைப் பெற்ற

பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள்

(ஈவினை கற்பக விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு) அவர்களை மனதாரப் பாராட்டி



வாழ்த்துவதோடு, மேன்மேலும் அவரது சேவை தொடர வேண்டும் என்று ஸ்ரீ உக்கிர வைரவரை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
தர்மகர்த்தா கு.சிவசுப்பிரமணியம்.

அம்பலத்தார் அடி ஸ்ரீ உக்கிர வைரவர் தேவஸ்தானம்,
(59205)(4.3.7) கோவிலாக்கண்டி, கைதடி.

## தவத்திரு யோகர்சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல் இசைத் தேர்வு - 2015

யோகர்சுவாமிகள் அருளிச் செய்த அருளமுதான நற்சிந்தனைப் பாடல்களை இசையுடன் பாடுவதற்கான தேர்வை இவ்வருடம் நடாத்துவதற்குத் திருவருள் கூடியுள்ளது.

இத்தேர்வு பாடசாலை மாணவர்களிடையேயும் பல்கலைக்கழக/ கல்வியியற் கல்லூரி மாணவர்களிடையேயும் நடாத்தப்படவுள்ளது.

பிரிவு I தரம் 6-9 } பாடசாலை மாணவர்களுக்கானது
பிரிவு II தரம் 10-13 }
பிரிவு III தரம் 18-25 வயதுக்கிடைப்பட்ட பல்கலைக்கழக. கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கானது.

- மாதிரி விண்ணப்பப்படிவமும் போட்டி விதிகளும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
- விண்ணப்பப்படிவங்களை நிழற்பிரதி செய்து விண்ணப்பிக்கலாம்.
- **விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 15.05.2015**
- முதலாம், இரண்டாம் சுற்று சிவதொண்டன் நிலையத்திலும் நிறைவுச் சுற்று இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி அரங்கிலும் நடைபெறும்.
- நிறைவுச் சுற்று ஜுலை நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னரான தேர்வு 1ஆம், 2ஆம் சுற்றுகள் முறையே 30, 31 - 05.2015 இலும் 13, 14 - 06 -2015 இலும் நடைபெறும்.
- நிறைவுச் சுற்றில் தேர்வாளர் பக்கவாத்தியம் சகிதம் பாடவேண்டும்.
- நிறைவுச் சுற்றுக்கு ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து தேர்வாளர்கள் மட்டும் தெரிவு செய்யப்படுவார்கள்.
- நிறைவுச் சுற்றில் பங்குபற்றும் தேர்வாளருக்கான செயலமர்வு, பயிலரங்கு சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும்.
- நிறைவுச் சுற்றில் பங்குபற்றும் தேர்வாளர் கட்டாயமாக இச் செயலமர்வு பயிலரங்கைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.
- முதலாம் சுற்றில் தேர்வாளரால் இசைக்கப்பட்ட பாடல் இரண்டாம் சுற்றுக்கு அதே தேர்வாளரால் இசைக்க முடியாது. நிறைவுத்தேர்வுக்கு விரும்பிய நற்சிந்தனை பாடலை பாட முடியும்.
- இரண்டாவது சுற்றில் நடுவர்களால் கேட்கப்படும் ஒரு பாடலை தேர்வாளர் இசையுடன் பாடுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

**நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.**

**விண்ணப்பப் படிவங்களைச் யாழ் சிவதொண்டன் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.**

நிறைவுச் சுற்றில் முதல் மூன்று நிலைகளைப் பெறும் தேர்வாளர்களின் காணொளிக் காட்சிகள் சிவதொண்டன் நிலைய இணையத் தளத்தில் வெளியிடப்படும். பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

| | முதலாம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|
| பிரிவு I | ரூபா 20 000 | ரூபா 10 000 | ரூபா 7500 |
| பிரிவு II | ரூபா 20 000 | ரூபா 10 000 | ரூபா 7500 |
| பிரிவு III | ரூபா 25 000 | ரூபா 15 000 | ரூபா 10 000 |
| | ஆறுதல் பரிசு | ரூபா 2000 | |

தேர்வுச் செயலாளர்
சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.
தொ. பேசி - 021 222 2799

## மாகாண சமூக சேவைகள் திணைக்களம் - வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

### கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளல் - 2015/16

1. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த சுத்திகரிப்பு சேவைகள் வழங்குநரிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் சுத்திகரிப்பு சேவை தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான சேவை வழங்கல் தொடர்பில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்புப் பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents"என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா. 1,000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 28.04.2015 தொடக்கம் 19.05.2015 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
7. "Cleaning Service 2015/16, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/02/2015 16" என்ற விவரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும், முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
8. விலைக்கேள்விகள் 21.05.2015 ஆம் திகதி 14:00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இவ் திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த விலைக்கேள்விகள் 21.05.2015ஆம் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்.
9. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவுக்கு அதிகாரமுள்ளது.

ந.இன்பராஜ்,
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வ.மா,
கண்டி வீதி,கைதடி.

தொலைபேசி: 021 320 2464 தொலைநகல்: 021 753 9145
மின்னஞ்சல்: socialnp@sltnet.lk

## வலி.வடக்கு மீள்குடியமர்வு: அடுத்த கட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 27


வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பிலான அடுத்த கட்ட கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது, விடு விக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் புதிதாக விடுவிக்க அடையாளப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பில் கலந்துரையாடல்நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் மீள்குடியமர்வு தொடர்பில் மீள் குடியேற்ற அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள், முப்படை யினருடன் கலந்துரையாடல்கள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை பணித்திருந்தது. இதற்கமைய கொழும்பில் அண் மையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வலி.வட்க்கில் புதிதாக விடுவிக்கப்படக்கூடிய பிரதேசங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. முப்படையினர் அடுத்த கட்டமாக விடுவிக்கக் கூடிய இடங்கள் தொடர்பில் அடையாளப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், யாழ்.மாவட்டச் செய லகத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மற்றும் மீள்குடியேற்ற அதிகார சபை யின் தலைவர் ஆகியோர் பங்கு பற்றும் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அடுத்த கட்டமாக விடுவிக்கக் கூடிய பிரதேசங்கள் தொடர்பிலான அறிவிப்பு வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (வ-5)



வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் பலத்த காற்று வீசியதைத் தொடர்ந்து மழையும் பெய்தது. இதனால் நெல்லியடிச் சந்தியிலிருந்து கொடிகாமம் செல்லும் வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக்கு முன்பாகசுமார் 20 வருடங்களுக்கு மேலாக நின்ற வேப்பமரம் முறிந்து வீழ்ந்துள்ளது. (வ-422)

## அலங்கார திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.27

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோ சாமுண்டிகா சமேத ஆதிவைரவப் பெருமான் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று ஆரம்பமாகியது.

தினமும் முற்பகல் 10.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் விசேட பூஜைநடை பெற்று, இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் சுவாமி திருவீதியுலாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் மகா சங்கற்பத்துடன் ஆரம்பித்து விசேட பூசைகள் நண்பகல் நடைபெற்று அன்னதானம்வழங்கப்படவுள்ளது.மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி திருவீதி யுலா வருவார். (வ-10)

## யாழ்.நகரில் போதையுடன் வீதியில் கூடும் இளைஞர்கள் இரவுவேளையில் அட்டகாசம்

### பிரதான வீதியில் கார் மீது கல் வீச்சுத் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.பிரதானவீதியில் சின்னக் கடைக்கும் பஸ்ரியன் சந்திக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இரவில் ஒன்றுசேரும் இளைஞர்கள் அடாவடித்தனமான செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர் என்று முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

மது மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள் எனக் கருதப்படும் இளைஞர்கள் சிலரே வீதியில் செல்லும் மக்களுடன் தகராறில் ஈடுபட்டுவருகின்றனர். இவ்வாறான அட்டகாசச் செயல்கள் கடந்த சில தினங்களில் அதிகரித் துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு டேவிற்வீதிச் சந்திப் பகுதியில் கூடி நின்ற இளைஞர்கள் வீதியால் சென்ற கார் ஒன்றின் மீது கற்களை வீசித் தாக்கியுள்ளனர். இதனால் காரின் கண்ணாடிகள் சேதமடைந்தன. அதில் பயணம்செய்த சிறுவனுக்கு கண்ணாடிச் சிதறல்கள் தாக்கியதில் காயம் ஏற்பட்டது.


இந்தச் சம்பவத்தை அடுத்து காரில் சென்றவர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறான சம்பவம் ஒன்று வியாழன் இரவும் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பத்தினர் குறித்த இளைஞர்களின் கல்வீச்சு தாக்குதலுக்கு இலக்காகினர் என்று கூறப்பட்டது.

போதை தலைக்கேறிய நிலையில் வீதியில் கூடும் இளைஞர்கள் கடந்த சில நாள்களாக இரவில் குழுவாக நின்று தமது சண்டித்தனத்தைக்' காட்டி வருகின்றனர். இவர்களின் கொட்டத்தை அடக்க பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நலன்விரும்பிகள் பலரும் கேட்டுள்ளனர்.

இதேவேளை – பிரதான வீதியில் மட்டுமன்றி நகரின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இரவு வேளைகளில் நடந்துவருகின்றன என்று ஊர் பெரியவர்கள் கூறுகின்றனர். (ஒ-17)

## மலேரியா அற்ற இலங்கை செயற்திட்டத்தில் மருத்துவ முகாம்



காத்தான்குடி, ஏப்.27

சர்வதேச மலேரியா ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மலேரியா அற்ற இலங்கையை உருவாக் கும் அரசின் வேலைத் திட்டத் துக்கு அமைவாக இலவச மலேரியா இரத்தப் பரிசோதனை மற்றும் வெளிநாடு செல்வோருக்கான மலேரியா தடுப்பு மருந்து வழங்கல் முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த மருத்துவ முகாமை கே.கே.வை எக்ஸ்பிரஸ் சமூக ஊடக வலையமைப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மலேரியா தடுப்பு பிரிவு ஆகியன ஏற்பாடு செய்திருந்தன.

காத் தான் குடி கடற்கரை வீதி மத்திய கல்லூரி முன்பாக இடம்பெற்ற இந்த முகாமில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி மேகலா ரவிச்சந்திரன், காத்தான்குடி சுகாதார மருத்துவ அதிகாரி நஸீருதீன் ஆகியோரின் வழிகாட்டலில் மலேரியா தடுப்பு பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர்களான சு. சுஜேந்திரன், மு.ராஜ், ஆ. ஜனகன் ஆகியோர் கலந்து கொண்டு தமது சேவைகளை வழங்கினர்.

நடைபெற்ற இலவச பரிசோதனை முகாமில் ஆண்கள், பெண்கள் உட்பட ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு இரத்தப் பரிசோதனை மேற்கொண்டதுடன் குறுகிய தினங்களுக்குள் இந்தியா போன்ற மலேரியா தொற்றுள்ள நாடு களுக்குச் செல்லவுள்ளோருக்கு இலவசமாக மலேரியா தடுப்பு மாத்திரைகளும் வழங்கப்பட்டன. (வ-10)

## கற்சிலைமடு அ.த.கவில் நடைபெற்ற புதுவருட விழா

முல்லைத்தீவு, ஏப்.27

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்திய தமிழ், சிங்கள புதுவருட விழா கடந்த 17 ஆம் திகதி கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் முதல்வர் சி.நாகேந்திரராசு தலைமையில் இடம்பெற்றது.

அனைத்து பிரமுகர்களும் நாகம்பாள் ஆலயத்திலிருந்து வரவேற்று ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாடசாலை நிகழ்வரங்கை அடைந்து மங்கல விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது.

பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, கிடுகு பின்னல், தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் போன்ற விளையாட் டுக்களோடு நடனம், கும்மி, காலிங்க நடனம், பண்டார வன்னியன் நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முல்லை அரச அதிபர் முல்லை மாவட்ட பிரதேச செயலாளர்கள் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வடமாகாண பண்பாட்ட லுவல்கள் பணிப்பாளர் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் என பலரும் கலந்து கொண்டுள்ளனர். (வ-500)

## வெள்ளத்தில் சறுக்கி குடும்பஸ்தரின் தோள்மூட்டு பாதிப்பு

தென்மராட்சி,ஏப்.27

மழை வெள்ளம் தேங்கி நின்ற பகுதியில் சென்ற மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் வீழ்ந்த குடும்பஸ்தருக்கு கை, தோள் மூட்டில் பாதிப்பு ஏற் பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை சாவகச்சேரி சிவன்கோயிலடியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த குணரத்தினம் சாந்தரூபன் (வயது–30) என்பவர் பாதிப்புற்ற நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர்மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (வ-9)

## மரம் முறிந்து விழுந்ததில் மோ.சைக்கிளில் பயணித்தவர் காயம்

அச்சுவேலி ஏப்.27

அச்சுவேலி வல்லை– ஆவரங் கால் பிரதான வீதிக்கு குறுக்கே தென்னை மரம் முறிந்து விழுந்ததால் தென்னங்குற்றியில் மோட்டார் சைக்கிள் மோதுண்டு சிதறிச் சேதமடைந்தது. மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் திடீரென வீசிய சுழிக்காற்றால் வீதியோரத்தில் நின்ற தென் னைமரம் முறிந்து, வீதியோர மின்வயர்களையும் அறுத்துக் கொண்டு வீதிக்கு குறுக்காக விழுந்தது. வீதிக்கு குறுக்காக தென்னை மரம் கிடப்பதை அவதானிக்காமல் அதிகாலை யில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் தென்னங் குற்றியில் மோதுண்டு விபத்துக்கு உள்ளாகியது.

மோட்டார் சைக்கிள் மோதுண்டு சேதமடைந்ததோடு, மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-11)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.27

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் பி.ப 1.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி) இ.பத்மநாதன் கலந்து கொள்வார். (வ-7)


## மரண அறிவித்தல்

### வீரகத்தி முருகையா




பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி முருகையா 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின்(கிளி), அன்புக்கணவரும், காலஞ்சென்ற ராசாவின் அன்புச் சகோதரனும், சிவகுமார், சிவகுமாரி, சுகுமாரி, வசந்தகுமாரி, உதயகுமாரி, ஜெயக்குமாரி, ஜெயராணி (பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தெய்வேந்திரன், சிவசுதன், திருக்குமரன், ராகினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்: சிவகுமார் (குமார் மகன்)

பன்னாலை, தெல்லிப்பழை. தொடர்பு: 077 837 9173



## புற்றுநோய் சிகிச்சைக்கு உதவும் புதிய சாதனம்

கொடிய உயிர்கொல்லி நோயான புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கக்கூடிய சாதனம் ஒன்றை MIT ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

புற்றுநோயை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தக்கூடிய, ஏற்றுக் கொள்ளப்பட்ட சில சிகிச்சை முறைகள் காணப்படும் நிலையிலேயே இந்தப் புதிய சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.


இந்தச்சாதனம் உடலினுள் பொருத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், புற்றுநோய் சிகிச்சைக்காக வழங்கப்படும் பல்வேறு மாத்திரைகளின் திறன்களையும் மதிப்பிடும் திறனையும் கொண்டுள்ளது. மேலும் இதனை 24 மணி நேரத்துக்கு மட்டுமே உடலில் பொருத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மடிக்கணினியில் கூகுள் குரோம் புக்


இணைய வலையமைப்பில் பல்வேறு சேவைகளை வழங்கி வரும் கூகுள் நிறுவனம், இணைய வலையமைப்பு தவிர்ந்த ஏனைய பல்வேறு இலத்திரனியல் சாதன வடிவமைப்புக்களிலும் காலடி பதித்து வருவது தெரிந்ததே.

இவற்றின் ஓர் அங்கமாகவே குரோம் புக் எனும் மடிக்கணினிகளை வடிவமைத்து வெளியிட்டிருந்தது.

தற்போது இந்த மடிக்கணினிகளைப் பாவிக்கும் பயனர்களுக்காக Box Clou- எனும் ஒன்லைன் சேமிப்பு வசதியை வழங்க முன்வந்துள்ளது. இதன் மூலம் குரோம் புக் பயனர்கள் கோப்புக்களை நேரடியாகவும், இலகுவாகவும் Box Clou- சேமிப்பகத்தில் சேமித்து பயன்படுத்த முடியும்.




## வளைந்த திரையுடன் எல்.ஜி. ஜி4 கைபேசி




எல்.ஜி. நிறுவனம் இந்த வருடத்தில் வளையும் தன்மைகொண்ட எல்.ஜி. G Flex 2 எனும் ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்திருந்தது. இந்தநிலையில் தற்போது வளைந்த திரையைக் கொண்ட எல்.ஜி. G4 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது. இதன் திரையானது 5.5 அங்குலமாக காணப்படுவதுடன் மேலிருந்து கீழாக 300 மில்லி மீற்றர்கள் வரை வளைந்ததாகக் காணப்படுகின்றது.

மேலும் இந்தக் கைபேசியில் Octa Core Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 3 ஜிபி நினைவகம்மற்றும் 32 ஜிபி சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன.

இதேவேளை சேமிப்பு நினைவகமானது microSD Car- உதவியுடன் 2TB வரை அதிகரிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது. இவை தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமராவையும் உள்ளடக்கியுள்ள இந்தக் கைபேசி விரைவில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்





/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# 15 லட்சம் பேர் படுகொலை 100 ஆவது ஆண்டு நினைவு

## ஆர்மீனிய தலைநகரில் அஞ்சலி நிகழ்வு





ஏரவன்,ஏப்.27

அர்மீனியா இனப்படுகொலையின் 100வது ஆண்டு நினைவு தினத்தில் உலகத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

முதலாம்; உலகப்போர் தொடங்குவதற்கு முன்னர், அர்மீனியா நாட்டில் சுமார் 21 லட்சம் கிறிஸ்தவ அர்மீனியர்கள் இருந்தனர். அர்மீனியா நாடு அப்போது துருக்கியை ஆண்ட ஆட்டோமன் பேரரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.


முதலாம் உலகப்போர் நடைபெற்ற 1915 ஆம் ஆண்டில் ஜேர்மன் ரஷ்யாவுக்கு எதிரான போரில் ஈடுபட்டது. ஜேர்மனுக்கு ஆதரவாக துருக்கி அரசு போரிட்டது. ஆனால், துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்த அர்மீனியா ரஷ்யாவுக்கு ஆதரவாகக் கெரில்லா தாக்குதலில் ஈடுபட்டது. அது துருக்கி அரசுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியது.

துருக்கி நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு சுமார் 250 அர்மீனியா அறிஞர்களை திட்டம் போட்டு, கொன்று குவித்தனர். அதன் தொடர்ச்சியாக, 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி கிறிஸ்தவ அர்மீனியர் களை கொன்று குவியுங்கள் எனத் துருக்கி அரச அதிகாரிகளே உத்தரவு பிறப்பித்ததால், லட்சக்கணக்கான அர்மீனியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

எஞ்சிய அர்மீனியர்கள் சிரியாவில் உள்ள சித்திரவதை முகாமுக்கு பாலைவனம் வழியாக நடத்தியே அழைத்துச் செல்லப்பட்டனர். போகும் வழியில் ஆயிரக் கணக்கானோர் பசி, பட்டினியால் செத்து மடிந்தனர். 1914 ஆம் ஆண் டில் 21 லட்சம் என்ற எண்ணிக்கையில் இருந்த அர்மீனியர்கள், 1921 ஆம் ஆண்டு வெறும் 3 லட்சம் அர்மீனியர்கள் இருந்ததாக மேற்கத்திய நாட்டு பத்திரிகைகள் தெரிவித்தன.

உலக வரலாற்றில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய அந்தப் இனப்படுகொலையைக் கண்டித்து அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் பெரும் கண்டனம் தெரிவித்தன. இனப்படுகொலை நிகழ்ந்து 100 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் அர்மீனியா தலைநகரான ஏரவனில் நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில், அர்மீனிய ஜனாதிபதி செர்ல் சர்கிஸ்யார்ன், ரஷ்ய ஜனாதிபதி; விளாடிமிர் புடின், பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் கோயிஸ் ஹோலண்டே உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். (14)

# யேமனில் மீண்டும் போர்



சனா, ஏப்.27

யேமனில் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி ஹவுத்தியின் அரசு படைகளுக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. அரசுக்கு ஆதரவாக சவூதி அரேபியா களம் இறங்கியுள்ளது.

ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. அந்தத் தாக்குதல் தொடங்கிய கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை 1000 பேர் உயிரிழந்து இருப்பதாக ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

போரை நிறுத்தும்படி இரு தரப்பினரையும் ஐ.நா. சபை கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் சவூதி அரேபியா குண்டு வீச்சை நிறுத்தினால் தான் போரை நிறுத்துவோம் என ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர். ஆனால் ஐ.நா. வேண்டுகோளை ஏற்று சவூதி அரேபியா குண்டு வீச்சைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தெற்கு யேமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி ஹவுதியின் இராணுவத்துக்கும் இடையே மீண்டும் போர் மூண்டது. அதில் 38 பேர் உயிரிழந்தனர். இது சன்னி பிரிவினரான வளைகுடா நாட்டினருக்கும், ஷியா பிரிவினரான ஈரானுக்கும் இடையேயான மறைமுகப் போர் என கருதப்படுகிறது. (14)

# மகிழ்ச்சியில் திருநங்கைகள் நடைமுறைக்கு புதிய சட்டம்



திருச்சி,ஏப்.27

திருநங்கைகளுக்கு சம உரிமை அளிக்கும் வகையிலான சட்ட பிரேரணை சபையில்; ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த மாதம் திருச்சியில் திருநங்கைகளுக்கும் சமூகத்தில் ஆண் பெண் போல சம உரிமை வழங்க வேண்டும் என்பது போன்ற அம்சங்களைக் கொண்ட சட்ட பிரேரணை சபையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

திருநங்கைகள் உரிமைச் சட்டம் 2014 என்ற பெயரிலான அந்தச் சட்டம் இனிமேல் மக்களவைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்– அங்கு பிரேரணை நிறைவேறினால்– இனி அந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# விநாயகரின் அவதாரமாக அதிசய ஆண் குழந்தை



டில்லி,ஏப்.27

ஜார்க்கண்ட் மாநிலத்தில் நான்கு கால்கள் மற்றும் நான்கு கைகளுடன் அதிசய ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள சிறிய நகரமான டும்ரி –இஸ்ரியில் தம்பதியினர் ஒருவருக்கு, நான்கு கால்கள் மற்றும் நான்குகைகளுடன் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

பிறந்து சில நாள்களே ஆன நிலையில், அந்தக் குழந்தையைப் பார்ப்பதற்காக அந்த மாநில மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.மேலும், அந்தக் குழந்தையை விநாயகரின் அவதாரம் எனவும் கூறி வருகின்றனர். இதுகுறித்து மருத்துவர்கள் கூறியதாவது:– கருவில் இருந்த இரட்டை குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டின் காரணமாக, இவ்வாறு நான்கு கைகளுடன் குழந்தை பிறந்துள்ளது என்று கூறியுள்ளனர். (14)

# சீனாவில் ஆபாச நடனத்துக்கு தடை

சீனாவில் இறந்தவர்களின் வீடுகளில் நடைபெறும் ஆபாச நடனங்களைத் தடை செய்ய அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இறந்தவர்களின் இறுதி ஊர்வலத்தின் போது நடனம் ஆடினால், இறந்தவரின் ஆன்மாவுக்கு மோட்சம் கிடைக்கும் என்று சீன நாட்டு மக்கள் நம்பி வருகின்றனர். அதனால், யாரேனும் இறந்துவிட்டால் அந்த வீட்டில் உள்ளவர்கள், நடன அழகிகளை அழைத்து வந்து நடனம் ஆடச் சொல்வார்கள். அதனைப் பார்ப்பதற்காக ஏராளமான கூட்டம் குவியும். இந்த நிலையில், அண்மையில் சீனாவில் ஒரு சடலத்தைச் சுற்றிலும் உறவினர்கள் சோகத்துடன் அழுதுகொண்டிருக்கையில்; நடனம் ஆட வந்த பெண் தனது உள்ளாடைகளைகழற்றி வீசியுள்ளார். அந்தக் காட்சி சமூக வலைதளங் களில் வெளியாகிப் பரப ரப்பை ஏற்படுத்தியதைத்தொடர்ந்து, அத்தகைய நட னங்களைதடைசெய்யசீனகலாசார அமைச்சகம் முடிவு செய்துள்ளது. (14)

# பேஸ்புக்கில் சிறப்பு வசதி;

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் தங்களை பற்றிய தகவல்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள சிறப்பு வசதியை தொடங்கியுள்ளது பேஸ்புக்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ளவர்களின் பேஸ்புக் பக்கத்தில் அவர்கள் பாதுகாப்பாக உள்ளார்களா என்று கேட்கப்பட்டு, பின்னர் அவர்களின் பதில் அவருடைய அனைத்து நண்பர்களுக்கும் தெரியப்படுத்தும் விதத்தில் அந்தப் புதிய வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

# சிரியாவில் முக்கிய நகரை கைப்பற்றிய தீவிரவாதிகள்

பெய்ரூட், ஏப்.27

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக ஒருபுறம் உள்நாட்டுக் கிளர்ச்சி நடந்து வருகிறது.

இன்னொரு பக்கம் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவற்றுக்கு இடையே அல்குவைதா ஆதரவு தீவிரவாத அமைப்பான நுஸ்ரா முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதிகள், அங்கு ஜிசிர் அல் சுகவுர் நகரின் பெரும்பகுதியைக் கைப்பற்றி விட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

லட்டாகியா– ஆலெப்போ ஆகிய நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள அந்த நகரத்தை முதல்முறையாக நுஸ்ரா முன்னணியினர் பிடித்திருப்பதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (14)

# காதலுக்கு வயதில்லை



பிரிட்டனில் மிகவும் வயதான பருவத்தில் திருமணம் செய்து கொள்ள காதல் ஜோடி ஒன்று முடிவு செய்துள்ளது.

பிரிட்டனில் உள்ள சுசெக்ஸ் பகுதியில் 102 வயதுடைய கிரேக்கும், 91 வயதுடைய லக்கி என்பவர்கள் வசிக்கின்றனர். அவர்களுக்கு அண்மையில் காதல் மலர்ந்ததையடுத்து எதிர்வரும், ஜூன் மாதத்தில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

அவ்வாறு அவர்கள் திருமணம் செய்துகொண்டால், உலகின் மிகவும் வயதான பருவத்தில் திருமணம் செய்து கொள்ளும் காதல் ஜோடி என கின்னஸ் புத்தகத்தில் அவர்களது பெயர் இடம்பெறும். (14)

# மீண்டும் அதிர்ந்தது

## நேபாளத்தில் உயிரிழந்தோர் 2,000 ஆக அதிகரிப்பு











காத்மண்டு,ஏப்.27
நேபாளத்தை தாக்கிய நில நடுக்கம் நேற்றைய தினமும் மீண்டும் தாக்கியுள்ளது. நேற்று முன்தினம் நேபாளத்தை உலுக்கும் பெரிய நில நடுக்கம் 7.9 ரிக்டர் அளவிலான மோசமான பாதிப்பை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து நேற்றும் 4.5 ரிக்டர் அளவில் தாக்கியுள்ளது. இந்த நில நடுக்கப் பேரழிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 2,000 ஆயிரத்தையும் தாண்டியுள்ளது. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

80 வருடங்களில் இல்லாத அளவுக்கு கடுமையான நிலநடுக்கத்தை சந்தித்த நேபாளத்தில் நேற்று முன்தினம் மட்டும் தொடர்ந்து 25 முறை நிலநடுக்கம் உலுக்கியதில் பல்லாயிரம் வீடுகள் இடிந்து விழுந்து தரைமட்டமாகியுள்ளன. அதனைத் தொடர்ந்து நேற்றும் 16 தடவைகள்நிலநடுக்கம்ஏற்பட்டுள்ளது. 19 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தாரா ஹரா கோபுரம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 200 பேர் உயிரிழந்துள்ளனர். நிலநடுக்கத்தின் தாக்கம் காரணமாக இமய மலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது. பனிச்சரிவில் சிக்கி உயிர் இழந்தவர்களின் 18 பேரின் உடல்கள்மீட்கப்பட்டுள்ளன.காயம்அடைந்த 61 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**மக்கள் தெருவில் வழிபாடு**

நேபாளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இரவு முழுவதும் தெருவில் அமர்ந்த வண்ணம் விடிய விடிய வழிபாடுகளை மேற்கொண்டனர். சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை அடுத்து மக்கள் இரவு முழுவதும் தூங்கவில்லை. அவர்கள் தெருவில் இருந்த வண்ணம் வழிபாடு செய்துள்ளனர்.

**இந்தியாவிலும் பாதிப்பு**

நேபாளத்தை மையமாகக் கொண்டு ஏற்பட்டுள்ள பலத்த நில நடுக்கத்தால், இந்தியாவின் வடக்கு பகுதிகளான டில்லி, பாட்னா மற்றும் லக்னோவில் நிலநடுக்க அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

**மோடி தலைமையில் ஆலோசனை**

மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மோடி அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். டில்லி உட்பட வட மாநிலங்களில் ஏற்பட்ட நிலநடுக்க பாதிப்புகள் குறித்து தகவல்கள் சேரிக்கப்பட்டு வருவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கம் தொடர்பாக மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பிரதமர் மோடி அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். அதில், நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகளைத் துரிதப்படுத்தி, காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்வது, வீடு இழந்தோருக்கான நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளன.

**24 மணிநேரம் இயங்கும் உதவி மையம்**

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கு உதவ இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் சார்பில் 24 மணி நேரமும் இயங்கும், கட்டுப்பாட்டு உதவி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**7 மாநிலங்கள் பாதிப்பு**

இந்தியாவில் பீகார், உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம், ராஜஸ்தான், அரியானா, டில்லி, பஞ்சாப் ஆகிய 7 மாநிலங்களில் நிலநடுக்க பாதிப்பு ஏற்பட்டுள்ளன. பீகார், உத்தரபிரதேசம், மேற்குவங்காளம் ஆகிய 3 மாநிலங்களில் தான் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**சுற்றுலாப் பயணிகள் தவிப்பு**

மகாராஷ்டிரா, தெலுங்கானாவிலிருந்து நேபாளத்துக்கு சுற்றுலா சென்ற 125 இந்தியர்கள் நில நடுக்க பாதிப்புக்கு இடையே சிக்கியுள்ளனர். அதில், 100 இற்கும் மேற்பட்டோரை தொடர்பு கொள்ள முடியாததால் அவர்களது நிலை தொடர்பில் தகவல் இல்லை. அவர்களில் ஐதராபாத்தில் இருந்து 25 பேர் ஆன்மிக சுற்றுலாவாக நேபாளம் சென்றுள்ளனர்.அவர்கள்அனைவரும் பாதுகாப்புடன் இருப்பதாக பயண ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

**மீட்புப் பணி துரிதம்**

நேபாள நிலநடுக்கத்தால், அந்த நாட்டுக்குச் சுற்றுலா சென்ற இந்தியர்கள் பலர் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்க மத்திய அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக அந்த நாட்டில் சிக்கித் தவித்த சிறுவர்கள் உட்பட 500 பேர் மீட்கப்பட்டு, இந்திய விமானப்படை விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (14)



## பாகிஸ்தானுக்கு சீனா 110 போர் விமானங்கள் விநியோகம்

இஸ்லாமாபாத்,ஏப்.27
பாகிஸ்தானுக்கு சீனா 110 போர் விமானங்களைவிநியோகம்செய்யவுள்ளது. முதற்கட்டமாக 50 போர் விமானங்கள் 3 வருடங்களில் வழங்கப்பட்டு விடும் எனத் தகவல் வெளியாகி உள்ளன.

அண்மையில் பாகிஸ்தானுக்கு இலக்குப் பார்வை சாதனங்கள் மற்றும் பல ஆயுதங்களை விநியோகம் செய்வதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. அதற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிலையில், சீனாவிடம் இருந்து பாகிஸ்தான் 110 ஜே.எப்.17 தண்டர் போர் விமானங்கள் வாங்கப்போகிறது. அதற்கான ஒப்பந்தம் அண்மையில் சீன ஜனாதிபதி ஜின்பிங், இஸ்லாமாபாத் சென்ற போது கையெழுத்தானதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஏற்கனவே பாகிஸ்தானுக்கு சீனா 5 பில்லியன் டொலர் மதிப்பிலான அதி நவீனமான 8 நீர்மூழ்கி கப்பல்களை வழங்க உள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில், தற்போது 110 போர் விமானங்களையும் விநியோகம் செய்யப் போவதாக வெளியாகியுள்ள தகவல்கள் தெற்காசிய பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்பட்டுகிறது. (14)

## வத்திக்கானில் தாக்குதல் நடத்த அல்குவைதா சதி: பொலிஸார்

# அதிரடி

ரோம்,ஏப்.27
வத்திக்கானில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெறவிருந்தவேளை அதனைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். இத்தாலியின் வடக்குப் பகுதியில் உள்ள பெர்காமோ நகரில் மதத் தலைவர் வீடு ஒன்றில் சிலர் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.


அதனைத் தொடந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார், வீட்டை முற்றுகையிட்டு அங்கிருந்த 18 பேரையும் கைது செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும்அவர்களுக்குஅல்குவைதா தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதும் கண்டறிப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தாக்குதலுக்கான ஆதாரம் அல்ல என்றாலும் தாக்குதலுக்கான சதி திட்டம் என்பதில் பலத்த சந்தேகம் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (14)

## இந்தோனேஷியாவை எச்சரிக்கும் பிரான்ஸ்; ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹோலண்டே

பாரிஸ்,ஏப்.27
பிரான்ஸ் குடிமகனுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்றினால், இந்தோனேஷியா கடும் பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். பிரான்ஸ் குடிமகன்ஒருவரைப் போதைப்பொருள் கடத்தியதாக குற்றஞ்சாட்டி கடந்த 2008 ஆம் ஆண்டு இந்தோனேஷியா அரசு கைது செய்து சாவுத் தண்டனை வழங்கியுள்ளது.

அண்மையில் பிரான்ஸ் குடிமகன் உட்பட 10 கைதிகளுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்ற இந்தோனேஷிய அரசு தயார் நிலையில் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள் ளன. அதனைத் தொடர்ந்து, தனது நாட்டுக் குடிமகனை மீட்க அனைத்து வகையான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ்ஹோலண்டே தெரிவித்துள்ளார். பிரான்ஸ் குடிமகனுக்கு சாவுத் தண்டனையை நிறைவேற்றுவது தங்களால் ஏற்க இயலாது என்றும், தண்டனையை நிறைவேற்றினால் பிரான்ஸ் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகள் மூலம் விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (14)

# சதாவதானியாக வலம் வந்த மேலைப்புலோலி தந்த கதிரைவேற்பிள்ளை



கே.எஸ்.சிவஞானராஜா

பருத்தித்துறை , தம்பசிட்டி, சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் 108ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, வழமை போலபோட்டிகளும், விழாவும் வெகுகோலாகலமாக, சதாவதானி மண்ணில் நடைபெற்றது.
நூறு விடயங்களை ஒரே நேரத்தில் அவதானம் செய்யக் கூடிய பேராசான் ஒருவர், தமிழராக அதுவும்யாழ்ப்பாணத்தில்மேலைப் புலோலி தம்பசிட்டி மண்ணில் அவதரித்தார் என்று சொல்லு போது நாம் அவரைப் பற்றிக் கேட்பதற்கு, அறிவதற்கு, உணர்வதற்கு, பேசுவதற்கு, எழுதுவதற்கு, பார்ப்பதற்கு என்ன தவம் செய்திருக்கவேண்டும். அதன் நிமித்தம் போட்டியில் பங்குபற்றவும் விழாவில் பரிசு வாங்கவும் சந்தர்ப்பம் கிடைத்தது.
தம்பசிட்டி 18.04.2015 சனிக்கிழமை மாலை விழாக்கோலம் பூண்டது. சதாவதானி சனசமூக நிலையத்தின் முன்பாக வைக்கப்பட்ட அழகான சிலை தெய்வீகமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சதாவதானி, கம்பீரமாகப் பண்பாட்டுடன் காட்சி தருகின்றார்.
"செந்தமிழணங்கின் சிந்தையிலென்றும்
தங்கும் தமிழொளித் துங்கவன்"
என்ற தூய தமிழ் கவி வரிகள் கீழே பொறிக்கப்பட்டுள்ளன. 1871.12.03 ஆம் திகதி அவதரித்த கதிரைவேற்பிள்ளை, 1907.03.26 இல் வீடு பேறடைந்தார். அவர் வாழ்ந்த முப்பத்தாறு வருடங்களை தமிழ் பணிக்கும், சைவப் பணிக்கும் அர்ப்பணித்து, பெருங்கீர்த்தியுடன் பெருஞ்சொற் கொண்டலாகி தமிழுக்குப் பேறளித்தார். ஒரு மொழி அகராதியை,தமிழ் பேரகராதியாகத் திருத்தமும் ,பொருத்தமாக பிழைகள் அறப் பதிப்பித்து தமிழுலகின் வாயினில் மந்திரமாக உச்சரிக்கப்பட்டார். இதனைக் கண்ணுற்ற மதுரைத்தமிழ்ச்சங்கம் பாண்டித்துரைத் தேவர் மூலமாக, அரிய தமிழ் தொண்டு எனப் பாராட்டி மகிழ்ந்தது. பழனி கோயிலின் சுவர் ஓவியங்கள் யாவும் சதாவதானி இயற்றிய "சுப்பிரமணிய பராக்கிரமம்"என்னும் அருள் நூலிலிருந்தே ஆதாரமாகப் படைக்கப்பட்டவையாகும்.
கந்தப்ப சுவாமிகள் இயற்றிய 'கதிர் காமக் கலம்பகம்' செல்லரித்துத் துகள்துகளாகச் சோபையிழந்த போதும் மிகவும் கஷ்டப்பட்டு அது புண்படாத வண்ணம், ஒன்று கூட்டி, மீள் பதிப்புச் செய்த பெருந் தொண்டை, தமிழறிஞரான பரிதி மாற்கலைஞர் (சூரிய நாராயண சாஸ்திரிகள்) இவ்வாறு பாராட்டினார்.
"கந்தப்பர் செய்த கதிர்காமக் கலம்பகத்தை
சந்தமொடும் அச்சிட்டான் சால் புறவே சந்தமுங்
கந்தனடி பேணுங் கதிரைவேற்பிள்ளையெனும்
அந்த தமிழ் பாவாணன் இனிது ஆய்ந்து"
மேலும், பழனித் தலப்புராணம், திருவருணைக்கலம்பகம், சிவராத்திரி புராணம், தமிழ்க் கூர்ம புராணம் என்பவற்றுக்கு விளக்கவுரை செய்த இவர், நைடதத்துக்கு ஆய்வுரை எழுதினார்.
புலோலியில் வாழ்ந்த நாகப்பபிள்ளை– சிவகாமிப்பிள்ளை (சிவகாமி அம்மை) இருவரின் இல்லறப் பயனாக கதிரைவேற்பிள்ளை தமிழ் உலகின் சூரியனாகப் போற்றப்படுகின்றார். இவருடைய சீடர்களுள் முதன்மையானவர் வி.கல்யாண சுந்தரனார் ஆவார்.
நாவலர், சைவசித்தாந்த மகாசரபம், அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், மகா வித்துவான், பெருஞ்சொற் கொண்டல், சதாவதானி என்ற பட்டங்கள் பலவற்றை தனதாக்கிய கதிரைவேற்பிள்ளை அவர்களை வருடந்தோறும் பெருவிழாவாகப் பண்பாடு மிளிரக் கொண்டாடுவதும், போட்டிகள் பல நடத்துவதென்பதும் வணங்குவதற்குரிய தொண்டாகும். சதாவதானி சமூகம் மேலும் வெல்வதற்கு நல்லதோர் மண்டபம் அமைய வேண்டும். இந்த நிலையில் 'உதயன்' நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் அவர்களின் வருகை விழாவுக்கு புத்துயிர் அளித்ததெனலாம். பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி, வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், பா.இரகுநாதன், தலைவர் நா.கண்ணதாசன், செயலாளர் ப.சிவசுப்பிரமணியம் மற்றும் மேற்படி சனசமூக நிலைய செயற்குழு மக்கள் யாவருமே சதாவதானியைப் போற்றி வணக்கம் செய்துள்ளார்கள். வரவேற்பு, நிகழ்ச்சிகள், உபசரிப்பு, பரிசுகள் யாவுமே மிகவும் பிரமாதம். அடுத்த ஆண்டு விழா புதியதோர் மண்டபத்தில் இடம்பெற வேண்டும்.

## சொந்தக் கட்டடங்களுக்கு மாறியுள்ள செலிங்கோலைப்





ஆயுள் காப்புறுதித் துறையில் முன்னணி வகிக்கும் செலிங்கோலைப் நிறுவனம் கண்டியிலும் மாத்தறையிலும் அதன் அலுவலகங்களை தனது சொந்தக் கட்டடத்துக்கு இடம் மாற்றியுள்ளது.
இவ்விரு பிரதான நகரங்களிலும் அதன் அயல் பிரதேசங்களிலும் உள்ள தனது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்கும் வகையில் இவ்விரு அலுவலகங்களும் புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.
கம்பனியின் புதிய கண்டி அலுவலகம் இலக்கம் 65 கிங்ஸ் வீதி கண்டி என்ற முகவரியில் மூன்று மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 11250 சதுர அடியாகும். அலுவலக ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர் களுக்கும் போதிய இடவ சதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் பலநோக்கு செயற்பாட்டு அறை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 80 பேருக்கான வசதிகள் உள்ளன.
போதிய வாடிக்கையாளர் வாகனத் தரிப்பிடமும் இங்கு உள்ளது. வருடாந்த கண்டி பெரஹரவை கண்டு மகிழக் கூடிய வகையில் பார்வையாளர் மண்டபம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.
செலிங்கோலைப்பின் மாத்தறை கிளை இலக்கம் 45 அநகாரிக தர்மபால மாவத்த என்ற முகவரியில் அமைந்துள்ளது. இது 6870 சதுர அடிபரப்பளவு கொண்ட இரண்டு மாடிக் கட்டடமாகும். இங்கும் வாடிக்கையாளர்களுக்கான வாகனத் தரிப்பிட வசதி அமைக்கப்பட்டுள்ளது.
சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் இந்த இரண்டு புதிய கிளை அலுவலக கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டன.
இலங்கையின் ஆயுள் காப்புறுதி பிரிவில் ஆகக் கூடுதலான கிளை வலையமைப்புடன் செயற்படும் நிறுவனம் செலிங்கோலைப் நிறுவனமேயாகும். நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 142 பிரதானநகரங்கள், புறநகரங்கள் மற்றும் கிராமங்களில் இதன் கிளை அலுவலகங்கள் அமைந்துள்ளன.
செலிங்கோலைப் ஏற்கெனவே அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, களுத்துறை, குருணாகல், கம்பஹா, மாத்தறை, காலி, திஸ்ஸமஹாராம, நீர்கொழும்பு, இரத்தினபுரி, கொட்டாஞ்சேனை மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய இடங்களில் தனது சொந்தக் கட்டடங்களைக் கொண்டுள்ளது.
பண்டாரவளை, வென்னப்புவ மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் தனது சொந்தக் காணியில் கம்பனி தற்போது கட்டடங்களை நிர்மாணித்தும் வருகின்றது. (த)

## சிறப்புற நடைபெற்ற அண்ணா கோப்பியின் வாடா மல்லிகை நூல் வெளியீட்டு விழா









அண்ணா தொழிலக வளர்ச்சியும் எழுச்சியும் குறித்த 'வாடா மல்லிகை' நூலின் வெளியீடு அண்மையில் இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் வீதியில் நடைபெற்றது.
யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் க.தேவராஜா நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.
விழாவில் கலாநிதி ஆறு.திருமுருகன் தொடக்க உரையை நிகழ்த்தினார். பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், மறவன்புலோ சச்சிதானந்தன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், அண்ணா நிறுவகக் கிளையின் முகாமையாளர் ஆ.மகேந்திரலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். கவிஞர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரையையும், திருமதி கோகிலா மகேந்திரன் நூல் நயப்புரையையும்.
வாடா மல்லிகை நூலைத் தொகுத்து அளித்த சைவப்புலவர் சு.செல்லத்துரை விழாவில் கௌரவிக்கப்பட்டார். முதற் பிரதியை, நொதேன் தனியார் வைத்தியசாலை நிறுவுநரும், தினக்குரல் பத்திரிகையின் முதல்வருமான எஸ்.பி.சாமி பெற்றுக் கொண்டார். சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைச் செயலாளர் அரங்கராமலிங்கம், விழாவில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையால் கௌரவிக்கப்பட்டார்.
விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வடமாகாணசபை உறுப்பினர் மற்றும் பல பிரமுகர்களும் பங்கேற்றனர். த.சித்தார்த்தன் உட்பட மழையின் மத்தியிலும் பெரும்திரளானோர் இறுதிவரை வெளியீட்டு விழாவில் சமுகமளித்திருந்தனர்.

## மக்களைக் காப்பாற்றுவது யார்?

நாவற்குழியில் தரித்து நின்ற அரச பஸ்ஸுடன் வேறொரு அரசுக்கு சொந்தமான பஸ் மோதியதில் பலர் காயங்களுக்கு உள்ளானதாகச் செய்திகள் தெரிவித்துள்ளமை மக்களின் மனதில் கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்திவிட்டது.

மக்களைப் பாதுகாப்பாக ஏற்றி இறக்க வேண்டிய பஸ் சாரதிகள் இவ்வாறு பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்டு, பயணிகளின் உயிருக்கு உலைவைக்க முயல்வதை எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதிலும் அரசுக்குச் சொந்தமான பஸ் சாரதிகளின் பெறுப்பற்ற செயலை மன்னிக்கவே முடியாது.

தற்போது காலையில் தினசரி தலைப்பை புரட்டியதும் வாகன விபத்துக்கள் தொடர்பான செய்திகளே அதிகளவில் காணப்படுகின்றன. இதற்கு மேம்படுத்தப்பட்ட வீதிகள், வாகனங்களின் அதிகரித்த எண்ணிக்கை என்பன காரணமாகக் காணப்பட்டாலும் வாகனச் சாரதிகளே அனேகமான விபத்துக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக உள்ளனர். தற்போது இள வயதினரே வாகனங்களைச் செலுத்துகின்றனர். இவர்களில் பலர் அனுபவம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இதுதான் விபத்துக்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது. மேலும் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் நிலவும் இறுக்கமற்ற தன்மையும், சாரதிகளின் தவறான சாரத்தியச் செயற்பாடுகளுக்கு ஒரு காரணமாகி விடுகின்றது.

இன்று வீதியில் பயணிப்பது மட்டுமல்லாது, வீதி யோரத்தில் நிற்பது கூட அச்சத்துக்கு உரியதாகி விட்டது. வாகனங்கள் வீதிகளில் செல்லும் நிலை இத் தகைய அச்ச உணர்வை ஏற்படுத்தி விட்டது.

ஆகவே உரிய அதிகாரிகள் வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும். இல்லையேல் மக்களின் உயிர்களுக்கு எவருமே உத்தரவாதம் வழங்க முடியாது.

*பொ.சந்திரன் கைதடி.*




## ஒலிபெருக்கிகளின் தொல்லைகள் நீங்குமா?

ஆலயங்களில் மஹோற்சவங்கள் இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரியது. இதனால் ஆலயச் சுற்றாடலே புனிதம் அடைகின்றது. அங்கு வாழுகின்ற மக்களும் புனிதம் அடைகின்றனர். ஆனால் ஆலயங்களில் இடம் பெறுகின்ற சில சம்பவங்கள்தான் ஏற்றுக் கெள்ள முடியாததாக உள்ளன.

குறிப்பாக ஒலி பெருக்கிப் பாவனை வெறுப்பை ஏற்படுத்தி விடுகின்றது. சில ஆலயங்களில் அதிகாலை வேளையில் ஒலிபரப்புக்கள் ஆரம்பமாகி விடுகின்றன. பலத்த சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்படுவதால் பலருக்கும் தொல்லை தருவதாக உள்ளது. பின்னர் இரவு வரை இந்த நிலைதான் தொடர்கின்றது.

சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் கூட அதிக சத்தத்துடன் ஒலிபரப்பப்படுவதால் ஒருவித வெறுப்புணர்வே ஏற்படுகின்றது. ஆலயத்தினுள் கேட்கும் வகையில் இதை ஒலிபரப்புச் செய்வதால் எவருக்கும் பாதிப்பு ஏற்படமாட்டாது.

மேலும் மங்கள வாத்திய இசை கூட உச்சமான ஒலியுடன் ஒலிபரப்பப்படுவதால் அதுகூட தொல்லை தரும் ஒன்றாகவே அமைந்து விடுகின்றது. இசையை ரசிக்காதவர்கள்எவருமே இருக்க முடியாது. ஆனால் மிதமான ஒலியில் அது ஒலிபரப்பாகும் போதுதான் அதை ரசிக்க முடியும். ஆலயங்களின் ஒலி பெருக்கிப் பாவனை தொடர்பாக ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டப் பட்ட போதிலும், அதனை எவரும் ஏற்றுச் செயற் படுவதாகத் தெரியவில்லை. இனியாவது இதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை உணர்ந்து செயற்பட்டால் அதுவே போதுமானது.

*நா.தம்பிராசா குப்பிளான்.*

## இவர்கள் மனம் திருந்துவார்களா?

தற்போது பழக் கடையில் வைக்கப்பட்டுள்ள வாழைப்பழங்கள் பச்சையும், மஞ்சளும் கலந்த நிறத்தில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதுவும் முழுக்குலையுமே இவ்வாறு காட்சியளிக்கின்றது. மருந்து தெளித்தல், புகை அடித்தல் ஆகியன மூலமாக வாழைக்குலைகள் பழுக்க வைப்பதாக கூறப்படும் நிலையில் பழங்கள் இவ்வாறு காட்சியளிக்கின்றன.

இந்தப் பழங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று ஒருநாள் அல்லது இரண்டு நாள் கழித்துப் பார்க்கும் போது கரிய நிறத்துக்கு மாறிவிடுகின்றன. இயற்கையாகப் பழுக்கின்ற பழங்களுக்கு இவ்வாறு ஏற்படுவதில்லை.

வாழைக்குலைகளை விரைவில் பழுக்க வைத்து விற்பனை செய்ய வேண்டும் என்று பழவியாபாரிகள் விரும்புகிறார்களே தவிர, மக்களின் உடல் நலம் தொடர்பாக அவர்கள் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

சுகாதாரத்துறை அதிகாரிகள் என்னதான் நடவடிக்கை எடுத்தாலும், நிலைமையில் மாற்றமொன்றையும் காண முடியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் திருந்தாத வரையில் எவ்ராலும் ஒன்றுமே செய்துவிட முடியாது என்பதுதான் உண்மை.

*பா.சுந்தரராசா தாவடி.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# யாழ். பல்கலைக்கு இனி விடிவு காலம்

பல மாதங்கள் இழுபறியின் பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் சில நாள்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைகளின் அனைத்து நடவடிக்கைகளையும் குறிப்பாக திட்டமிடல்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதாகவும் பேரவை விளங்குகிறது. யாழ். பல்கலைக்கழகம் மாத்திரமன்றி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைகளிலும் இந்த நடைமுறை உண்டு.

ஆனால் சில வருடங்களாக யாழ்.பல்கலை உட்பட சில பல்கலைகளின் நிர்வாகங்கள் அடாவடி அரசியலுக்குள் விழுந்து கிடக்கிறது. அதனால் பல்கலையின் சுயாதீனம் இழக்கப்பட்டதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

யாழ்.பல்கலைக்கு முன்னர் இருந்த பேரவையானது நீதியாக, தார்மீகப் பொறுப்புடன் நடந்துகொண்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு பல்கலைத் தரப்பினராலேயே பகிரங்கமாகக் கூறப்பட்டு வந்தது. அதனால் பல்கலையில் நியமனங்கள், இடமாற்றங்கள் மோசமாக இடம்பெற்றன.

அது கட்சி சார்பானதாகவே அமைந்தது. தகுதியில்லாதவர்கள்கூட நியமிக்கப்பட்டனர் என்று பல்கலையினர் குற்றம் சுமத்துமளவுக்கு பேரவை கண்மூடிக் கொண்டிருந்தது. அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் தற்போதும் பல்கலையில் உள்ள தாகக் கூறப்படுகிறது.

முன்னைய பேரவையில் பேராசிரியர் உள்ளிட்ட சிலர் இருந்தபோதும் எதுவும் நீதியாக நடக்கவில்லை. முறைகேடுகள் இடம்பெற்றபோது அதனைக் கூட அந்தப் பேரவையிலிருந்தவர்கள் தட்டிக்கேட்கவில்லை. அவர்கள் சகலரும் இங்குள்ள முன்னைய அமைச்சரின் சிபார்சின் பேரில் வந்தவர்களே. அதனால் அவர்களுக்குப் பல்கலையின் வளர்ச்சி பற்றிய அக்கறை இருந்திருக்கவில்லை. அந்த அமைச்சரின் கட்சியை வளர்க்கவே முனைந்து செயற்பட்டனர். அதற்காக பல் கலைப் பேரவைக் கூட்டம் இடம்பெறுவதாக இருந்தால், அதற்கு முன்னரே தியேட்டரில் கூட்டத்தின் முன்னேற்பாடான கூட்டம் நடந்து வந்தது.

தவிர அவ்வாறுள்ள பேரவையினர் பல்கலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கவில்லை, வளர்ச்சிக்கான பணிகளை முன்னெடுப்பதற்குரிய தகுதியை அவர்கள் கொண்டிருக்கவில்லை என்று பல்கலைத் தரப்புக் குற்றம் சாட்டி வந்தது.

அதனாலேயே அந்தப் பேரவையை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. அவ்வாறு செயற்பட்ட பேரவையை மாற்றுவதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் கைகொடுத்தது.

முன்னைய பேரவையை மாற்ற வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம், மாணவர் ஒன்றியம் என்பன போராட்டத்தில் குதித்தன. பேரவையில் இருந்து கொண்டு பேரவையின் அடாத்தான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த பீடாதிபதிகள் ஒன்றிரண்டு பேரும் உள்ளனர். ஆனால் அவ்வாறு ஒருசிலர் இருந்தால் மாத்திரம் நீதியற்ற செயற்பாடுகளைத் தட்டிக் கேட்க முடியாது. அத்தகைய தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க லாமே தவிர வேறொன்றும் செய்ய முடியாத கையாலாகாத நிலையே இருந்தது. அவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தால், தெரிவிக்கப்படும் எதிர்ப்புக்கு எதிரான பொருத்தமில்லாத ஒரு விடயம் கூறப்பட்டுவிடும். ஆக மொத்தத்தில் உருப்படியான சுயாதீனமான செயற்பாடு இருந்த தில்லை. அந்த அடக்குமுறைகளை எவரும் தட்டிக் கேட்க முடியாதவாறு பேரவை உறுப்பினர்கள் செயற்பட்டனர்.

அது பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் கவனத்தில் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் பல்கலைகளில் அரசியல் புகுந்து தாண்டவம் ஆடிய காலம் அது. அரசியல்வாதிகள் கூட்டுச் சேர்ந்து நினைத்ததைச் செய்வித்தகாலம்.

பல்கலைச் சமூகம் பேரவைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கத் தொடங்கியது. அது வலுப்பெற்றதனால் புதிய ஆட்சியின் பின்னர் அந்தப் பேரவையால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவ்வாறு லாயக்கற்றிருந்த பேரவை வெளியேற்றப்பட்டு விட்டது.

புதிய பேரவையில் உள்ளவர்கள் கற்றறிந்தவர்கள் என்றால் மிகையாகாது. பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் என்று சிறந்த சமூகமே புதிய பேரவை.

அதனால் பல்கலையில் எதிர்கால திட்டங்கள் மிகத் தெளிவாகச் செயற்படுத்தப்படும் என்று நம்பலாம். பல்கலைக்கு இனித்தான் விடிவு என்று கூறுவது சாலப் பொருத்தமாகவே இருக்கும். கட்சித் தலையீட்டால் நடந்தது போக புதிய பேரவை கவனமெடுத்துச் செயற்படும் என்று நம்பலாம். பேரவையின் உள்வாரி உறுப்பினர்களில் இரண்டில் ஒரு பங்கு பீடாதிபதிகளே. கடந்த பேரவையில் சில பீடாதிபதிகள் அமைச்சருக்கு விசுவாசமானவர்களாகவே இருந்தனர். அத்தகைய பீடாதிபதிகள் இன்னும் அதே பதவியில் இருப்பதனால் புதிய பேரவை அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுவரையான நாள்களில் பேரவைக் கூட்டம் நடைபெறாததனால் பல்கலையில் பல பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. குறிப்பாக திட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவது, பல்கலை சுகாதார நிலையத்துக்கு மருந்து வகைகள் கொள்வனவு எனச் சில சிக்கல்கள் உள்ளன எதிர்வரும் 6 ஆம் திகதி புதிய பேரவையின் முதலாவது கூட்டம் ஆரம்பமாகும் என்று பல்கலைத்தரப்புத் தெரிவிக்கிறது.

இனிமேல் பல்கலை சிறப்பாகச் செயற்படும் என்று எதிர்பார்க்க முடியும். தமிழ் மக்களின் பெரியதொரு கூடமாக, எமது சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாக யாழ். பல்கலைக் கழகம் விளங்குவதால் அது சுயமாக, சிறந்த முன்னேற்றப் பாதையில் செயற்பட வேண்டும். அதன் நிர்வாகம் வெளியார் ரின் தலையீடுகள் இன்றி நீதி, நேர்மையாக அமைய வேண்டும்.

**பத்தி எழுத்து**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிறுபான்மையோர் அடையாளங்களை அழித்தொழிக்க முன் நிற்காதீர்!

நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று நக்கீரர் என்ற தமிழ்ப் புலவர் சிவபெருமானைப் பார்த்து கூறியதாக ஒரு வசனம் உண்டு.

அதேமாதிரி நிலையில்தான் இப்போது சிறிசேனவின் அரசு, முன்னாள் அரசுத் தலைவர்களைப் பார்த்துக் கூறவேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

அரசின் விசாரணைப் பட்டியலில் இன்னும் பலபேர்களின் பெயர்கள் வரிசைப் படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் அதேவேளை, ஏற்கனவே இரண்டு அமைச்சர்களும் முக்கிய சில முன்னாள் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறார்கள்.

இதற்கிடையில் கடந்தவாரம் திங்கட்கிழமை நாடாளுமன்றத்துக்கு அருகாமையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலஞ்ச விசாரணை ஆணைக்குழு சாட்சியமளிக்க வரும்படி அழைப்பு விடுத்திருந்தமைக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டதின்போதும், வியாழக்கிழமை முன்னாள் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜ்பக்ஷ இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் முன் தோன்றி வாக்கு மூலமளித்தபோதும், அந்த ஆணைக் குழுவின் அருகில் இந்த நாட்டின் சிறுபான்மை மக்களை கௌரவப்படுத்தும் அடையாளங்கள் நீக்கப்பட்ட கொடிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளில் தேசியக்கொடியாக தாங்கியிருந் துள்ளார்கள்.

இந்தச் சம்பவம் இப்போது நாட்டில் குறிப்பாக தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் சிறுபான்மையோரை இழிவுபடுத்தும் வகையில் வாளேந்திய சிங்கத்தை மட்டும் கொண்ட கொடியை முன்னாள் அமைச்சர்களும் பிரமுகர்களும் ஏந்திநின்றமை, பெரும் ஆச்சரியத்தையும் அங்கலாய்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

முன்னைய ஆட்சியின்போது தமிழ், முஸ்லிம் மக்கள் பல வகைகளில் பாதிக்கப்பட்டிருந்தமையின் விளைவை நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, ஆட்சியாளர்களும் நாட்டு மக்களும் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் தேசியக் கொடியில் மாற்றம் செய்திருந்தமை குறித்து சில அமைச்சர்கள் தமக்கு வழங்கப்பட்ட கொடியைக் கவனிக்காமல் பிடித்திருந்ததாகக் கூறி கவலைப்பட் டுள்ளார்கள். முன்னாள் அமைச்சர் அழகப் பெரும சிறுபான்மையினரிடம் மன்னிப்பும் கோரியிருந்தார். வழமைபோல முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு எதிரான வர்களின் சதியாக இது இருக்கலாம் என்று அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார். ஆனால் அவ்வாறு செய்தமை தவறு. இனி எவரும் அதே மாதிரிச் செய்யலாகாது என அறிவிக்க மனம் வரவில்லை அவருக்கு!


எதுவானாலும், தேசியக் கொடியில் மாற்றம் செய்வதும் மாற்றம் செய்த கொடியை பொது இடங்களில் பயன்படுத்துவதும் குற்றமாகும். ஆகவேதான் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களும் கொடிகளை ஏந்தியவர்களும் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சிறுபான்மை மக்களின் வழிபாட்டிடங்கள் மற்றும் கலாசார மையங்கள் போன்றவை கடந்த காலத்தில் எவ்வளவு தூரம் இழிவுபடுத்தப்பட்டன. உரிய மதிப்பளிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டன என்பவை எல்லாமே இப்போது வரலாறுகளாகிவிட்டன. முக்கியமான வரலாற்றுக்குரிய சில இடங்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் உண்டு.

இவ்வாறான செயல்களின் அடிப்படை நோக்கம் புரியமால் இல்லை. சிறுபான்மை மக்க ளின் அடையாளங்களை படிப்படியாக அழித் தொழிக்கும் சூழ்ச்சிகள் இவை. அந்த வகையி லான சூழ்ச்சியின் உச்ச வெளிப்பாடாகவே, தேசியக் கொடியில் மாற்றம் செய்யப்பட்டிருந்த தன் உள்நோக்கத்தைக் கருத வேண்டும்.

சிறுபான்மை அமைப்புகளும் கட்சிகளும் இவைக்கு சரியான பரிகாரத்தைத் தேடியாக வேண்டும். நாடாளுமன்றத்தில் கிளப்பப்பட வேண்டிய மிக மிக முக்கியமான அவமதிப்பு இது.

இந்தப் பாரதூரமான செயல் குறித்து, ஜனாதிபதியும் பிரதமரும், காலம் கடத்தாது, சிறுபான்மையினரின் அடையாளங்களை அழிக்க முயல்வோர் மீது, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்வரவேண்டும். சொல்லில் அல்ல செயலில்.



# இவரை உள்ளே தள்ள முடியுமா?

■ சிங்களமூலம் - மவ்பிம
தமிழில் - வீஎஸ்ரீ

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு, விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்திருந்தமையும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குள் தங்கியிருந்து எதிர்ப்பு வெளியிட்டதும் இந்த நாள்களில் நாட்டில் பரபரப்பையும், பல தரப்பட்ட விமர்சனங்களையும் ஏற்படுத்தக் காரணமாகியிருந்தமை யாவரும் அறிந்த தொன்றே.

இவ்விதம் முன்னாள் ஜனாதிபதியொருவரை ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு விசாரணைக்காக முன்னிலையாகுமாறு அழைக்க இயலுமா? முடியாதா? என்பது குறித்து சட்டத்துறையில் பிரபல்யம் பெற்ற இரு பிரமுகர்கள் சாதகமாகவும் பாதகமாகவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள கருத்தில், இலங்கை யில் தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதிக்கு எதிராக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டொன்றை முன்வைக்க இயலாதெனக் குறிப்பிட்டுள்ளார்.அதற்குக் காரணம் 1953 ஆம் ஆண்டின் இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிப் பதவி என எந்தவொரு பதவியும் வகைப்படுத்தப்படவில்லையென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேபோன்று, அமைச்சர்களை நியமிப்பதற்கான ஜனாதிபதிக்குரிய சட்டப்படியான அதிகாரம், அவரது ஜனாதிபதிப் பதவி நடைமுறையில் இருக்கும்வரை அற்றுப் போய்விடமாட்டாது எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது அரசமைப்பின் 35 ஆவது பிரிவின்படி ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் காலம் வரை, ஜனாதிபதியொருவர் தாம் மேற்கொண்ட, அல்லது மேற்கொள்ளாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அவரைஎந்தவொரு நீதிமன்றத்திலும் முன்னிலைப்படுத்த இயலாது. அதுபதவிசார்வகையிலானபோதிலோ, அல்லது தனிப்பட்ட வகையிலான போதிலோ அவ்விதம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த இயலாது.

அரசமைப்பின் 35 ஆவது பிரிவின் 2ஆவது உப பிரிவின்படி, குறித்த பதவியை வகித்த காலம் குறித்த தடை தொடர்பாக கணக்கில் எடுக்கப்படுவதில்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண குடிசார் (சிவில்) வழக்குகளில் வழக்கைத் தொடுத்திருப்பதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதுவே காலம் குறித்த தடை எனக் குறிப்பிடப்படுகிறது. உதாரணத்துக்கு ஜனாதிபதியால் எவராவது ஒருவருக்கு ஏதாவது நட்டம் ஏற்படுத்தப்பட்டதென வைத்துக்கொள்வோம். அல்லது அவருக்கு எதிராக கடன் அல்லது காணி தொடர்பான வழக்கொன்று உள்ளதாக வைத்துக் கொள்வோம். அவ்வ தொடர்பில் காலம் குறித்த தடை கணக்கில் கொள்ளப்படுவதில்லை. ஜனாதிபதியொருவர் தமது பதவியை விட்டு விலகிய பின்னர்அவருக்கு எதிராக அத்தகைய குடிசார்(சிவில்) வழக்கொன்றை தாக்கல் செய்ய இயலும். அதேபோன்று எவருக்காவது பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால் குற்றவியல் வழக்கொன்றைத் தாக்கல் செய்ய இயலும்.

இந்த இடத்தில் இலஞ்சம் என்பது வேறு பொருள்படுகிறது. இலஞ்ச ஊழல் சட்டம் அரச ஊழியர், அரச நிறுவனங்களது பிரதிநிதிகள், அமைச்சர்கள், கூட்டுத்தாபன அதி காரிகள் ஆகிய தரப்பினர்களுக்கே பொருத்தமானது. அது 1953 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தொன்று. அந்த வேளையில் அரசியலில் ஜனாதிபதிப் பதவி என்றொரு பதவி இருந்ததில்லை. தேசாதிபதி என்ற பதவியே வழக்கில் இருந்தது. அவர் ஓர் அரச ஊழியர் அல்லர் என்பதால் அவர் இல்ஞ்ச ஊழல் சட்டத்துக்குள் அடங்கும் ஒருவராக இருக்கவில்லை.

1977 ஆம் ஆண்டின் அரசமைப்பின்படி ஜனாதிபதி அரச ஊழியர் என்ற நிரலுள் அடக்கப்படவில்லை. இதனால் அந்தப் பதவி இலஞ்ச ஊழல் சட்டத்துள் அடக்கப்பட்டிருக்கவில்லை. 1972 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதிப் பதவி நிர்ணயிக்கப்பட்டது. அந்த வேளையில் கூட ஜனாதிபதிப் பதவி இலஞ்ச ஊழல் சட்ட பதவி நிலைப்பட்டியிலுள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

ஆதலால் இலஞ்சம் குறித்த குற்றம் ஜனாதிபதி மீது சுமத்தப்பட இயலாது. அதாவது, ஜனாதிபதி ஓர் அரச ஊழியரோ, மக்கள் பிரதிநிதியோ, ஒரு கூட்டுத்தாபனத் தலைவரோ அல்லர். ஆதலால் முன்னாள் ஜனாதிபதி எவரையும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றுக்கு அழைக்க இயலாது. ஏனெனில் ஜனாதிபதி என்ற வகையில் குறித்த குற்றச்சாட்டைக் குற்றச்சாட்டாகக் கொள்ள இயலாது.

இலஞ்சம் பெறுதல் என்பது ஒரு விசேட குற்றம். ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களின்படி அவரால் ஒரு அமைச்சர் நியமனத்தை வழங்க இயலும். அவர் குறித்த பதவியை வகிக்கும் வரை அவருக்கான அதிகாரம் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார் என்பதற்காக அற்றுப் போய்விடமாட்டாது என முன்னாள் பிரதம நீதியரசர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேசமயம் பிரபல சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன, முன்னாள் பிரதம நீதியரசரின் கருத்துக்கு முற்றிலும் முரணான விதத்தில், ஜனாதிபதியொருவர், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்துவிட்டிருக்கும் நிலையில் தமது விருப்பின்படி பதவியொன்றின் நியமனத்தை ஒருவருக்கு வழங்குவது சட்டப்படி குற்றமொன்றாகக் கொள்ளப்படத்தக்கதெனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியொருவர் தமது பதவியை விட்டு விலகியதும் அவர் சட்டத்தின் முன் சாதாரண குடிமகனாகவே கருதப்படுவார். நாட்டின் சாதாரண பிரஜை என்ற ரீதியில் அவரை விசாரணை செய்யவோ, கைது செய்யவோ, குற்றவியல் சட்டப்படி அவர் மீது வழக்குத் தொடுக்கவோ இயலும். அதற்குச் சட்டத்தில் தடையேதும் கிடையாது. கொலை மற்றும் வன்முறைப் பிரயோகம் மட்டுமன்றி பிக்பொக்கற், திருட்டு மேற்கொண்டாலும்கூட முன்னாள் ஜனாதிபதியான போதிலும் அந்தப் பிரமுகர் மீது வழக்குத் தாக்கல் செய்ய இயலும்.

இந்தப்பிரச்சினையை நாம் இலஞ்ச ஊழல் சட்டத்தின் அடிப்படையில் அணுகலாகாது. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ், அதற்கமைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரொருவர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதாவது அன்பளிப்பை வழங்கினால் அது இலஞ்சம் வழங்கியதற்கு ஒப்பானதாகும்.

அதிகாரம் கையில் உள்ளதென்பதால் ஒரு ஜனாதிபதியால் அதனை முறையற்ற விதத்தில் பயன்படுத்த இயலாது, அவ்விதம் இலஞ்சம் என்ற ரூபத்திலான அன்பளிப்பொன்று வழங்கப்படுமானால், அது குறித்து நீதிமன்றத்தை நாடி தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அவர் ஒரு முன்னாள் ஜனாதிபதியெனக் கருதி நீதிமன்றம் அத்தகைய முறைப்பாடொன்றை நிராகரிக்க இயலாது என சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தில் 20 ஆம் திகதி இரவு



# நடந்தது என்ன?

சிலோன் ருடே நாளிதழில்
பிரசாத் மஞ்சு

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதன் முதலாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு சாரார் தொடர்ந்து 23 மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீளக்கூடிய பின்னர், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆர்ப்பாட்டக்காரர்களின் வேண்டுகோள்களை பரிசீலிப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து கடந்த 21ஆம் நாள் காலை 9.30 மணிக்கு 23 மணி நேரமாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது.

இலங்கையின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தியும், அவருக்கு அழைப்பாணை விடுத்த ஆணைக்குழுவின் இயக்குநருக்கு எதிராகவுமே, மஹிந்தவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 20ஆம் நாள் முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றத்திற்குள் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

கடந்த 20ஆம் நாள் முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆர்ப்பாட்டத்தை நிறுத்தவில்லை.

அவர்கள் தண்ணீர்ப் போத்தல்களை நாடாளுமன்றத்துக்குள் வருவித்து அருந்தினார்கள். அத்துடன் மதிய உணவுக்கு ஓரிருவராகச் சென்று நாடாளுமன்ற உணவகத்தில் தமக்குப்பிடித்தமானஉணவைஉண்டனர்.

இரவானதும், கடுமையான மழை பெய்து கொண்டிருந்த போதிலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த 80 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய இரவை நாடாளுமன்றத்துக்குள்ளேயே கழிப்பதெனத் தீர்மானித்தார்கள்.

படைக்கல சேவிதர் அனில் சமரசேகர மற்றும் அவரது அதிகாரிகளை, அன்று இரவு நாடாளுமன்ற வளாகத்துக்குள் தங்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அறிவுறுத்தினார்.

இதனால் நாடாளுமன்றத்தில் பணிபுரியும் முக்கிய அதிகாரிகள் அனைவரும் அன்றைய இரவை நாடாளுமன்றத்துக்குள் கழிக்க வேண்டியேற்பட்டது.

இதேபோன்று சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கையை நடைமுறைப்படுத்துமாறு நாடாளுமன்ற காவற்துறையினரும் அறிவுறுத்தப்பட்டனர்.

திங்கள் இரவு 7 மணியளவில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமது வீடுகளுக்குச் சென்று இரவு உணவை முடித்துக் கொண்டு, சாதாரண உடையுடன் மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் வந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது உடைகளை மாற்றிக் கொண்டு அன்றைய இரவை நாடாளுமன்றத்துக்குள் கழிப்பதற்கான ஆயத்தத்துடன் இருந்தனர்.

இரவு உணவுக்காக தமது வீடுகளுக்குச் செல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உணவு விடுதியில் தமக்கான உணவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்குத் தேவையான பிரைட் ரைஸ், கோழிப் பொரியல், நூடில்ஸ், இடியப்பம், கிறிகொட்டி, மீன், பாண், சம்பல் போன்ற உணவுகளை வழங்குவதில் நாடாளுமன்றப் பணியாளர்கள் சிறப்புக் கவனத்தைச் செலுத்தினர்.

வீடுகளுக்குச் செல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்குச் சென்று இரவு உணவை உண்டனர்.

இரவு 9 மணி வரை 90 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சாதாரண உடைகளை அணிந்திருந்தனர்.

வழமையாக தேசிய உடைகளில் அல்லது சேலைகளில் நாடாளுமன்றத்துக்கு வரும் இந்த உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அன்றைய இரவு சாதாரண உடைகளில் இருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகக் காணப்பட்டது.

றோகித அபேகுணவர்த்தன, ரி.பி. எக்கநாயக்க, குமார வெல்கம, விமல் வீரவன்ஸ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சி.பி.ரட்நாயக்க உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் சறம் மற்றும் ரீ–சேட் அணிந்திருந்தனர்.

அமைச்சர் சி.பி.ரத்நாயக்க முன்னாள் அதிபர் அணிந்திருக்கின்ற சிவப்பு நிற சால்வை போன்று நீல நிற சால்வை அணிந்திருந்தார்.

நாமல் ராஜபக்ஷவும், உதித் லொக்கு பண்டாரவும், ரீ–சேட் அணிந்திருந்தனர். உபேக்சா சுவர்ணமாலி தளர்ச்சியான 'ரீ– சேட் அணிந்திருந்தார். வெள்ளித்திரையின் இராணியான மாலினி பொன்சேகா தளர்வான நீளக்காற்சட்டையும் ரீ–சேட்டும் அணிந்திருந்தார்.

எனினும் கமலா ரணதுங்க, பவித்ரா வன்னியாராச்சி மற்றும் சுமேதா ஜி.ஜெயசேன போன்றோர் சேலைகளை அணிந்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிய சிறிய குழுக்களாக ஒன்று கூடி கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இரவு 11 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 110 ஆக உயர்ந்தது.

தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சிலரும் நள்ளிரவு வரை நாடாளுமன்ற வளாகத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் சுசில் பிறேம்ஜெயந் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் நலன்கள் தொடர்பாக விசாரிக்க மறக்கவில்லை.

இரவு 10 மணியளவில் நாடாளுமன்றப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு பால் கோப்பி மற்றும் சிற்றுண்டிகளையும் வழங்கினர்.

சிலர் தமது கடந்த கால நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். நடுத்தர வயதுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமது பாடசாலை நாள்கள், அந்தக் காலப்பகுதியில் தமக்கு ஏற்பட்ட காதல் அனுபவங்கள் தொடர்பாகவும், முறிந்து போன காதல் அனுபவங்கள் தொடர்பாகவும் பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது சிலர் உரத்துச் சிரித்த போது அந்தச் சத்தம் நாடாளுமன்றத்துக்கும் அப்பால் எதிரொலித்தது.

இவ்வாறான நிகழ்வுகளை பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி வேடிக்கையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

றோகித அபயகுணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ஸ, டலஸ் அழகப்பெரும, சி.பி.ரத்நாயக்க, ரி.பி.எக்கநாயக்க ஆகியோர் ஹெல ஜாதிக அபிமன்னே எனப் பாடத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து இவர்கள் பல்வேறு தேசப்பற்றுப் பாடல்களையும் பாடினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் றோகித அபயகுணவர்த்தன இந்த நிகழ்வை சங்கீதக் கச்சேரி போல் மாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சீட்டுப் பொதிகளை எடுத்து வந்தார். ஜானக வக்கும்பர, றஞ்சித் சொய்சா, செகான் சமசிங்க, உபேக்சா சுவர்ணமாலி போன்ற நாடாளுமன்ற உறுப்பினர் சீட்டு விளையாடினர்.

ஓ துசாரா என்ற பாடலைப் பாடியவாறு மகிந்தானந்த அளுத்கமகே நடனம் ஆடினார். ரி.பி.எக்க நாயக்க, திஸ்ஸ கரலியத்த ஆகியோர் மிகவும் அமைதியாக உட்கார்ந்திருந்தனர்.

இரவு ஒரு மணியளவில் இவர்களுக்கு பால் கோப்பி பரிமாறப்பட்டது. அதிகாலை 2.30 மணியளவில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆழ்ந்த நித்திரைக்குச் சென்றுவிட்டனர். பெரும்பாலானவர்கள் நாடாளுமன்றத்துக்குள் விரிக்கப்பட்டிருந்த சிவப்பு நிறக் கம்பளத்திலும் வேறும் சிலர் சபாநாயகர் ஆசனத்துக்கு அருகிலுள்ள படிகளிலும் உறங்கினர்.

இவர்கள் தாம் கொண்டிருந்த சொகுசான வசதிகளைப் புறக்கணித்து விட்டு வெறும் தரையில் படுத்திருந்தனர். நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தனர். ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் தொடர்பான நிகழ்ச்சியையே இவர்கள் பார்த்தனர்.

ஊழல் மற்றும் மோசடி ஆணைக்குழுவிலிருந்து அதன் பொது இயக்குநரைப் பதவியிறக்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்துக்களைத் திரட்டும் பணியை றஞ்சித் சொய்சா பொறுப்பேற்றிருந்தார். றஞ்சித் சொய்சா நித்திரைக்குச் செல்லும் முன்னர் 116 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்துக்களைப் பெற்றிருந்தார்.

கையெழுத்துக்கள் பெறப்பட்ட கோவையை சொய்சா தனது தலையின் கீழே வைத்துக் கொண்டே உறங்கினார். இதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புத் தனக்குரியது என்பதால் இவர் பொறுப்புடன் செயற்பட்டார்.

நாடாளுமன்றத்துக்குள் உறங்கிய உறுப்பினர்களில் றோகன புஸ்ப குமார நன்றாகக் குறட்டை விட்டு உறங்கினார். இதனால் சிலரது உறக்கம் கலைந்ததாகவும் மாளிகாவத்தையிலுள்ள மரஆலை ஒன்று நாடாளுமன்றத்துக்குள் கொண்டு வரப்பட்டது போன்று தாம் உணர்ந்ததாகவும் அவர்கள் கூறினர்.

நாடாளுமன்றத்துக்குள் கடுமையான குளிராக இருந்ததால், அரைக் கால், அரைக் கைச்சட்டைகளை அணிந்திருந்த உறுப்பினர்களில் சிலர், நாடாளுமன்ற ஊழியர்களிடம் விரிப்புகளைப் பெற்று போர்த்திக் கொண்டனர்.

சிலர் அதிகாலை 5.30 மணிக்கு நித்திரை விட்டு எழும்பிய கையோடு தமது வீடுகளுக்குச் சென்று காலைக் கடன்களை முடித்து விட்டு மீண்டும் காலை எட்டு மணியளவில் நாடாளுமன்றுக்கு வந்தனர். சிலர் நாடாளுமன்ற வளாகத்திற்குள்ளேயே தமது காலைக்கடன்களை முடித்து உணவு உண்டனர்.

இவ்வாறான செயல்கள் இதுவரை காலமும் இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் இடம்பெறவில்லை.

இவ்வாறான ஒரு வரலாற்று நிகழ்வானது கடந்த செவ்வாய் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் நாடாளுமன்ற அமர்வை ஆரம்பித்தவுடன் முடிவுக்கு வந்தது.



# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 30 | 60 | 30 | 60 | 40 |
| கத்தரி | 60 | 50 | 60 | 50 | 50 | 60 | 50 |
| கரட் | 100 | 110 | 120 | 120 | 120 | 120 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 50 | 45 |
| பயிற்றை | 50 | 60 | 30–60 | 80 | 80 | 40 | 80 |
| பாகல் | 80 | 80 | 100 | 100 | 80 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 80–100 | 80 | 60 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 100 | 90 | 85 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 50–100 | 70–80 | 60 | 100 | 80 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 25 | 40 | 40 |
| தக்காளி | 30 | 50 | 40 | 50 | 50 | 120 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 70 | 40 | 70 | 60 |
| கீரை | 20 | 30 | 30 | 20 | 30 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 25 | 50 | 40 | 50 | 40 | 80 | 40 |
| புடோல் | 40 | 60 | 40–60 | 60 | 40 | 30 | 60 |
| கோவா | 30 | 40 | 40 | 40 | 25–30 | 20 | 40 |
| வெண்டி | 50 | 60 | 30–60 | 80 | 60–80 | 40 | 60 |
| போஞ்சி | 150 | 120 | 120 | 140 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 240 | 140 | 160 | 180 | 140 | 140 | 125 |
| தேங்காய் | 60 | 45 | 60 | 60 | 40 | 90 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 | 80–120 | 160 | 80 |
| தேசிக்காய் | 200 | 140 | 150–200 | 180 | 160 | 60 | 120–160 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 – 100 | 120 | 80 | 120 | 80–100 |
| இராசவள்ளி | 120 | 120 | 40 | 120 | 80–100 | – | 120 – 180 |

# இளமையை எப்படிக் காக்கலாம்!



சிலர், 'இளமை வயது'களைத் தாண்டிய பிறகும் கம்பீரமாய் காட்சியளிப்பார்கள். சிலரோ இளம் வயதிலேயே முதுமை தட்டிப்போய் தோன்றுவார்கள். 'இவர்கள் மட்டும் எப்படி அன்று பார்த்தது மாதிரியே இன்றும் இருக்கிறார்கள்?' என்று சிலரைப் பார்க்கும்போதுதான் தோன்றுகிறது. நமது வயதை முதலில் வெளிப்படுத்துவது சருமம் தான். அதை ஒழுங்காக, சீராகப் பராமரித்தாலே நமது இளமை நீடித்திருக்கும். எண்ணெய் அதிகமுள்ள உணவுகளை உட்கொள்வதாலும் சருமத்தில் முதுமைத் தோற்றம் தெரிகிறது. இதைத் தடுக்க, முகத்தைப் பாதுகாக்கும் வகையில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சரி, நாங்கள் எப்படி இளமையைத் தக்கவைத்துக்கொள்வது என்று கேட்கிறீர்களா? இதோ, இந்தக் குறிப்புகளைப் படியுங்கள், பின்பற்றுங்கள்...

**தண்ணீர் நல்லது :**
இளமையைத் தக்கவைப்பதில் தண்ணீர் முக்கியப் பங்கு வகிக்கிறது. சருமத்தை மென்மையாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் தினமும் குறைந்தபட்சம் ஒரு லீற்றர் தண்ணீர் பருகுவது நல்லது என்கிறார்கள் சரும நிபுணர்கள்.

**இளமை காக்கும் உணவுகள் :**
என்றும் இளமையுடன் இருக்க தொடர்ந்த உடற்பயிற்சியும், பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், இறைச்சி, மீன் போன்ற ஆரோக்கிய உணவுகளை உட்கொள்வதும் அவசியம்.
உடல் திசுக்களைப் புதுப்பிக்கும் திறனுடைய 'ஆன்டி ஆக்சிடென்ட்' குணம் நிறைந்த உணவுகளை உட்கொள்வதால் முகம் சுருக்கம் இல்லாமலும், மென்மையாகவும் தோன்றும். மேலும், பசலைக்கீரை, அரைநெல்லிகள், கரட், தக்காளி, கிரீன் டீ போன்றவற்றையும் சேர்த்துக்கொள்வது நன்மை பயக்கும்.

**புகை தவிர்க்க வேண்டும் :**
சருமத்தை இளமையுடன் வைத்திருக்க மது பானம், புகைபிடிப்பதை கட்டாயம் தவிர்க்க வேண்டும். சிகரெட்டில் உள்ள 'நிக்கோட்டின்', இரத்த ஓட்டத்தைக் குறைப்பதால் சருமத்துக்குத் தேவையான சத்துகள் கிடைக்காமல் சுருக்கம் ஏற்படுகிறது. இதனால் வயதான தோற்றம் எளிதில் வந்துவிடுகிறது.

**ஆழ்ந்த உறக்கம் அவசியம் :**
சரியான உறக்கம் இல்லாததாலும் உடல் அழகு பாதிக்கப்படும் என்பதை பலர் அறிவதில்லை. சரியான தூக்கமின்மை, சோர்வை ஏற்படுத்தும், இளமையையும் பாதிக்கும். இரவில் குறைந்தது 6, 7 மணி நேர உறக்கம் அவசியம். அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், மனதில் புத்துணர்ச்சி நிலவும். உடல் ஆரோக்கியத்திலும், சருமத்திலும் பொலிவு ஏற்படும்.

**கவலை கூடாது :**
ஏதாவது ஒரு கவலையை இழுத்துப் போட்டுக் கொண்டு அதில் மூழ்குவது பலருக்கும் பழக்கமாக இருக்கிறது. கவலை உடல் நலத்தையும், அழகையும் பாதிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. எனவே கவலையை விட்டொழியுங்கள். மகிழ்ச்சியுணர்வை வளர்த்துக்கொள்ளுங்கள். அப்புறம் பாருங்கள், உங்கள் முகம் ஜொலிக்கும்.

## நாளை

**சித்திரை-15**
**செவ்வாய்க்கிழமை**
**28.04.2015**

திதி: தசமி பி.இ.01.10 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ.11.34 வரை
சுபநேரம்: 10.28-11.58 வரை
இராகுகாலம்: 02.57-04.28 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | | | 9 | | 7 | 5 | |
| | | | 3 | | | | | 1 |
| 1 | | | 4 | 5 | 6 | | | 8 |
| | | | 5 | | | | 7 | 2 |
| | 8 | | 1 | 4 | 7 | | 3 | |
| 7 | 5 | | | | 8 | | | |
| 9 | | | 6 | 2 | 3 | | | 4 |
| 5 | | | | | 4 | | | |
| | 4 | 1 | | 8 | | | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 7 | 5 | 6 | 9 | 3 | 8 | 2 |
| 2 | 5 | 9 | 3 | 8 | 4 | 1 | 7 | 6 |
| 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 5 | 4 | 9 |
| 1 | 2 | 4 | 9 | 3 | 6 | 8 | 5 | 7 |
| 9 | 8 | 5 | 4 | 7 | 2 | 6 | 1 | 3 |
| 7 | 3 | 6 | 1 | 5 | 8 | 9 | 2 | 4 |
| 5 | 4 | 1 | 6 | 2 | 3 | 7 | 9 | 8 |
| 6 | 9 | 8 | 7 | 4 | 1 | 2 | 3 | 5 |
| 3 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எல்லா உயிரும் கடவுளே

நாம் கடவுளுக்கு வேண்டியவர்கள். அவர், நம் உயிருடன் இரண்டறக் கலந்திருக்கிறார். எல்லா உயிர்களையும் கடவுளாகக் கருதும் தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.
தியாக மனப்பான்மை மனிதனை தெய்வீக நிலைக்கு அழைத்துச் செல்லும். ஆன்மிகத்துக்கு சாதி பாகுபாடு கிடையாது. சாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடு தான். தன்னைத் திருத்திக் கொள்பவனுக்கே, சமுதாயத்தைத் திருத்தும் தகுதி உண்டு.
எப்போதும் தன்னம்பிக்கையுடன் செயற்படுங்கள்.

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 650 | 700 | 400 | 600 | 700 |
| நண்டு | 250 | 300 | 300 | 200 | 400 | 350 |
| கணவாய் | 500 | 600 | 600 | 400 | 400 | 600 |
| பாரை | 550 | 500 | 450 | 400 | 380 | – |
| சுறா | 500 | 500 | 600 | 400 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 300 | 350 | 400 |
| விளை | 600 | 400 | 450 | 300 | 350 | 400 |
| முரல் | 250 | 300 | 350 | 250 | 300 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 250 | 300 | 350 |
| கிழாக்கன் | 450 | 600 | 400 | 150 | 350 | – |
| ஒரா | 400 | 250 | 450 | – | – | – |
| திரளி | 200 | 250 | 300 | 150 | – | 200 |
| நகரை | 200 | 250 | 300 | 200 | 300 | 200 |
| சூடை | 150 | 150 | 150 | 100 | 80 | – |
| ஒட்டி | 250 | 150 | 250 | – | 250 | – |
| திருக்கை | 150 | 350 | 250 | 100 | 150 | 200 |
| பாலை | 400 | 250 | 400 | 300 | – | 100 |
| வாழை | 100 | 100 | 350 | 200 | – | – |
| கொய் | 100 | 150 | 100 | 100 | – | 100 |
| மதனம் | 150 | 200 | 200 | 300 | 250 | 200 |



# மன்மத வருட பலன்கள்

## தனுசு



இந்த ஆண்டில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பேசி, காரியங்களைச் சாதித்துக் கொள் வீர்கள். இல்லத்தில் திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்கள் நடக்கும். பூர்வீக சொத்துக்கள், சிரமம் இல்லாமல் கை வந்து சேரும். ஆலயத் திருப்பணி களிலும், தர்ம காரியங்களிலும் ஈடுபடுவீர் கள். வருமானம், எதிர்பார்ப்பிலும் அதிகமாகக் கிடைக்கும். தேக ஆரோக்கியம் சீராக இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வரும் நல்ல செய்திகள் உங்களின் செவி களைக் குளிர்விக்கும்; ஆதாயமும் நல்கும். உங்களின் சுய முயற்சியின் அடிப்படையில் செயற்கரிய காரியங் களைச் செய்வீர்கள். உங்களால் சகோதர, சகோதரிகளுக்கும் நன்மை உண்டாகும். எதிலும் விவேகத்துடன் செயற்படுவீர்கள். உங்களின் கருத்துக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மீது சுமத்தப்பட்ட வீண் பழிகளில் இருந்தும், வழக்குகளில் இருந்தும் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு விடுபடுவீர்கள்; அதற்கான இழப்பீடுகளும் கிடைக்கும். அவ்வப்போது ஏற்படும் மனச் சோர்வை நீக்கிக் கொள்ள, 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தை ஓதவும். எதிர்பாராத விதத்தில் தீயவர்களின் தொடர்பும் ஏற்படும். இதற்காக அஞ்சத் தேவையில்லை. சிவபெருமான் துணையினால் தீமைகளிலிருந்தும் தீயவர் களிடமிருந்தும் எளிதில் மீளலாம்.

நீங்கள் ஓய்வெடுக்காமல் உழைத்துக்கொண்டே இருப்பீர் கள். அதனால் நற்பலன்களும் உள்ளன. செய்தொழிலில் தினமும் வருமானம் வந்துகொண்டே இருக்கும். மற்ற வர்களுக்குத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லும் அளவிற்கு உயர்வீர்கள். கல்வி, கேள்விகளில் அரிய சாதனைகள் புரிய வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வத்தோடு செல்வாக்கும் உயரும். எதிர்பாராத இடங்களிலிருந்து தக்க உதவிகளைப் பெறுவீர் கள். உங்களின் தன்னம்பிக்கை உயரும். பேச்சில் வசீகரமும், நடையில் கம்பீரமும் ஏற்படும். தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட மனம் விழையும். உங்களின் செயல்களை முறைப் படுத்திச் செய்வீர்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு**

அனைத்து வேலைகளையும் குறித்த காலத்திற்குள் முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். பதவி உயர்வு பெறு வதற்கு உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்வீர்கள். சக ஊழியர்களுக்கும் உதவி செய்வீர்கள். கூட்டாளிகளை அரவணைத்துச் சென்று காரியங்களைச் செய்யவும். புதிய சந்தைகளை நாடிச் செல்லும்போது கவனமாக இருக்கவும். அரசு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதற் குத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி யிருக்கும். ஆனாலும் உங்கள் சுய கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாது. சக கலைஞர்களின் உதவியால் உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**பெண்களுக்கு**

குடும்பத்தில் அனுகூலமான சூழ்நிலையைக் காண்பீர் கள். உங்கள் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்றார், உறவினர்கள் பாசத்தோடு பழகுவார்கள். இல்லத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். பெரியோரின் ஆலோசனைப்படி நடந்துகொண்டு, குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டா லும் தப்பித்துக் கொள்வீர்கள்.

**மாணவர்களுக்கு**

மாணவமணிகள், படிப்பில் சிறப்பான கவனம் செலுத் துவீர்கள். பாடங்களை முன்னதாகவே படித்து முடித்து, ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்; எதிர் பார்த்த மதிப்பெண்களை அள்ளுவீர்கள். விளை யாட்டுகளில் புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வீர் கள். பெற்றோர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பதால் முயற்சிகளைத் தீவிரப்படுத்தலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 1, 3, 9
அதிர்ஷ்ட திசைகள்: கிழக்கு, தெற்கு
அதிர்ஷ்ட மாதங்கள்:
சித்திரை, ஆவணி, மார்கழி
கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்:
ஆடி, கார்த்திகை

# பெண் புத்திசாலி மட்டுமல்ல மேம்பட்ட திறமைசாலியும்!

அடுக்களையில் அடிமைகளாக இருந்த பெண்கள், கடந்த முப்பதாண்டு காலத்தில் உலகத்தையே அடிமைப்படுத் தும் அளவிற்கு ஆளுமைத்திறன் படைத் தவர்களாக வளர்ந்திருக்கின்றனர். வீட் டிலோ, அலுவலகத்திலோ அவர்களின் பன்முகத்திறமை பளிச்சிடுகிறது. ஒவ் வொரு செயலிலும் வெளிப்படும் புத் திசாலித்தனம் அவர்களின் திறமையை உலகுக்குப் பறைசாற்றுகிறது. ஆனால் பெண்களை மட்டம் தட்ட நினைக்கும் ஆண்கள் பாலியல் ரீதியாக அவர்களைத் துன்புறுத்துகின்றனர். எங்கு அடித்தால் அவர்களுக்கு வலிக்கும் என்பதை உணர்ந்துள்ள ஆண்கள் அவர்களின் பெண்மையைக் குறிவைத்துத் தாக் குகின்றனர். இதுபோன்ற சவால்களையும் சந்தித்து வரும் பெண்கள் படிப்போ, வேலையோ எல்லாவற்றிலும் ஆண் களுக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை ஒவ்வொரு முறையும் நிரூ பித்துக் கொண்டிருக்கின் றனர்.



**பெண்கள் ஆரோக்கியசாலிகள்**

இன்றைக்கு ஆண்களை விட பெண்கள்தான் 5 முதல் 10 வயதுவரை அதிகம் உயிர் வாழ் கின்றனர். உலக அளவில் 85 சதவிகித பெண்கள் 100 வயதுவரை வாழ்வதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது. ஆண்கள்தான் அதிக அளவில் மாரடைப்பினால் இறக் கின்றனர். பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படு வது குறைவுதான் இதற்குக் காரணம். அவர் களின் உடலில் சுரக்கும் ஈஸ்ரோஜன் என்ற ஹோர்மோன்தான் இரத்தத்தில் தேவையற்ற கொழுப்பு சேர்வதை தடுக்கிறதாம்.

**தாய்மை உணர்வு**

கருவைச் சுமக்கும் பெண் வலிமையான வளாகவும், உணர்வுகளையும், அன்பையும் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிப்பவளாக வும் இருக்கிறாள். கடவுளின் சிறந்த படைப்பு பெண் என்றால் மிகையாகாது.

**ஆளுமைத்திறன் அதிகம்**

பெண்கள் இன்றைக்கு மருத்துவர்களாக, பொறியியல் வல்லுநர்களாக, ஆசிரியர் களாக, விமானம் ஓட்டுபவர்களாகப் பணி புரிந்து வருகின்றனர். மிகப்பெரிய நிறுவனங் களில் உயர் பதவியை கூட பெண்கள்தான் வகிக்கின்றனர். அவர்களின் ஆளுமைத்திறன் அதிகம்.

**பன்முகத்திறமை அதிகம்**

இயற்கையாகவே பெண்கள் பன்முகத்திறன் படைத்தவர்கள். பிரச்சினைகளை எளிதில் கையாளுவார்கள் என்று உளவியல் நிபுணர்கள் நிரூபித்துள்ளனர். அன்னையாகவும், மனை வியாகவும் அதே சமயத்தில் அலுவலகத்தில் அதிகாரிகளா கவும் பணிபுரிந்து தங்களின் திறமையை நிரூபித்துள்ளனர்

**தீர்க்கதரிசனம் அதிகம்**

பெண்கள் ஆலோசனை சொல்வதில் சிறந்தவர்கள். அவர்கள் எதையும் தீர்க்கதரிசனத்துடன் அணுகுவார்கள். அதனால்தான் பெண்புத்தி பின்புத்தி என்ற பழமொழியே உருவானது. ஆனால் இந்தப் பழமொழியைச் சில தவறாகச் சொல்லி வருகின்றனர். எதையும் தர்க்க ரீதியாக யோசிப்பதில் பெண்கள் கில்லாடிகளாம்.

**பெண் சிறந்த மேலாளர்**

மிகப்பெரிய நிறுவனங்களில் மேலாளர்களாக பதவி வகிக்கும் பெண்கள் அந்த நிறுவனத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். ஹிலாரி கிளிண்டன், சாந்தா கோச்சர், இந்திரா நூயி, உள்ளிட்ட பெண்கள் தாங்களுக்கு அளிக் கப்பட்ட பதவியை திறமையாக நிர்வகித்து வருகின் றனர். பெண்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கின்றனர். அதுதான் அவர் களின் வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது. கண வர் குழந்தைகளிடம் மகிழ்ச்சியோடு சமாளிக் கின்றனர். தன்னுடன் பணிபுரிபவர்கள், அலுவலக உயரதிகாரிகள் ஆகியோருடனும் இதே மகிழ்ச்சி யான மனநிலையுடன் தான் பேசுகின்றனர். ஆண் களின் சந்தோசம் பணம் சார்ந்தது. ஆனால் பெண் களின் சந்தோசம் பொருளாதாரத்தை மட்டுமே சார்ந்தது அல்ல.

**வசீகரிக்கும் அழகு**

பெண்கள் இயற்கையிலேயே அழகானவர்கள். அது கடவுள் கொடுத்த வரம். பதின்பருவ பெண் ஒருவித அழகு என்றால் குழந்தை பேற்றுக்குப் பின்னர் பெண்களுக்கு அழகுடன் கம்பீரமும் அதிகரிக்கும். எதிர்காலத்தலைமுறையை உலகிற்கு அறிமுகம் செய்துவிட்டோம் என்ற கர்வத்தில் பெண்களுக்கு அழகு கூடுமாம்.

**எதையும் சமாளிப்பார்கள்**


பெண்கள் எத்தகைய பிரச்சினைகளையும் சமாளிக்கும் திறன் படைத்தவர்கள் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் நிரூபிக் கப்பட்டுள்ளது. இதனால்தான் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களுக்கு மனஅழுத்தம் ஏற்படுவது குறைவு என்று ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க...








# சிவப்பு நட்சத்திரம்

சூரியக் குடும்பத்தில் மிகப் பெரிய நட்சத்திரம் சூரியன்தான். நாம் காணும் சூரியனும் ஒரு நட்சத்திரமே. இந்த பிரபஞ்சத்தில் சூரியனை விட மிகப் பெரிய நட்சத்திரங்கள் ஏராளமாய் உள்ளன. இத்தகைய நட்சத்திரங்களை சிவப்பு நட்சத்திரம் என்று அழைக்கிறார்கள். இவை எப்படி உருவாகின்றன? விண் மேகங்கள் சுருங்குவதால் உருவாகின்றன. இப்படி சுருங்கும்போது அதன் மையக்கருவில் அணுக்கருப்பிணைவு ஏற்படுகிறது. இதனால் அதில்



உள்ள ஹைட்ரஜன் எரிந்து தீர்ந்ததும் அதன் மையக்கரு சுருங்கும். அதே நேரத்தில் நட்சத்திரத்தின் மேல் அடுக்கு வெளிப்புறமாக விரிவடையும், இவ்வாறு நட்சத்திரத்தில் எதிரும் புதிருமான நிகழ்வு ஒரே நேரத்தில் நடைபெறுகிறது. இதனால் நட்சத்திரம் உருவத்தில் மிகப்பெரியதாக மாறும். அதன் நிறம் சிவப்பாக காணப்படும். அதனாலே இவற்றை சிவப்பு நட்சத்திரங்கள் என்கிறார்கள். இந்த நட்சத்திரங்களை இரவில் மிக எளிதாக பார்க்கலாம். சூரியனும் தற்போது உள்ளதைப்போல் 100 மடங்கு பெரிதாகும். அப்போது சிவப்பு ராட்சத நட்சத்திரமாக மாறும். இந்த நிலையில் நமது பூமி சூரியனுக்குள் சென்று விடும். அந்த அளவுக்கு சூரியன் பெரிதாகிவிடும்.

# நடப்பது யாவும் நல்லதற்கே



ஒரு கப்பல் கடலில் சென்று கொண்டிருந்தபோது இயந்திரக் கோளாறால்... கடலில் மூழ்கியது. அதிலிருந்த அனைவரும் மடிந்தனர்.கப்பல் கப்டன் மட்டும் உயிர் பிழைத்து.. நீந்தியபடியே ஆள்கள் இல்லாத தீவு ஒன்றுக்கு வந்தான் தனியாக என்ன செய்வது எனத்தெரியாத அவன்.. அந்தத்தீவில் கிடைத்த ஓலை..குச்சி எல்லாவற்றையும் சேகரித்து இருக்க ஒரு குடிசையை அமைத்துக் கொண்டான். பின் வயிற்றைக் கிள்ளியதால் ..உண்பதற்கு ஏதேனும் கிடைக்குமா.. என்று தீவைச் சுற்றிவரக் கிளம்பினான்.திரும்பி வந்து பார்த்தபோது...அவன் அமைத்திருந்த குடிசை தீப்பற்றி எரிந்திருந்தது...

அதைப் பார்த்த அவன் கண்களில் நீருடன் 'கடவுளே நான் என்ன தீங்கு செய்தேன்..என்னை எவருமில்லா தீவில் சேர்த்தாய்.உண்ண உணவில்லை. இருப்பதற்கு கட்டிய குடிசையையும் தீப்பற்றி எரிய வைத்துவிட்டாயே' எனக் கதறினான். அப்போது ..அந்தத் தீவை நோக்கி ஒரு கப்பல் வந்தது..அதில் இருந்தவர்கள் இவனைக் காப்பாற்றி தங்கள் கப்பலில் ஏற்றிக்கொண்டனர். 'நான் இங்கு மாட்டிக்கொண்டது உங்களுக்கு எப்படித் தெரிந்தது'என அவர்களிடம் இவன் கேட்டான். அவர்கள் சொன்னார்கள்..'யாருமில்லாத தீவில் நெருப்புப் பற்றி எரிந்ததைக் கண்டோம்...உடன் எவருக்கோ உதவி தேவை என்பதை உணர்ந்து வந்தோம்'. .என்றனர். கடவுள் எது செய்தாலும் அது நல்லதுக்கே என்பதை உணர்ந்தான் அவன்.

# நம்பினால் நம்புங்கள்!

5 ஆயிரம் வயது தாண்டியும் உயிர் வாழும் மரம் பூமியில் உண்டு. பிரமிட்டுகளின் வயதுக்கு இணையான இந்த மரம் அமெரிக்காவின் கலிஃபோர்னியாவிலுள்ள வைற்ட் மவுண்டன்ஸ் பகுதியில் உள்ளது.

மூளையின் தகவல்கள் நமது நரம்பு மண்டலத்தில் மணிக்கு 322 கிலோ மீற்றர்; தொலைவுக்குப் பயணம் செய்கின்றன.

நம் தும்மலின் வேகம் மணிக்கு 160 கிலோ மீற்றர்

அப்பிள் சோஸ் – இதுதான் விண்வெளியில் உண்ணப்பட்ட முதல் உணவு. அந்தப் பெருமை அமெரிக்க விண்வெளி வீரருக்குக் கிடைத்தது!

இந்தோனேசிய மழைக்காடுகளில் உலகின் மிகப்பெரிய மலர் பூக்கிறது. அது ஒரு கார் ரயர் அளவுக்குப் பெரியது.

நீலத்திமிங்கலத்தின் இதயத்தின் எடை மட்டுமே சுமார் 907 கிலோ.

ஒரு குண்டூசி முனையில் நம் உடலின் 10 ஆயிரம் செல்களை நிறுத்தி வைத்துவிட முடியும்.

விரல் நகம் நுனி முதல் அடி வரை வளர 6 மாதங்கள் ஆகும்.

# வெற்றியின் இரகசியம்

(சென்றவாரத் தொடர்ச்சி... )

ஆனாலும் விடாமுயற்சியினால் தண்ணீரைத் தேடி அலைந்தேன் . அதோ ஒரு அழகான சுனை. ஆஹா.. என்ன அருமையான தண்ணீர். இப்போது எதையும் தாங்கும் மனமும், புதுத் தெம்பும் கிடைத்துவிட்டது. இனி அடுத்த படியைக் கடப்பதற்குத் தயாராகி விட்டேன். அந்தப் பாதை மீண்டும் எவ்வித கஷ்டம் கொடுக்காமல் சென்றது. ஆனால் சிறிது நேரத்தில் உடலை நடுங்க வைக்கும் கடுமையான குளிர் தாக்க ஆரம்பித்தது. எனது மன உறுதி அதைக்கண்டு அஞ்சவில்லை. சலிக்காமல் அந்தப் பாதையைக் கடந்தேன். அதன்பிறகு இளம் வெயில் எனக்கு சற்று ஆறுதல் தந்தது. மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தேன். சட்டென்று எதிர்பாராத பலத்தகாற்றுடன் ஒரு சூறாவளி எனது பயணத்தைத் தடுக்கப் பார்த்தது. ஆனால் அதைகண்டு எனது வெற்றி இலட்சியத்தில் பின் வாங்காமல் பொறுமையாக உறுதி மிக்க மரத்தை இறுக்கமாக பிடித்துக் கொண்டேன். சிறிது நேரத்தில் அனைத்தும் காணாமல் போய்விட்டன. அந்த இடமே அமைதியாகத் திகழ்ந்தது இப்போது எதையும் தாங்கும் தன்னம்பிக்கை வந்தது. அந்த வழியில் முன்னேறிச்செல்லும்போது ஒரு 'அறிவிப்புப்பலகை' ஒன்று இருந்தது. அதில் இன்னும் 10 நிமிடத்திற்குள் 'வெற்றி ' இடத்துக்குச் செல்லும் படகு புறப்படத் தயாராக இருக்கிறது. அங்கு செல்ல விரும்புவோர் அதற்குள் சென்றால் தான் படகை பிடிக்கமுடியும். அதன்பின் படகு எப்போது வரும் என்று சொல்லமுடியாது. இந்தப் படகை விட்டுவிட்டால் மீண்டும் நீங்கள் வந்த வழியே திருப்பிச் செல்ல வேண்டியிருக்கும்.என்று இருந்தது. இவ்வளவு கஷ்டப்பட்ட பிறகு திரும்பிச் செல்வதா! கூடவே கூடாது! பத்து நிமிடம் இருக்கின்றதே ! எனது ஆற்றல் அனைத்தையும் கொண்டு அந்தத் தூரத்தை அதற்கு முன்னமே கடந்தேன். அங்கே எனக்காகக் காத்திருந்த அந்த அழகான படகில் ஏறினேன். இன்னும் சிறிது நேரத்தில் 'வெற்றி' இடத்தை அடையப் போகிறோம் என்கிற மகிழ்ச்சியில் இருந்தேன். ஆனால் மீண்டும் புயல் மற்றும் மழையில் படகு தத்தளித்தது. கடைசியில் தாக்குப்பிடிக்க முடியாமல் கவிழ்ந்தது. நான் எனது அறிவையும், திறமையும் கொண்டு ஒரு மரக்கட்டையின் உதவியால் 'வெற்றி ' இடத்தை அடைந்தேன். அங்கு நான் கண்ட காட்சி , அந்த சொர்க்கலோகத்தின் ஒருபகுதி தனியாகப் பிரிந்து வந்ததுபோல் ஒரு ஆனந்தம். அங்கு பூத்துக் குலுங்கும் வண்ண மலர் சோலைகள், அருவிகள், இதமான காற்று , மனதுக்கு குளிர்ச்சி தரும் அருமையான சூழ்நிலை, ஆரோக்கியமான உணவு வகைகள், அன்பான உபசரிப்பு, கண்கவர் மாளிகை இன்னும் பலவற்றைக் கண்டேன். ஓஹோ .. இது தான் வெற்றி இடமா! இதுவரை எவ்வளவு கஷ்டப்பட்டாலும் இங்கு வரும்போது அனைத்து கஷ்டங்களும் மறைந்து விட்டன.





எங்கு எந்தவித கஷ்டமில்லாமல் சுதந்திரமாக, ஆனந்தமாக இருக்கலாம்! இது தான் எனது வெற்றிப் பயணத்தின் கதை. கஷ்டங்கள் எது வந்தாலும் கலங்காதீர்கள்! உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுங்கள்! வெற்றி அடைவீர்கள்.

# நேபாளத்தில் உள்ள இலங்கையரை அழைத்து வர நடவடிக்கை

கொழும்பு, ஏப்.27

நேபாளத்தில் உள்ள 35 இலங்கை யர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று விமானப்படை ஊடக நிறைவேற்று அதிகாரி வின்ங் கொமாண்டர் கிஹான் சென விரட்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடகமை யத்தில் நேற்று இடம்பெற்ற செய் தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

நோபாளத்தில் நேற்றுமுன்தினமும், நேற்றும் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி களை வழங்குவதற்காக இலங்கை விமானப்படைக்கு சொந்தமான விமானம், வைத்தியர்கள் மற்றும் முப்படை வீரர்கள் அடங்கிய குழு வுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 5.20க்கு இலங்கை யிலிருந்து புறப்பட்ட விமானம் காலை 10.30 மணியளவில் காத் மண்டு நகரத்தை சென்றடைந் துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வின்ங் கொமாண்டர் கிஹான் சென விரட்ன, நேபாளத்திலிருந்து நாடு திரும்புவதற்கு விரும்பும் 35 இலங் கையர்கள் அங்குள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ள தால், அவர்களை விமான படை பீ–130 என்ற விமானத்தில் அழைத் துவர எதிர்பார்க் கின்றோம்.– என்று கூறினார். (ற)

## அம்பிட்டிகந்தையில் மண்சரிவு: பாதுகாப்பான இடத்துக்கு மக்கள் மாற்றம்

கொழும்பு, ஏப்.27

பண்டாரவளை அம்பிட்டிகந்தை பெருந்தோட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவினையடுத்து அங்கிருந்து 29 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்என இடர் முகாமைத்துவ அமைச்சின் பதுளை மாவட்ட பிரதிப்பணிப்பா ளர் ஈ.எம். எல். உதயகுமார தெரிவித்தார்.

அம்பிட்டிகந்த தோட்டத்தில் மண் சரிவு அபாயம் எதிர்நோக்கப்பட்ட தையடுத்து 65 தொழிலாளர் குடும் பங்களை அப்பகுதியிலிருந்து வெளி யேறுமாறு தோட்ட நிர்வாகம் அறி வித்தும் தொழிலாளர்கள் அவ் அறிவிப்பினை நிராகரித்துள்ளனர். இவ்வகையில் வெளியேற்றப்படும் தொழிலாளர் குடும்பங்களுக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத் திக் கொடுப்பதாகவும் தோட்ட நிர் வாகம் தெரிவித்துள்ளது. அப்படியி ருந்தும் தொழிலாளர்கள் குறிப் பிட்ட பகுதியிலிருந்து வெளியேற வில்லை. மண்சரிவு ஏற்பட்ட பின் னரே 11 குடும்பங்கள் மட்டும் வெளி யேறியிருக்கின்றனர். இவர்களுக் கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அனைத்து நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. – என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (ற)

advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மைதிலி மோகஜீவன்

(ஆசிரியை, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)



குமுழமுனையைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மைதிலி மோகஜீவன் நேற்று (26.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் மோகஜீவனின் அன்பு மனைவியும், அஜய், சஞ்ஜய் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட் கிழமை பி.ப. 04.00 மணியளவில் அவரது புதுக்குடியிருப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- கணவன் (மோகஜீவன்) 077 0665915

புதுக் குடியிருப்பு.

### திருமதி மல்லிகாதேவி கந்தையா



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி கந்தையா கடந்த (25.04.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்காளான சுப்பிரமணியம் (சைக்கிள் கடை மணியம்)- காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கந்தையாவின் அன்பு மனைவியும், முரளிதரன் (சீனா), காலஞ்சென்ற செல்வி சுபா மற்றும் ஜானகி (ஜேர்மனி), குருபரன் ஆகியோரின் தாயும், மீரா (சீனா), கோணேஸ்வரன் (ஜேர்மனி), கவிதா ஆகியோரின் மாமியும், மஞ்சரி, வீணா (சீனா), நித்திலா , மயூரி, நிலவன், நிஷா, நிதர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மணியம்மா, சிவகுமார் மற்றும் ரஞ்சினிதேவி- ஆகியோரின் சகோதரியும்,. திருஞானசம்பந்தர், கனகசிங்கம், அரியமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குருபரன் (மகன்) 0094779261343

மீசாலை.

### திருமதி இராஜேஸ்வரி ஆறுமுகம்



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் தச்சன்தோப்பு கைதடியை வசிப்பிடமாகவும் தற்போது பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஆறுமுகம் நேற்று (26.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (உரிமையாளர், ஆறுமுகம் ஸ்ரோர்ஸ்) அன்பு மனைவியும், சிவசக்தி, சிவரூபி, சிவபாலன், சிவகௌரி ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி, வேலாயுதர், காலஞ்சென்ற கமலாதேவி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் சகோதரியும், கண்ணதாசன், இந்துவர்ணன், சிவரட்ணம், கிருபாலினி ஆகியோரின் மாமியும், சதுர்த்திகன், செந்தூரான், கௌரீசன், கஜலக்ஷி, தாட்சாயினி, வைஷ்ணவி, வைஷ்ணவன் கௌதமன் ஆகியோரின் பேர்த்தியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி திருச்செல்வம் (செந்தூர்)

தோற்றம் 16.04.1968

மறைவு 25.04.2015



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி திருச்செல்வம் (செந்தூர்) கடந்த (25.04.2015) சனிக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், கந்தசாமி- பிறேமாவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், பிறேமளாவின் அன்புக் கணவரும், திருமதி லக்ஷனா- மதுரன், டிலக்ஷன், நிகாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சமதர்மராசா- மதுரன் அவர்களின் அன்பு மாமனாரும், வம்சிகனின் அன்புப் பேரனும், சிவபாதபுண்ணியம்- நாகேஸ்வரி, காலஞ்சென்ற முருகானந்தம் மற்றும் கணேசானந்தம், திருமதி நவரத்தினம், பரமேஸ்வரி (திலகம்), பவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரம தாசன் (சுவிஸ்), ஜெயமாலா, பிரதீபன் (லண்டன்), கமலதீபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருவேரகம், அல்வாய் வடமத்தி.


(சி/15660)(4.3.7)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் செல்வநாதன் (திருச்செல்வம்)

(உரிமையாளர், கலைமகள் இரும்பு வாணிபம், அனுஸ் சைவ உணவகம், கிளிநொச்சி)



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் யாழ்ப்பாணம், ஓமந்தை பன்றிக் கெய்த குளத்தையும், தற்போது கண்ணன் கோயில் வீதி, கிளிநகர் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம்செல்வநாதன் கடந்த (25.04.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் -மற்றும் இரத்தினம் (கனடா) தம்பதி யரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பேபிசறோசாவின் அன்புக் கணவரும், அனுசா (ஆஸ்திரேலியா), சிந்துஜா, அருணன், கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவ நேசன் (ஆஸ்திரேலியா), சந்திரஹாசன் (லண்டன்), லிவிங்சன், ஆகி யோரின் மாமனும், சற்குணநாதன், சரஸ்வதி, பாக்கியலட்சுமி, பஞ்சரத்தினம், பத்மநாதன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் மகா தேவன், சகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவி, நாகரத்தினம், யோகானந்தசிவம், காலஞ்சென்ற கோபாலசுந்தரம் மற்றும் யோகேஸ்வரி, சாவித்திரி, மதிவேணி ஆகியோரின் மைத்துனரும், தினுசா, நதீஸ்குமார், மதுஸ்ணன், சசிகலா ஆகியோரின் சிறியதந்தையும், சுகுமாரி, தரணீஸ்வரன், கியூட்டிஷா, ஷபிகா, ஷயன் ஆகியோரின் பெரிய தந்தையும், சுதர்சன், சுதாகரன், சுகந்தன், சுசிதரன், சுபாஜினி, திருமால், கோகுலன், லக்ஷன், நிரோஷன், மிதிலன், சிந் துஜா ஆகியோரின் மாம னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2015) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணன் கோயில் வீதி, கிளிநகர், கிளிநொச்சி.

தகவல்:- குடும்பத்தினர். 077 4451469

### திருமதி சந்திரபிரபா கதிரவேலு (தேவா)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் ஆனந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லத்துரையின் மகள் சந்திரபிரபா கதிரவேலு நேற்று (26.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வரதராசா (கனடா), குகதேவி , சிறி (ஜேர்மனி), குமார் (டோகா), தீபா ஆகியோரின் அன்புத் தாயும், நிதியா, ஈசன், ரகு, சரணியா ஆகியோரின் மாமியும், குருசிகா, சரணிகா, சஞ்சிகா, கிருத்தின், கிருஜன், பிருந்துவி, லக்ஸிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வவியின் சிறியதாயும், ரவீந்திரன், வேவி, சின்னக்குஞ்சு ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி, மானிப்பாய்.

தகவல்:- மருமகன் (ஈசன்)

# 19ஆவது திருத்தத்தின் பிரதி மல்வத்து மகாநாயக்கருக்கு

## ஜனாதிபதி நேற்றுக் கையளித்தார்

கொழும்பு, ஏப்.27
நாடாளுமன்றத்தில் இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரதியொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மல்வத்து மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரிடம் கையளித்துள்ளார். மல்வத்து மஹா விகாரையில் காலை மகாநாயக்க தேரரைச் சந்தித்த ஜனாதி பதி குறித்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரதியொன்றை கையளித்துள்ளார்.

சிறிது நேரம் ஜனாதிபதி, மகாநாயக்க தேரருடன் அரசமைப்புத் திருத்தச் சட் டம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதுடன் மகாநாயக்கர், ஜனாதிபதிக்கு ஆசி வழங்கியுள்ளார்.



அதேவேளை மல்வத்து அநுநாயக்கர் நியாங்கொட விஜிதசிறி தேரரையும் சந்தித்த ஜனாதிபதி, அவரிடம் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதியொன்றை கையளித்துள்ளார். எதிர்க்கட்சித்தலைவர் நிமால் சிறிபால டி சில்வா உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். (ற)

# சலுகை விலையில் இலங்கைக்கு உரம்

## நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என சீனத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.27
எதிர்காலத்தில் சலுகை விலையில் இலங்கைக்கு உரவகைகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று சீனத்தூதுவர் யீ.சியான் லியான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் விவசாய சேவைகள் தலைமையகத்தில் விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுடனான சந்திப்பொன்றின் போதே சீனத் தூதுவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் உரத் தேவைக்கு அமைய 3 லட்சத்து 75 ஆயிரம் மெற்றிக் தொன்கள் வரையிலான யூரியா உரம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உரத்தை மேலும் அதிகரிப்பது தொடர்பாகவும், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் யூரியா உரத்தை குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் இருநாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளும் திட்டம் விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவால் புதிய சீனத்தூதுவரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக இரு நாடுகளுக்கிடையில் தொழில் நுட்ப ரீதியிலான அறிவைப் பரிமாறிக் கொண்டு விவசாயத்தொழில்நுட்பத்துறையை மேம்படுத்தி விடுவதற்கும் இலங்கைக்கான சீனத்தூதுவர் யீ.சியான் லியான் அச்சந்திப்பில் இணக்கம் தெரிவித்துள்ளார். (ற-22)

# துருக்கியின் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில்

கொழும்பு, ஏப்.27
துருக்கியின் கடற்படை போர்க்கப்பலானடிசிஜி கெடிஸ் நேற்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள் ளது. நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டு இந்தக் கப்பல் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளைவரை இந்தக்கப்பல் கொழும்பில் நங்கூரமிட்டிருக்கும் இந்தக் கப்பல் ஜப்பான் செல்லும் வழியிலேயே இலங்கை வந்துள்ளது. குறித்த 122 நாள்கள் என்ற பய ணத்தின்கீழ் இந்தக் கப்பல் ஏப்ரல் முதலாம் திகதி பயணத்தை ஆரம்பித்தது. அதன் பயண வழியில் கொழும்புத் துறைமுகம் 18ஆவது துறைமுகமாக அமைந்துள்ளது.

20 ஆயிரத்து 300 கடல்மைல் பயணத்தின்போது இந்த கப்பல் 14நாடுகளின் 18 துறைமுகங்களுக்கு சென்று திரும்பவுள்ளது. துருக்கியின் ஏர்டக்ரூல் என்ற கடற்படைக் கப்பல் ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டதன் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டே இந்தக் கப்பல் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தவகையில் ஜப்பானுக்கு செல்லும் வழியில் ஏர்டக்ரூல் கப்பல் 1889ஆம் ஆண்டு கொழும்புக்கு வந்து ஐந்து நாள்கள் நங்கூரமிட்டிருந்தது. (ற)

# மன்றுக்கு இன்று பஸில் செல்வார்

கொழும்பு, ஏப்.27
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்ள உள்ளார்.

நிதிமோசடி விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள பஸில் ராஜபக்ஷ, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். 19ஆம் திருத்தச்சட்டம் தொடர்பான விவாதம் இரு தினங்களுக்கு நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவாதத்தை ஆரம்பிக்கவுள்ளார். இந்தநிலையிலேயே அவர் வைத்தியசாலையிலிருந்து நாடாளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார். சிறைச்சாலை வாக னத்தில் பஸில் ராஜபக்ஷவை அழைத்துச் செல்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

நிதி மோசடி பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்த பஸில் ராஜபக்ஷவை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க, கடுவெல நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. சிறைச்சாலை வைத்தியசாலையில் பஸில் ராஜபக்ஷ சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். (ற)

# கொழும்பு சுற்றுவட்டபாதை புனரமைப்பு அடுத்தவாரம்

கொழும்பு, ஏப்.27
கொழும்பு வெளிப்புற சுற்றுவட்ட வீதியின் 3 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய வரையான வீதியின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு வெளிப்புற சுற்றுவட்ட வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக சீனா நிதி உதவி வழங்குகின்றது.

இந்த வீதியின் கடுவலையிலிருந்து கடவத்தை வரையான பகுதி, கடந்த ஜூன் மாதம் திறந்துவைக்கப்பட்டது. (ற)

# மஹிந்தவின் கோட்டையில் மாநாடு நடத்திய மைத்திரி

கொழும்பு, ஏப்.27
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பிரதிநிதிகளின் மாநாடு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் நடைபெற்றுள்ளது. இந்த மாநாடு அங்குனுகொலபெலஸ்ஸ நகர சபை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இம்மாநாட்டில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா, ஏ.எச்.எம்.பௌசி, நிருபமா ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, வீ.கே. இந்திக, கமலா ரணதுங்க ஆகியோரும், அம்பாந்தோட்டை மாவட்ட மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அம்பாந்தோட்டை மாவட்டம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறப்பிடமாகவும், அரசியல் கோட்டையாகவும் திகழ்கின்றது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடை பெறுகின்ற அம்பாந்தோட்டை பிரதிநிதிகளின் முதலாவது மாநாடு இது என்பதோடு மஹிந்தவின் கோட்டையில் மைத்திரி தலைமையேற்று மாநாட்டை நடத்தியிருப்பது மஹிந்தவிற்கு விடுத்திருக்கும் சவாலாக அமைந் துள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள். (ற)

# 19 நிறைவேற்றப்படும் என்று ஜே.வி.பிக்கு மைத்திரி உறுதி

கொழும்பு, ஏப்.27
19ஆவது திருத்தச் சட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி தமக்கு உறுதியளித்துள்ளார் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. ஜனாதிபதிக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் சில உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சை அடுத்தே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் எவ்விதமான போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி தமது கட்சியிடம் உறுதியளித்துள்ளார் என்று அதன் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தத்தை தாமதமில்லாது நிறைவேற்றவேண்டிய தன் அவசியம் குறித்து ஜனாதிபதி தம்மிடம் வலியுறுத்தியுள்ளார் என்றும் சில்வா தெரிவித் துள்ளார். (ற)

# கொடி மாற்றப்பட்டமைக்கு ஜே.வி.பி. கடும் கண்டனம்

கொழும்பு, ஏப்.27
மாற்றம் செய்யப்பட்ட தேசியக் கொடியை பயன்படுத்திய அரசியல் தலைவர்கள் மீது மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கடந்த 23ஆம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தமிழ் முஸ்லிம் இனங்களை சுட்டிக்காட்டும் நிறங்கள் அகற்றப்பட்ட தேசியக் கொடியை சில அரசியல்வாதிகள் ஏந்தியிருந்தனர்.

அரசியல்வாதிகளின் இந்த நடவடிக்கை தவறானது என ஜே.வி.பி.யின் மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சந்திரசேகரன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அதேவேளை சாதாரண தேங்காயை திருடியவனை சிறையில் அடைக்கும் சட்டம் நாட்டில் உள்ள நிலையில், பெரிய அளவில் மக்களின் பணத்தை சூறையாடியவர்கள் புதிய அரசில் அமைச்சராக உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கனகலிங்கம்
யோகேஸ்வரன் (ஈசன்)
பிறப்பு 09.08.1973
இறப்பு 08.05.2014

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார் உறவினர் நண்பர்களுக்கு இனியவனாய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஐயனார் கோவிலடி, கோக்குவில் மேற்கு, கோக்குவில். குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 .08 .1932
ஆண்டவன் அடியில் 08 .05 .2014

அமரர் சின்னத்தம்பி துரைராசா
(ஓய்வு பெற்ற இலங்கை கடற்படை ஊழியர்)
திதி:- 27.04.2015

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எம் அன்பு அப்பாவே
உங்கள் நினைவுகளில் வாழ்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

149/3, அரசடி வீதி, கந்தர்மடம்,
நல்லூர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# பெங்களூரின் சகலதுறை அசத்தலில் சல்லிசல்லியாக நொருங்கியது டெல்லி




ஸ்ராக், ஆரோன், வீஸ் ஆகியோரது வேகமும் கெயிலின் தாண்டவமும் ஹோக்லியின் நிதானமும் கைகொடுக்க டெல்லியை 10 இலக்குகளால் மிகமிக இலகுவாக வெற்றி கொண்டு ஆட்டத்தை ஊதித்தள்ளியது பெங்களூர்.


டெல்லி எதிர் பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டம். நிச்சயமாக இரண்டு அணிகளும்சம பலம் பொருந்திய அணிகள் என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் டெல்லியின் அண்மைக்கால பெறுபேறுகளும் பெங்களூரின் அண்மைக்கால பெறுபேறுகளும் அப்படியே நேரெதிரானவை. இத்தனைக்கும் பெங்களூர் அணிக்காகச் செய்த செலவை விட டெல்லிக்காக செய்த செலவு மிக அதிகம்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணித்தலைவர் ஹோக்லி டெல்லியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். டெல்லியை சுருட்டிவிடத்திட்டம். களத்தில் அகர்வாலுடன் ஐயர். பெங்களூரின் வியூகங்களுக்கு ஏற்ப ஆரம்பம் முதல் அடிபணியவே செய்தது டெல்லி. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஐயர் டக் ஆனார். டெல்லி 2-1. தலைமை இன்னிங்ஸ் சற்றுத் தாக்குப்பிடிக்க முயற்சித்த போதிலும் இயலாமல் போக பதின்மத்துடன் பவிலியன் திரும்பி னார் டுமினி. பதினாறுகோடியை கொட்டிக்கொடுத்து வாங்கப்பட்ட யுவராஜ் 16 பந்துகள்கூட தாக்குப்பிடிக்கவில்லை. இலங்கையின் அணித்தலைவர் தனது அனுபவ இன்னிங்ஸால் டெல்லியை கரை சேர்ப்பார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தால் எந்தவித ஓட்டத்தையும் அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மறுமுனையில் போராடிக்கொண்டிருந்த அகர்வால் 27 ஓட்டங்களுடன் ஓட்டம் பிடிக்க டெல்லி 67-5. நூறு ஓட்டங்களை எட்டுவதும் எட்டாத் தூரம் என்ற நிலையில் டெல்லியிருந்த பொழுது களத்தில் யாதேவ். அகர்வாலைப்போல் யாதேவ் ஒருமுனையில் நிலைத்திருந்தாலும் மறுமுனையில் தனிநபராக 5 ஓட்டங்களை எடுப்பதற்கே அத்தனைபேரும் கல்லில் நாருரித்தனர். கட்டர்நீல் 4 ஓட்டங்கள், மிர்ஷஜு 2 ஓட்டங்கள், நடீம் 2 ஓட்டங்கள் முதுஸ்வாமி ஒரு ஓட்டத்தோடும் பின்வரிசையின் தலைவிதியைத் தீர்மானிக்க டெல்லி 18.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

கெயில், ஹோக்லி, வில்லியர்ஸ், டினேஸ் கார்த்திக், மன்டீப், கான் என்று வரசையாக வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் இந்தப்படைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 120 பந்துகளில் வெறும் 96 ஓட்டங்கள் மட்டுமே. இந்த இலக்கைஎட்டுவதற்கு பெங்களூருக்கு 10 பந்துப் பரிமாற்றங்கள் போதும். களத்தில் கெயிலுடன் ஹோக்லி. முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே அதிரடியைத் தொடங்கிவிட்டார் கெயில். இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் அதிரடி இரட்டிப்பானது. ஒரு சிக்சரும் இரண்டு பவுண்டரிகளும் கெயிலின் துடுப்பில் இருந்து பாய்ந்தன. ஒருமுனையில் கெயில் 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் மறுமுனையில் ஹோக்லி வெறும் ஒரு ஓட்டத்தையே பெற்றிருந்தார். ஆட்டத்தின் போக்கு அப்படியே மாறாமல் தொடரப்பட பெங்களூர் 6ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 50 ஓட்டத்தை எட்டியது. அணி ஐம்பது ஓட்டத்தை எட்டிய அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே ஹோக்லி தனது வேட்டையை ஆரம்பித்தர். தொடர்ச்சியாக மூன்று பவுண்டரிகள் ஹோக்லியின் துடுப்பில் இருந்து உருண்டோடின. சிக்சருடன் அரைச்சதத்தை எட்டினார் கெயில். ஹோக்லியும் அதிரடியைக் கைவிடவில்லை. முடிவில் 57 பந்துகள் மீதமிருக்க 10 இலக்குகளால் டெல்லியை வெற்றி கொண்டு ஆட்டத்தை 50 நிமிடம் முன்னதாக முடித்துவைத்தது பெங்களூர். (ரி)



## ஹோக்லி எதிர்கால அணித்தலைவர் அல்ல?



இந்திய டெஸ்ட் அணித்தலைவர் விராட் ஹோக்லியின் அணுகுமுறை குறித்து கண்காணித்து வருகிறோம் என்று பி.சி.சி.ஐ. தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

விராட் ஹோக்லி அடிப்படையில் மிகவும் உணர்ச்சி வசப்படகூடியவர். மைதானத்தில் எப்போதும் உணர்ச்சி மிக்கவராக இருப்பார். இதனாலேயே அவர் அடிக்கடி ஏதாவது ஒரு சர்ச்சையில் சிக்கி கொள்வார். இந்த நிலையில் இது போன்ற அவரது நடத்தைகள் கவனிக்கப்பட்டு வருவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

ஹோக்லியின் நடவடிக்கை குறித்து டால்மியா தெரிவித்ததாவது- ஹோக்லியின் நடவடிக்கை குறித்து ஆய்வு செய்யவேண்டும். அதை திருத்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சிவ சப்படுதல் அனைத்து நேரங்களிலும் சரியாக இருக்கும் என்றில்லை. இந்த ஒன்றில்தான் டோனியில் இருந்து ஹோக்லி மாறுபடுகின்றார். தலைமைத்து வம் தொடர்பாக ஹோக்லி இன்னும் அதிகமாக டோனியைப் பின்தொடர வேண்டும். தான் அறிமுக வீரர் அல்லமாறாக அனுபவ வீரர் என்பதனை அவரே புரிந்துகொள்ள வேண்டும். ஹோக்லி இவ்வாறு தொடர்ந்து செயல்பட்டு வரும் பட்சத்தில் தலைமைப் பதவியை அவரிடம் ஒப்படைக்க நாம் சற்று பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். மற்றும்படி ஹோக்லி அசாத்தியத் திறமையுள்ள வீரர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை என்றார். அண்மையில் ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் வாக் இதே கருத்தை வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ரி)

## பங்களாதேஷிடம் இருந்து பழகுங்கள்

பாகிஸ்தான் அணி, பங்களாதேஷிடம் ஒருநாள் தொடரைத் தொடர்ந்து, ரி-20 தொடரிலும் தோல்வியடைந்ததால் பாகிஸ்தானுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.



பாகிஸ்தான் அணி அடுத்தடுத்த தோல்விகளால் 3-0 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை பங்களாதேஷிடம் பறிகொடுத்தது. இது ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற ரி-20 ஆட்டத்திலாவது பாகிஸ்தான் அணி வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதிலும் தோல்வியடைந்ததால் அந்த அணி மீது விமர்சனங்கள் குவிந்து வருகின்றன. ஏற்கனவே பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இம்ரான்கான், பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் கிரிக்கெட் அறிவே இல்லாத அதிகாரிகள் இருப்பதாகவும், திறமைக்கு மதிப்பு கொடுப்பது இல்லை எனவும் குற்றஞ் சாட்டியிருந்தார். இந்த நிலையில் ரி-20 ஆட்டங்களின் அணித்தலைவர் அப்ரிடி, பங்களாதேஷிடம் இருந்து பாகிஸ்தான் அணி வீரர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ரி)

**தேவை**

புத்தகம் பைண்டிங் வேலைக்கு ஆள் (பெண்) தேவை.( வலி தெற்குப் பிரதேச சபைக்கு உட் பட்டவர்கள்)

தொடர்பு:- 077 3104899

**வேலை வாய்ப்பு**

V.R Advertising கம்பனியில் வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L, A/L தகைமை உள்ள ஆண், பெண் இருபாலாரும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

Point pedro Road, Nelliady. தொடர்புகளுக்கு: 077 676 3334 075 636 5636

உதயன் advt@uthayan.com 0215671111

**MICRO PC SYSTEMS**

பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணக் கிளை

- விற்பனைப் பிரதிநிதி: ஆண் / பெண் இரண்டுவருட அனுபவம்

கிளிநொச்சிக் கிளை

- உதவி முகாமையாளர் ஆண் / பெண்
- விற்பனைப் பிரதிநிதி இரண்டுவருட அனுபவம்

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தொடர்பு:

MICRO PC SYSTEMS

218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 5893

Mail: mail@micropcsystems.com (45.3) (சி.15659)

# தலைக்கவச தடைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப்.27

முகத்தை முற்றாக மறைக்கும் தலைக்கவசம்அணிவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக கண்டியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சங்கம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. கன்னொருவை வீதியூடாக கண்டி நகரம் வரை பேரணியாகச் சென்றவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முகத்தைமுற்றாகமறைக்கும்தலைக்கவசம் அணிவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# வெள்ளவத்தையில் விபசார விடுதி சுற்றிவளைப்பு

கொழும்பு, வெள்ளவத்தை நகரில் 'மசாஜ் கிளப்' என்ற பெயரில் இயங்கிய விபச்சார விடுதி ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் 4,பேரை கைது செய்துள்ளனர்.

வெள்ளவத்தை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த முற்றுகையை மேற்கொண்டதுடன், மூன்று பெண்கள் மற்றும் நிலையத்தின் முகாமையாளர் எனக் கூறப்படும் நபரையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்கள் 21 மற்றும் 31 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகாமையாளர் உட்பட சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை

*சுகாதார அமைச்சு தெரிவிப்பு*

வைத்தியசாலைகள் உட்பட அரசின் சுகாதார நிறுவனங்களில் தற்போது 29 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆயினும் அதை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்கப்படக் கூடும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 79 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவியிருந்த போதிலும் மார்ச் மாதமளவில், அதை 49 வரையில் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதேச ரீதியிலான அவசரக் கொள்வனவுகளின்போது மருந்துகளை விநியோகிப்போர் தேவைப்படும் தொகையை ஒரே தடவையில் விநியோகிக்க முடியாத சந்தர்ப்பங்கள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கும் சாத்தியம் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள சுகாதார அமைச்சு, மூன்று மாத காலத்துக்கு முன்னரே அந்தத் தட்டுப்பாட்டை இனங்கண்டு எதிர்காலத்தில் அது தொடர்பாக செயற்படுவதற்கு மருத்துவ விநியோகங்கள் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-22)

# இலங்கை அரச பொது ஊழியர் சங்க மே தினக் கூட்டம் கல்முனையில்

## கிழக்கு சுகாதார அமைச்சர் பிரதம அதிதி

அம்பாறை, ஏப்.27

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் மேதினக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை கல்முனை மாநகரில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் தமது இணை நிறுவனங்களான வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம், வடகிழக்கு மாகாண அரச பொது ஊழியர் சங்கம், அகில இலங்கை மக்கள் ஜனநாயகக்கட்சி, சிறிலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம் என்பவற்றுடன் இணைந்து இந்த மேதினக் கூட்டத்தை நடத்தவுள்ளன.

சங்கத்தால் 21 வருடங்களாக நடத்தப்படும் இந்த மேதினக் கூட்டம் பொதுஊழியர் சங்கத்தலைவரும், தொழிற்சங்க வாதியுமான எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெறும்.

கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற விருக்கும் இந்த மேதினக் கூட்டத்தில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் பேராசிரியர் எம்.இராஜேஸ்வரன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

அத்துடன் பிரபல இலக்கியப் புரவலரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சட்டத்தரணி ஏ.எம்.பதுலுதீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேதினக் கூட்டத்தின் விசேட அம்சமாக அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற சங்க உறுப்பினர்களான எஸ்.கேதீஸ்வரன், யூ.எல்.எம். அலியார், கே.விக்கினேஸ்வரன் ஆகிய மூன்று தொழிலாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

"நல்லாட்சியில் தொழிலாளர் உரிமைகள், நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்" எனும் முதன்மைத் தொனிப் பொருளில் இடம்பெறவிருக்கும் இந்த மேதினக் கூட்டத்தில், இனப்பிரச்சினைக்கு, நிரந்தரத் தீர்வைத் துரிதப்படுத்தி வழங்குமாறு அரசைக் கோரும் தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் மேதினத் தீர்மானங்களாக முன்வைக்கப்படவுள்ளன.

அதேவேளை அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்கள் உட்பட வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் வருகை தரும் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க இணைப்பாளர்கள், அமைப்பாளர்கள், முக்கிய உறுப்பினர்கள் இந்த மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.எம். ஏ.வகாப் தெரிவித்தார்.

கூட்டத்தின் இறுதியில் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் 21 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும், சங்க இணை நிறுவனமான வடகிழக்கு மாகாண ஜீவோதயநலன்புரி நிறுவனத்தின் 18 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-30)

# ஜூன் மாதத்தில் தேர்தல் உறுதி

*கட்சியினருக்கு ரணில் அறிவித்துள்ளாராம்*

கொழும்பு, ஏப்.27

பொதுத்தேர்தல் ஜூன் மாதம் இடம் பெறுவது உறுதி என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஐக்கியதேசியகட்சிக்கு அறிவித்துள்ளார் என்று சிங்கள மொழி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளை ஒன்றிணைத்து உறுதியாக முகம் கொடுப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்து வருகின்றதென சிரேஷ்ட உப தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி யானைச்சின்னத்தில் போட்டியிடுவதுடன் சிறுபான்மை கட்சிகள் மற்றும் ஏனைய் குழுக்களை ஒன்றிணைத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் என்றும் அந்த ஊடகம் கூறியுள்ளது.

அதேவேளை கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்ட சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் ஏனைய குழுக்கள் இம்முறை ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவு வழங்கவுள்ளன என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார் என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# மத்திய வங்கி ஆளுநரை பதவி விலக்குமாறு மனு

கொழும்பு, ஏப். 26

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரனை பதவி விலக்குமாறு கோரி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மனு, சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகநாடாளுமன்றஉறுப்பினர்பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திறைசேரியில் இடம் பெற்றதாக கூறப்படும் பிணை முறி மோசடி தொடர்பில் நிதியமைச்சின் செயலாளரும் மத்திய வங்கியின் ஆளுநருமான அர்ஜுன் மஹேந்திரனுக்கு நேரடியான தொடர்பேதும் இல்லை என்று மோசடி தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூத்த பொருளாதார நிபுணரான அர்ஜுன் மஹேந்திரன், இவ்விரு பதவிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டார்.

நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளராகப் பதவி வகித்த கலாநிதி பி.பீ ஜயசுந்தர, மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்த அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் அப்பதவிகளிலிருந்து விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கே இவர், நியமிக்கப்பட்டார்.

சட்டவிரோதமான முறையில் திறைசேரி பிணை.முறி பத்திரங்களை அர்ஜுன் மஹேந்திரன் வழங்கியுள்ளதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (த)

# ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த சட்டம்

## பிரதி நீதி அமைச்சர் சுஜீவ் சேனசிங்க கூறுகின்றார்




கொழும்பு, ஏப்.27

ஆர்ப்பாட்டம், பேரணிகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட வேண்டுமென பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். அமைதியான முறையிலான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் சில பகுதிகளில் நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

போராட்டங்களை நடத்துவோரின் உரிமைகளையும் பொதுமக்களின் உரிமைகளையும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் போராட்டங்களை நடத்தும் போதே பிரச்சினைகள் எழுகின்றன.- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில போராட்டங்களால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேறு நாடுகளைப் போன்று போராட்டங்களை நடத்துவதற்கு சில பகுதிகளில் இடமளிக்கப்பட வேண்டும் எனவும் சில பகுதிகளில் நடத்த அனுமதிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உதாரணமாக ஆஸ்திரேலியாவின் சில இடங்களில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார். தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இவ்வாறான சட்டங்கள் அவசியமானவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# கடந்த அரசின் படுகொலைகள் குறித்து நடவடிக்கை தேவை

## உபுல் ஜயசூரிய வலியுறுத்துகின்றார்

கொழும்பு, ஏப். 27

கடந்த அரசின் படுகொலைகள் தொடர்பில் தற்போதைய அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் உபுல் ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் படுகொலை செய்யப்பட்ட 68 பேர் தொடர்பில் உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டும். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த போது 35 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த சம்பவங்கள் தொடர்பில் உடனடி விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். 33 பேர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர் எனவும் இதில் சில கொலைகள் தனிப்பட்ட தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலைச் சம்பவங்கள் தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதனை தற்போதைய அரசு விசாரணை செய்வது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை குறித்த சம்பவங்கள் தொடர்பாக அறிக்கை வழங்கிய போதிலும் தற்போதை அரசு இது தொடர்பாக நடவடிக்கையை எடுக் காமல் இருப்பது சந்தேகத்திற்குரிய ஒரு விடயமாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் – என்றுள்ளது. (ற)

# போதை தடுப்பு காரியாலயத்தை இலங்கையில் நிறுவ இணக்கம்

கொழும்பு, ஏப். 26

சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் பரிமாற் றங்களை தடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றவியல் பேரவையின் பிரதான தடுப்புக் காரியாலயத்தை இலங்கையில் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதான காரியாலயத்தை இலங்கையில் நிறுவுமாறு நீதியமைச்சர் விடுத்த கோரிக்கையை ஐ.நா., கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டுள்ளது என்று நீதியமைச்சு அறிவித்துள்ளது.

பிரதான காரியாலயத்தை இலங்கையில் நிறுவுதல் தொடர்பில் ஆராய்வதற்காக ஐ.நா. பணிப்பாளர் யூரி பொடேடோ, இலங்கைக்கு வருகைதந்துள்ளார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான தடுப்புக் காரியாலத்தை இலங்கையில் நிறுவுவதன் ஊடாக இலங்கைக்குள் போதைப்பொருள்களைத் தடுப்பதற்கான இணைந்த விரிவான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கமுடியும் என்று நீதியமைச்சு அறிவித்துள்ளது.

அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை, இலங்கை பொலிஸ் மற்றும் முப்படைகளுடன் இணைந்து இந்த நிறுவனம் செயற்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.(த)

# தமிழரின் வயல்கள் மூதூரில் கபளீகரம்

## திருகோணமலை நகர சபை உறுப்பினர் நந்தகுமார் குற்றச்சாட்டு

மூதூர்,ஏப். 27

மூதூர் – கங்குவேலியில் உள்ள படுகாட்டில் வயல் நிலங்களுக்கான உறுதி, ஆவணங்கள் தமிழர்களிடம் இருந்தபோதும் எவ்வித உறுதிகளோ, காணி உத்தரவுப் பத்திரமோ இல்லாத பெரும்பான்மையின மக்கள் இவ்வயல் நிலங்களில் அத்துமீறி விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

சில தினங்களுக்கு முன்னர் ஈழத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க அகத்தியர் தாபன சிவன் கோயிலுக்குச் சொந்தமான 20 ஏக்கர் வயல் நிலத்தையும்அபகரித்து விவசாயம்செய்ய சிலர் முயற்சித்து வருகின்றனர்.

*“சில தினங்களுக்கு முன்னர் ஈழத்தின் வர லாற்றுச் சிறப்புமிக்க அகத்தியர் தாபன சிவன் கோயிலுக்குச் சொந்த மான 20 ஏக்கர் வயல் நிலத்தையும் அபகரித்து பெரும்பான்மையின மக்கள் சிலர் விவசாயம் செய்ய முயற்சித்து வருகின்றனர்.*

எனவே பெரும்பான்மையின மக்களின் நடவடிக்கையால் அச்சமுற்று வாழும் கங்குவேலி விவசாயிகள் படுகாட்டில் சுதந்திரமான முறையில் நெற் செய்கையில் ஈடுபடப் பொலிஸாரும், மூதூர் பிரதேச செயலாளரும் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் –என்றார்.(த–40)




*தபால் திணைக்களம் நாடு முழுவதும் தபால் சேவையை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. அதன் முதற்கட்ட செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்டன. (வ–40)*

## விவசாயத்தை ஊக்குவிக்க நல்லின விதைகள் வழங்கல்




கிளிநொச்சி, ஏப்.27

கிராமிய விவசாயத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவோம்’ என்ற நிசழ்ச்சித்திட்டத்தின் ஒருபகுதியாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் விவசாயிகளுக்கு விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் நாங்கள் செயற்பாட்டு வலையமைப்பால் நல்லின விதை இனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இடம்பெற்றது.

சண்டிலிப்பாய் பிரதேசத்திலுள்ள 100 பெண்தலைமைத்துவக்குடும்பங்கள்மற்றும்விவசாயிகளுக்கே இவ்வாறு விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் குறித்த அமைப்பால் ஆரம்ப கட்டமாக நல்லின விதை இனங்கள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் செயற்பாட்டாளர் செ.பிரதாப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்– கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டதுடன்சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரனும் கௌரவ விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் மற்றும் வலி.தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் மகேந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (வ–21)

## ஏறாவூரில் படைமுகாம் அருகில் மோட்டார் ஷெல் மீட்பு

மட்டக்களப்பு, ஏப்.27

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாதுறை படை முகாமுக்கு அருகிலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி படை முகாமுக்கு அருகிலுள்ள சித்தி விநாயகர் வித்தியாலய விளையாட்டுத் திடலைச் சூழவுள்ள முட்கம்பி வேலிப் பற்றைக்குள்ளேயே மோட்டார் ஷெல் காணப்பட்டுள்ளது.

மோட்டார் ஷெல் காணப்படுவதா... தங்களுக்குக் கிடைத்த தகவலின்படி உடனடியாக அந்த இடத்துக்குச் சென்று மோட்டார் குண்டை மீட்கும் பணியில் ஈடுபட்டதாக பொலிஸார் கூறினர்.

குண்டு செயலிழக்கச் செய்யும் படை அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு மோட்டார் ஷெல் மீட்கப்பட்டது. குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் மேற்படி மோட்டார் ஷெல்லை மீட்டு, பாதுகாப்பாக செயலிழக்கச்செய்வதற்காக அங்கிருந்து கும்புறுமூலை படை முகாமுக்கு எடுத்துச் சென்றனர். இது விடயமாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ)



*வவுனியா றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் 125 ஆண்டு நிறைவை முன்னிட்டு உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு வெள்ளியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (வ–421)*



## ஏறாவூரில் ஆடைத்தொழிற்சாலை கட்டட வேலைகள் நாளை ஆரம்பம்


மட்டக்களப்பு, ஏப்.27

ஏறாவூரில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றைஅமைக்ககிழக்குமாகாண சபை முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதலமைச்சரும், சீட் நிறுவனமும் இணைந்து ஹமீதியாஸ் நிறுவனம் பொறுப்பை எடுத்துள்ள இந்த ஆடைத் தொழிற்சாலைக்கான ஆரம்ப கட்ட வேலைகள் நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளன.

இதுதொடர்பாக இடம்பெற்ற சந்திப்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் மற்றும் சீட் அமைப்பின் அதிகாரிகளும், ஹமீதியாஸ் நிறுவன அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

குறித்த ஆடைத்தொழிற்சாலை அரசதுறை நிரந்தர வாழ்வாதாரத்திட்டம் என்பதுடன், இதன் மூலம் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி வாழ்வாதரத்தை அதிகரிக்கும் முயற்சியாகவும் அமையவுள்ளது. (வ)



## துப்பாக்கி மீட்பு

அம்பாறை, ஏப்.27

கல்முனை – நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தின்மேற் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ 56 ரக துப்பாக்கி ஒன்றும் சில ரவைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான கூட கட்டட மேற்கூரையை திருத்துவதற்கு நேற்று முன்தினம் காலை கூரைகளைபிரித்தபோதேமறைத்து வைக்கப்பட்ட நிலையில் துப்பாக்கி ஒன்று காணப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பாடசாலை அதிபர் கல்முனை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார். அதனையடுத்து அங்குசென்ற பொலிஸார் துப்பாக்கியையும் சில ரவைகளையும் மீட்டெடுத்துள்ளனர். சம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிண்ணங்களை வழித்துத்துடைத்தது

# தெல்லிப்பழை யூனியன்

மாங்குளம் ஏப். 27

யாழ்.மாவட்டப் பாடசாலைகளிற்கிடையிலான எறிபந்தாட்டத் தொடரில் இருபால் பிரிவுகளிலும் தமது அனல் பறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தை ருசித்துக் கொண்டது தெல்லிப்பழை யூனியன்.

நேற்று முன்தினம் புத்தூர் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டங்களில் 19வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. இதன் இறுதியாட்டம் மிக விறு விறுப்பாக நடைபெறும் என எதிர்பார்த்த போதும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியின் எறிகள் நெல்லியடி மத்திய கல்லூரி அணியின் கைகளைப் பதம் பார்க்க நேர் இரு செற்களிலும் 25:10, 25:08 என்று வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி பெற்றது.

19வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன்கல்லூரிஅணியை எதிர்த்து இளவாலை கன்னியர் மட அணி மோதியது. இதிலும் தமது ஆட்டத்தில் பலத்தை நிருபித்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி நேர்இரண்டு செற்களிலும் 25:18, 25:16 என மிக இலகுவாக வெற்றி பெற்றனர். 3ஆம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.





வடமாகாணத்தில் மாவட்ட மட்ட எறிபந்தாட்டத் தொடர்களில் ஒரே பாடசாலையைச் சேர்ந்த ஆண், பெண் இரு அணிகளும் ஒருதடவையில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தமை இதுவே முதல்தடவையாகும்.(ரி–422)

## யங் ஹென்றிஸ் எதிர் சென்.லூட்ஸ்

# இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 27

அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியும் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் அராலி சில்வேஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 7:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதி யாட்டத்திற்கு தகுதிபெற்றது. (ரி–23)

## கொலின்ஸ், டைமன்ஸ் அடுத்தசுற்றுக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 27

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ்; விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றிதோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி–23)

## கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி

யாழ்ப்பாணம், ஏப். 27

கைதடி நவபுரம் நவசனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நவசக்தி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நவசக்தி விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. சிறந்த வீரருக்கான விருதை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி வீரான் சொரூபன் பெற்றுக் கொண்டார்.



(ரி–288–23)

## விண்மீன் எதிர் வல்வை

# கிண்ணத்தை எதிர்கொள்ளுகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் தனது 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட் டங்கள் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியும் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக்கழக அணியும் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்; கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

(ரி–23)

# யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட தொடரின் முடிவுகள்

மாங்குளம், ஏப். 27

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் 15, 17, 19வயதுப் பிரிவினருக்கான தொடர்களின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

*15வயதுப்பிரிவு*

15வயதுப்பிரிவில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா மகா வித்தியாலயத்தை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா மகா வித்தியாலயம் 2:1 என்ற செற்களின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. 3ஆம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி பெற்றுக் கொண்டது.

பெண்களிற்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென்.தோமஸ் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி மோதியது. சென்.தோமஸ் மகளிர் கல்லூரி அணி 2:0 என்ற செற்களின் அடிப்படையில் வெற்றிபெற்றது. 3ஆம் இடத்தை இளவாலை கன்னியர் மடம் தனதாக்கியது.

*17வயதுப் பிரிவு*

17வயதுப்பிரிவில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா மகா வித்தியாலயம் மோதியது. இந்த ஆட்டத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி 2:1 என்ற செற்களில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. 3ஆம் இடத்தை அச்சுவேலி மத்திய கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

பெண்களிற்கான இறுதியாட்டத்தில் வசாவிளான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் வசாவிளான் மகா வித்தியாலம் 2:0 என்றசெற்களின்அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 3ஆம் இடத்தை கோப்பாய் மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.



*19வயதுப் பிரிவு*

19வயதுப் பிரிவில் ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா அணி மோதியது. இதில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியினர் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றனர். 3ஆம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

பெண்களிற்கான இறுதியாட்டத்தில் வசாவிளான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி அணி மோதியது. இதில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. 3ஆம் இடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

(ரி–422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 27

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும்; உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.00 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(ரி–23)




# தீவுகளை திரிலாக வீழ்த்தியது இங்கிலாந்து



சமநிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த ஆட்டத்தை சகல துறை அசத்தலினால் தமக்குச் சாதகமாக மாற்றியமைத்து தீவுகளை இலகுவாக வெற்றி கொண்டது இங்கிலாந்து.

தீவுகள் எதிர் இங்கிலாந்துக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் இங்கிலாந்தின் வெற்றியுடன் நிறைவுக்கு வந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தீர்மானிக்க தீவுகள் முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 299 ஓட்டங்களைமட்டுமே பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 464 ஓட்டங்களைக் குவித்து 165 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 166 ஓட்டங்களைக் கட்டாயம் பெறவேண்டும் என்ற நிலைமையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய தீவுகளுக்கு பிரீத்வைட்டின் அபார சதமும் பிராவோவின் அரைச்சதமும் கைகொடுக்க தீவுகள் ஒரு கட்டத்தில் 224-3 என்ற கௌரவ நிலையில் இருந்தது. இந்த நிலைமை நீடிக்கும் பட்சத்தில் ஆட்டம் சமநிலையிலேயே முடிவடையும் என்று பலரும் எதிர்பார்த்திருந்த வேளையில் தீவுகளின் திண்டாட்டம் ஆரம்பமானது. வதை மன்னன் சந்திரப்போல் 7 ஓட்டங்களுடன் ஆட்டத்தை முடித்துக் கொண்டார். ரம்டின் இடையே நிதானித்தாலும் எவரும் கைகொடுக்கத் தயாராக இல்லை. பதின்மத்தை தாண்டவே படாத பாடுபட்டனர். இறுதி இரண்டு இலக்குகளும் ஒரே ஓட்டத்தில் அடுத்தடுத்து சரிய தீவுகள் 307 ஓட்டங்களில் சுருண்டது.

முதலாவது இன்னிங்ஸில் 165 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற காரணத்தினால் 143 ஓட்டங்களைப் பெற்றால் இங்கிலாந்து வெற்றி பெற்று விடலாம். அதிலும் ஆட்டத்தின் ஐந்தாவது நாள் முடிவடைய 60 பந்துப்பரிமாற்றங்கள் மீதமுள்ளது என்ற காரணத்தினால் இங்கிலாந்துக்கான வெற்றி வாய்ப்புக்கள் மிகமிக அதிகம். எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக ரூரொட்டக்கில் வெளியேறினார். இங்கிலாந்து 2-1. இரண்டாவது இலக்குக்காக குக்குடன் இணைந்தார் பலன்ஸ். இருவரும் அற்புதமாக நிதானித்தார்கள். மேலதிக இலக்குகள் சரிக்கப்படாமல் கச்சிதமாக அணியை வழிநடத்தினார்கள். ஆளுக்கொரு அரைச்சதமும் கண்டார்கள். இருவருமாக இணைந்து இணைப்பாட்டமாக இறுதிவரை ஆட்டமிழக்காது 142 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றிக்கு வித்திட்டனர். ஆட்டநாயகனாக முதல் இன்னிங்ஸில் 182 ஓட்டங்களை விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்த ரூட் தெரிவானார். (ரி)

# இந்திய அணியே இலக்கு



கடந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணி இறுதியாட்டம் வரை முன்னேறியது. இந்தத் தொடரில் பஞ்சாப் அணியின் இளம் சுழற்பந்துவீச்சாளர் அக்சர் பட்டேல், 17 இலக்குகளை வீழ்த்தினார். இதனால் இந்திய அணியில் இடம் பிடித்த இவர் சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் மற்றும் உலகக்கிண்ணத் தொடருக்கு தெரிவானார். ஆனால் திறன் வீழ்ச்சி காரணமாக உலகக்கிண்ண தொடரில் ஒரு ஆட்டத்தில் கூட விளையாடும் வாய்ப்பு கிடைக் கவில்லை. இதனையடுத்து மீண்டும் இந்திய அணியில் இடம்பிடிக்க ஆவலாக உள்ளதாக அக்சர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அக்சர் பட்டேல் தெரிவித்ததாவது ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரில் எனது செயற்பாடு திருப்தி யளிக்கவில்லை. இதனையே டோனியும் தெரிவித்தார். குறித்த நாட்கள் அவகாசமும் தந்தார். ஆனால் அதற்குள் மீண்டும் என்னை என்னால் நிரூபிக்க முடியவில்லை. இதனையடுத்து என்னை அணியில் இருந்து நீக்கி னார். டோனியின் முடிவு சரியானதே. ஆனால் நான் மீண்டும் அணியில் இணைய வேண்டும் என்று விரும்புகின்றேன். தேசிய அணியே எனது இலக்கு சிறந்த சகலதுறை வீரராக மீண்டும் அணியில் இணை வேன் என்றார். (ரி)

# சங்கா, மஹேலவின் இடத்தை நிரப்புவது இப்போதைக்கு இயலாது



இலங்கை அணியில் சங்கக்காரா, ஜெயவர்த்தனே விட்டுச் சென்ற வெற்றிடத்தை நிரப்புவது கடினம் என்று இலங்கை அணியின் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் அனுபவ மற்றும் நட்சத்திர ஆட்டக்காரர்களாக விளங்கிய சங்ககார, ஜெய வர்த்தனே இந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரோடு சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றனர். இந்த நிலையில் இலங்கை அணியில் இவர்களின் இழப்பை ஈடு செய்ய நீண்ட காலம் எடுக்கும் என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக விளையாடி வரும் மத்தியூஸிடம் இலங்கை அணியின் தலைமைத்துவ அனுபவம் தொடர் பாக கேட்டபொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது சங்கக்காரா மற்றும் ஜெயவர்த் தனே ஓய்வு பெற்றதால் இலங்கை அணியில் மிகப்பெரிய வெற்றிடம் உருவாகிவிட்டது. அந்த வெற்றி டத்தை நிரப்ப சிறிது காலம் தேவைப்படும். அணித் தலைவராக இந்த நிலைமையை சமாளிப் பது சற்று கடினமானது. இருப்பினும் எங்களிடம் திறமையான இளம் வீரர்கள் உள்ளனர். அடுத்த உலகக் கிண்ணத்திற்கு இன்னும் 4 ஆண்டு கால அவகாசம் உள்ளது. அதற்குள் இலங்கை அணி நல்ல ஒரு நிலைமையை அடையும் என்று நம்புகிறேன் என்றார். (ரி)


# அச்சுறுத்தலில் அசத்தி விட்டார் மலிங்க - ரோகித்



ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அசத்திய வேகப் பந்து வீச்சாளர் மலிங்காவுக்கு மும்பை அணித்தலைவர் ரோகித் சர்மா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் மலிங்க வேகத்தில் மிரட்டி 4 இலக்குகள் வீழ்த்திமும்பைஅணியின் வெற்றிக்கு உதவினார். இந்த வெற்றி குறித்து சர்மா தெரிவிக்கையில் மேஜிக் செய்து விட்டார் மலிங்கா. அவர் ஒரு அனுபவ பந்துவீச்சாளர். தனது திறமையை பல ஆண்டுகளாக இலங்கை அணியிலும், மும்பை அணியிலும் காட்டி வருகிறார். அவரிடம் அதிகமாக எதிர்பார்த் தேன். மிக சாதாரணமாக செய்து முடித்து விட்டார். யோர்க்கர் பந்தால் எதிரணியை மிரட்டி விட்டார். அவர் மீது விமர்சனங்கள் எழும் போது நான் அவரில் அதிகமாக நம்பிக்கை வைத்திருந்தேன். அதற்கு ஏற்றவாறு அசத்தி விட்டார் என்றார். (ரி)

# பந்து வீச்சாளர்களுக்கு டோனி பாராட்டு



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் அணியை சென்னை சூப்பர் கிங்ஸ் மிக இலகுவாக வீழ்த்தி 97 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவுசெய்தது.

இதனை அடுத்து சென்னை பந்து வீச்சாளர்களைப் பற்றி புகழ்ந்து தள்ளியுள்ளார் டோனி. டோனி தெரிவித்ததாவது பந்து வீச்சாளர்கள் செயற்பாடு சிறப்பாக இருந்தது. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர்கள் பணி நன்றாக இருந்தது. ஆசிஷ் நெக்ரா அற்புதமான வீரர். அவர் அனுபவம் மிக்கவர். பந்தை சுவிங் செய்ய முடியாவிட்டாலும் கூட சரியான திசையில் வீசி இலக்குகளைக் கைப்பற்றுவார். தொடக்க வீரர்கள் இருவரும் பயம் இல்லாமல் விளையாடுகிறார்கள். அதே நேரத்தில் கணித்தும் விளையாடுகிறார்கள். இதனால் தான் மற்ற அணிகளின் தொடக்கவீரர்களை விட எங்களது தொடக்கம் நன்றாக இருக்கிறது என்றார். (ரி)




# மகரோவாவுக்கு அதிர்ச்சியளித்து அரையிறுதியில் கெர்பர்

ஜேர்மன் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜேர்மனியின் ஏஞ்ஜெலிக் கெர்பர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் ஸ்டட்கர்ட் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் மரியா ஷரபோவாவுக்கு அதிர்ச்சியளித்த கெர்பர், தற்போது காலிறுதியில் 6–3, 6–2 என்ற நேர் செட்களில் தரவரிசையில் 6வது இடத்தில் இருந்த ரஷ்ய வீராங்கனை எக்டெரினா மகரோவாவுக்கு அதிர்ச்சி தோல்வியளித்துள்ளார்.

காலிறுதி வெற்றி குறித்துப் பேசிய கெர்பர், பேசுவதற்குவார்த்தைகள்வரவில்லை. அரையிறுதிக்கு முன்னேறியிருப்பது வியப்பாக இருக்கிறது. ரென்னிஸ் மீதான எனது ரசிப்பும், வெறியும் மீண்டும் எனக்குள் ஏற்பட்டுள்ளது. நான் எளிதாக அரையிறுதிக்கு முன்னேறவில்லை. நடப்புச் சம்பியன் அந்தஸ்தில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் நிலைத்திருந்த ஐஷரபோவா, நட்சத்திர வீராங்கனையான மகரோவா போன்ற வீரர்களை வீழ்த்தியே இதனைச்சாதித்தேன் என்றார். (ரி)

# மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது



நடப்பு ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா எதிர் ராஜஸ்தான் அணிகளுக்கிடையிலான லீக் ஆட்டம் அதிகரித்தமழை காரணமாகக் கைவிடப்பட்டது. ஆட்டம் கைவிடப்பட்டதனால் இரண்டு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வீதம் கொடுக்கப்பட்டது. (ரி)

# சோமாலியாவில் பிறந்திருந்தால்

தென்னாபிரிக்க முன்னாள் வீரரும் உலகின் சிறந்த களத்தடுப்பாளருமான ஜான்ட்டி ரோட்ஸ்–மெலானி தம்பதியருக்கு பிறந்த பெண் குழந்தைக்கு இந்தியா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மும்பை இந்தியன்ஸ் பீல்டிங் பயிற்சியாளராக இருந்து வரும் ஜாண்டி ரோட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலானிக்கு கடந்த வியாழக்கிழமை பெண் குழந்தை பிறந்தது. இந்தப் பெண் குழந்தைக்கு இந்தியா என்று பெயர் சூட்டியுள்ளனர். இந்தியாவில் குழந்தை பிறந்த காரணத்தினால் குழந்தைக்கு இந்தியா என்று பெயர் சூட்டியதாக ரோட்ஸ் தெரிவித்தார். (ரி)

# கேஷ்ரி குடும்பத்துக்கு கங்குலி நிதியுதவி

பிடியெடுப்புக்காகச் சென்று சக வீரருடன் ஏற்பட்ட மோதலில் மரணமடைந்த கிரிக்கெட் வீரர் அங்கிட் கேஷ்ரி குடும்பத்துக்கு தனது பி.சி.சி.ஐ. ஓய்வூதியத் தொகையை அளித்து உதவிபுரிய கங்குலி முடிவெடுத்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற உள்ளூர் ஆட்டமொன்றில் பிடியெடுப்புக்காகச் சென்றபோது மற்றொரு வீரருடன் பயங்கரமாக மோதிக் கொண்டதில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி மாரடைப்பில் மரணமடைந்தார் கேஷ்ரி. இந்த நிலையில் தனது ஓராண்டு ஓய்வூதியத்தொகையை அங்கிட் கேஷ்ரி குடும்பத்துக்கு கொடுத்து உதவ கங்குலி முடிவெடுத்துள்ளார். இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) முன்னாள் டெஸ்ட் வீரர்களுக்கு ஆண்டுக்கு 4 இலட்சத்து இருபது ஆயிரம் ரூபாய் (இந்திய மதிப்பில்) ஓய்வூதியத் தொகை கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி)



# பல்கலைக்கழக பட்டப்படிப்பில் ரொனால்டோவின் வாழ்க்கை

கனடாவை சேர்ந்த பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் சமூகவியல் படிக்கும் மாணவர்களுக்கு போர்த்துக்கல் கால்பந்து வீரர் ரொனால்டோவை பற்றிய படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

போர்த்துக்கல் மற்றும் ரியல் மாட்ரிட் அணியில் அசத்தும் நட்சத்திர வீரர் ரொனால்டோ, உலகத்திலேயே கால்பந்து மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரராக உள்ளார். இப்படி கால்பந்து களத்தில் கலக்கும் இவர் பள்ளியில் அடாவடித் தனத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் பற்றிய பாடப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 14ஆவது வயதுவரை பள்ளிக்குச் சென்ற ரொனால்டோ பள்ளிக்கு வராமல் நின்ற பொழுது கண்டித்த ஆசிரியரை நோக்கி கதிரையைத் துக்கி வீசவும் செய்திருக்கிறார். இந்நிலையில் தற்போது இவர் மாணவர்களுக்கு பாடமாகியுள்ளார்.

ரொனால்டோவின் கால்பந்து திறமை, உலகம் முழுக்க அவருக்குள்ள பிரபல்யம், அவரது வருமானம், வருமானம் வரும் வழிமுறைகள், விளம்பரங்கள், தாய்நாடு மீதான அவரது பற்று, சொந்த ஊரில் அவருக்குள்ள மரியாதை, சொந்த நாட்டில் அவருக்கு அமைக்கப்பட்டுள்ள சிலை, ரொனால்டோவின் ரசிகர்கள், ரொனால்டோவிற்காக அமைக்கப்பட்டுள்ள நூதனசாலை என்பன குறித்து அந்த பாடத்தில் இடம்பெற்றுள்ளதாக கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர் லூயிஸ் தெரிவித்துள்ளார். (ரி)


B.com PA[illegible] -1, PART- II, FINAL
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)
விரிவுரைகள் ஆரம்பம்: 02.05.2015
காலை 8 மணி
புதிய உயர் கல்லூரி, (சி/15655) (4.3.7)
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af






வட்மாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)
வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள்
அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுறையும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 02.05.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள் மற்றும் Video DVD என்பன முழுவதும் இலவசம்.
SAAMSON
Expert in English Training
யாழ்நகர்.
021 320 3313
077 621 4567


# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை பாலசிங்கம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (25.04.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - கண்ணகப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாக ராஜா (பிரபா ஸ்ருடியோ)- செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், உஷாவின் அன்புக் கணவரும், யாழினி, யாமினி, நிறோ ஜன், பிரதாப், நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயா, தேவகஜன் ஆகியோரின் அன்பு மாமனும், தயானந்தின் அன்புப் பேரனும், யோகநாயகியின் அன்புச் சகோதரனும், லதா, சுதாகரன், பிரமிளா காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2015) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயான[illegible] எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற[illegible], நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன் ,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
(59232)(45.3.7)

தகவல்: குடும்பத்தினர்
011 3137074, 0775476143,
0773411536


எச். எ. மல்ரி ஸ்பொட்
H.A.Multi Spot
Office Automation Technical Services

11 வருடங்களுக்கு மேல் நிழற்பிரதி இயந்திர தொழில்நுட்பவியல் துறையில் மிகச் சிறந்த அனுபவம் வாய்ந்த எம்மால் தங்களுக்குத் தேவையான புத்தம் புதிய போட்டோப் பிரதி இயந்திரங்கள், மீளமைக்கப்பட்ட போட்டோப்பிரதி இயந்திரங்கள், அவற்றின் உதிரிப்பாகங்கள் Drum Toners திருத்தங்கள் சேவிஸ் செய்த மற்றும் அரச, தனியார் திணைக்களங்களுடனான ஒப்பந்த அடிப்படையில் போட்டோ பிரதி இயந்திர பராமரிப்பினை மேற்கொள்ளல், வாடகைக்கு போட்டோப் பிரதி இயந்திரங்களை வழங்குதல் போன்றவற்றை மிக மிகக் குறைந்த செலவில் தரமான சேவைகளை நியாயமான முறையில் வழங்கும் ஒரே நிறுவனம் .

நாம் அரச திணைக்களங்களுக்கான வழங்குநர் மற்றும் சேவைகளுக்கான அங்கீகாரம் பெற்றவர்கள்.

தொடர்புகளுக்கு: 077 361 1041
தொலைபேசி/ தொலைநகல்: 021 222 2844
இல. 316 K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (45.3) (59221)
CANON TOSHIBA SHARP KYOCERA TASKALFA BROTHER


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.